32 /26

# உதயன்

பக்கங்கள்

34

■ பதிப்பு: கொழும்பு ■ விலை: ரூபா 30

■ சுடர் 28 ■ கதிர் 121

■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 14 புதன் 27.03.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com


# கிரிக்கெட்டுக்குள்ளும் புகுந்தது ஈழ விவகாரம்


## இலங்கை வீரர்கள் தமிழகம் வரக்கூடாது மன்மோகன் சிங்குக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை, மார்ச் 27

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும் தமிழகத்தில் மூண்டெழுந்த எதிர்ப்புப் போராட்ட நடவடிக்கைகள் கிரிக்கெட்டுக்குள்ளும் புகுந்துள்ளன. இதன் ஓர் அங்கமாக சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கு பெறுவதற்காக இலங்கை வீரர்கள் எவரும் தமிழகத்துக்குள் வரவே கூடாது என்று தடாலடியாக அவசரக் கடிதம் ஒன்றை இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

இது வரை காலமும் இலங்கை அரசுக்கு எதிராகக் கொந்தளித்த தமிழகம் இப்போது கிரிக்கெட்டுக்குள்ளும் இலங்கை அரசின் தலையீடு இருக்கக்கூடாது என்று கூறும் அளவுக்கு அங்கு ஈழ ஆதரவு அலை மேலும் வலுப்பெற்றுள்ளது. பார்க்க பக்கம் 04





## ஜெனிவா தீர்மானத்தில் அரசியல் உள்நோக்கம்

**ரஷ்யா, சீனா, கியூபா காட்டம்**

இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

இவ்வாறான தீர்மானங்களின் மூலம் ஏனைய நாடுகள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ள சீனா, இந்தத் தீர்மானம் அரசியல் உள்நோக்கம் கொண்டது எனக் கூறியுள்ளது.

இந்தத் தீர்மானம் ஜெனிவா மனித உரிமைகள் சபையின் பணிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது என்றும், மனித உரிமைகள் தொடர்பான அதிகாரபூர்வமான பேச்சுக்களை பார்க்க பக்கம் 04

## ஒப்பந்தத்தை இடைநிறுத்தியது பி.பி.சி

கொழும்பு, மார்ச் 27

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் செய்துகொண்ட பி.பி.சி. தமிழோசை ஒப்பந்தத்தை நேற்று முதல் இடைநிறுத்தியது பி.பி.சி. நிறுவனம்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் பி.பி.சி. தமிழோசை சேவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தத்தின் மூலம் பண்பலை வரிசையில் ஒலிபரப்பப்பட்டு வந்தது. கடந்த சில தினங்களாக பி.பி.சி. உண்மை ஒலிபரப்பை சிற்றலை வரிசையில் கேட்ட நேயர்கள் அந்தச் சேவை பண்பலை ஒலிபரப்பில் இடம் பெறும்போது மாற்றீடு பார்க்க பக்கம் 04


இந்திரா காந்திக்கும், எம்.ஜி.ஆருக்குமே ஈழத் தமிழர் விவகாரத்தில் அக்கறை **8**

தென்கொரிய – அமெ. உறவு பதற்றத்தையே உருவாக்கும் **9**

பருவம் தப்பிய மழையால் புகையிலை அறுவடை பாதிப்பு **17**

தப்பியது இங்கிலாந்து **23**


## ஜெயலலிதாவின் மிரட்டலால் இலங்கை வீரர்கள் நீக்கம்

■ **ஐ.பி.எல். உத்தியோகபூர்வ அறிவிப்பு**

புதுடில்லி, மார்ச் 27

தமிழகத்தில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் எவரும் பங்குபற்றக்கூடாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்த எச்சரிக்கையை அடுத்து சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். ஆட்டங்களில் இலங்கை வீரர்களை நீக்குவது என ஐ.பி.எல். நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என ஏற்பாட்டாளர்கள் நேற்று மாலை உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

இது குறித்த அறிவிப்பு ஐ.பி.எல் அமைப்பின் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

நேற்று மதியம் ஐ.பி.எல். அமைப்பின் நிர்வாகக் குழு கூடி, தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள், விளையாட்டு அரங்கத்தில் பணியாற்றுபவர்கள் போன்ற அனைவரது பாதுகாப்பும் இந்திய கிரிக்கெட் சபைக்கு மிகவும் முக்கியமானது என்றும் ஐ.பி.எல் அமைப்பின் தலைவர் ராஜீவ் சுக்லா வெளியிடப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -

இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடும் ஆட்டங்களில் பங்கு பெறமாட்டார்கள் என்ற முடிவு, ஐ.பி.எல்லிலுள்ள பார்க்க பக்கம் 04

## தமிழர்கள் இங்கு தாக்கப்படின் இந்திய அரசே முழுப்பொறுப்பு

■ **சிங்களக் கடும்போக்கு அமைப்புகள் எச்சரிக்கை**

கொழும்பு, மார்ச் 27

இலங்கை எதிர்ப்புப் போராட்டங்கள், பௌத்த பிக்குகள் மீதான தாக்குதல்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து அரங்கேறி வருவதன் எதிரொலியாக எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எதிராக ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதற்கு இந்திய மத்திய அரசே முழுப்பொறுப்பேற்கவேண்டும் - என்று சிங்கள கடும்போக்கு அமைப்புகள் நேற்று மிரட்டல் பாணியில் எச்சரிக்கை விடுத்தன.

இறைமையுள்ள நாடான இலங்கையைத் தமது தலையாட்டி பொம்மையாக்க தமிழ்நாடு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எம்மால் ஒருபோதும் அனுமதிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாது எனத் தெரிவித்த ஜாதிக ஹெல பார்க்க பக்கம் 04

## விசேட அதிரடிப் படையினருக்கு நாவற்குழியில் 2 ஏக்கர் காணி

யாழ்ப்பாணம், மார்ச் 27

தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான நாவற்குழியில் உள்ள காணியில் வசித்துவரும் 125 தமிழ்க் குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில், 2 ஏக்கர் காணி விசேட அதிரடிப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் இடம்பெற்றது. பார்க்க பக்கம் 04

## மகாராணி இல்லா மாநாடு இலங்கைக்குப் பின்னடைவு

புதுடில்லி, மார்ச் 27

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டை பிரிட்டிஷ் மகாராணி புறக்கணிப்பார் என்பது உறுதியாகிவிட்டது என இந்திய இதழான 'சண்டே கார்டியன்' செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 தொடக்கம் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில், பிரிட்டன் மகாராணி பங்கேற்கமாட்டார் என்பது பெரும்பாலும் உறுதியாகி விட்டது என லண்டனில் உள்ள பொதுநலவாய செயலகத்தின் பெயர் வெளியிடாத மூத்த அதிகாரியை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல நாடுகளின் அரச தலைவர்களும் கொழும்பு மாநாட்டில் இருந்து ஒதுங்கிக்கொள்ள வாய்ப்புள்ளது எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதோ அல்லது அதனை இடமாற்றம் செய்வதோ நியாயமற்றது என்று உறுப்புநாடுகளை இலங்கை அமைதிப்படுத்தும் முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்றும் பொதுநலவாயச் செயலக மூத்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பார்க்க பக்கம் 04

## வடக்கு நிலைமைகளை அறிவதில் பொதுநலவாய நாடுகள் ஆர்வம்

■ **இன்று யாழ். வருகிறார் பிரிட்டன் பிரதிநிதி**

யாழ்ப்பாணம், மார்ச் 27

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாதென்ற கோரிக்கைகள் வலுப்பெற்றுவரும் நிலையில், வடக்குப் பகுதி நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதில் பொதுநலவாய உறுப்பு நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்த வகையில் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி நீல்கொம்ரேன் இன்று புதன்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக் கூடாதென்பதில் கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகள் முக்கியமாகக் குரல் கொடுத்து வருகின்றன. இதனால் இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் பார்க்க பக்கம் 04

## இந்திய அரசின் அலுவலகங்களை முடக்கும் போராட்டம்

சென்னை, மார்ச் 27

இலங்கையின் தமிழீழம் அமைவதற்கான வாக்கெடுப்பை நடத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரி தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் அலுலகங்களை [illegible] இன்று பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மக்களின் உரிமைகளில் அரசின் கூடுதல் கவனம் அவசியம்

## பொது ஊழியர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு, அரசியல் உரிமைகள், மதச் சுதந்திரம் என்பனவற்றின் மீது அரசு கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என்று அகில இலங்கைப் பொது ஊழியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைப் பொது ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளைப் பொதுக் கூட்டம் நேற்று யாழ்.வை. எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமைபுரியும் தற்காலிக-நாள் சம்பள ஊழியர்களுக்கு பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக 180 நாள்கள் தொடர்ச்சியாகச் சேவையாற்றியிருப்பின் நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும்.

★உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களின் பதவிகளின் திட்டத்துக்கு அமைவாக காலம் தாழ்த்தாது பதவி உயர்வு வகுப்பு ii, i வழங்கப்படல் வேண்டும்.

★வடமாகாண இணைந்த சேவை சார்ந்த ஊழியர்களுக்குரிய பதவி உயர்வு வகுப்பு ii, i அமைவாக வழங்கப்பட வேண்டும்.

★அலுவலகப் பணியாளர் சேவை சார்ந்த ஊழியர்களுக்குரிய சேவைப்பிரமாணம் தொடர்பாகத் திருத்தம் செய்யப்படுவதுடன், வகுப்பு iii, ii இலிருந்து வகுப்பு ii பெறுவதற்கு 10 வருடம் சேவைக்காலம் கோரப்பட்டுள்ளது. இது திருத்தம் செய்யப்பட்டு குறிப்பிட்ட 6 வருடம் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும்.

★வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமைபுரியும் அட்டவணைப்படுத்தப்படாத சிறு பணியாளர்களுக்கும் வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக சீருடைக் கொடுப்பனவு 2 ஆயிரத்து 200 ஆக வழங்கப்பட வேண்டும்.

★அரச சேவையாளர்களுக்குரிய விழா முற்பணம் 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

★வாழ்க்கைப்படி அலவன்ஸ் தொகை அதிகரிப்பதுடன் 391 நாள் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டும்.

★நீண்ட காலமாக வழங்கப்படும் வாழ்க்கைப்படி அலவன்ஸ் தொகை 5 ஆயிரத்து 850 ரூபா அடிப்படையில் மாதாந்த வேதனத்தில் சேர்க்கப்படல் வேண்டும்.

★சிறுபான்மை மக்கள் அவர்களது உரிமைகளை பெற்று வாழ்வதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு மாநில சுயாட்சி மூலமாக தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

★வடமாகாண ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு, கண்ணியத்துவம் நலன் பேணல் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். தொடர்ந்து அவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதை அரசு உடன் கவனத்தில் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உள்ளிட்ட 12 தீர்மானங்கள் இந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் தீர்மான அறிக்கை ஜனாதிபதி செயலகத்துக்கும் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளது. (த-14-30)

# கூட்டமைப்பின் பதிவு குறித்து ஆராயும் கூட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையிலான கூட்டம் மிக விரைவில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய 5 கட்சிகளையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதவி செய்வதில் இழுபறி நிலை உள்ளது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில் நேற்றுக் கொழும்பில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளதாகக் கூறப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்தக் கலந்துரையாடல் நேற்று நடத்தப்படவில்லை.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது, தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய 4 கட்சிகளும் 26 ஆம் திகதி சந்திப்போம் என்று தீர்மானித்திருந்ததுடன் இதனைத் தமிழரசுக் கட்சிக்கும் தெரியப்படுத்தியிருந்தோம். இருப்பினும் அவர்கள் அடுத்த மாதம் 5 ஆம் திகதி சந்திப்பை நடத்துமாறு கேட்டனர். இறுதியில் இந்த மாதம் 26ஆம் திகதியே சந்திப்பதெனத் தீர்மானமாகியது.

> இன்று (நேற்று) தமிழரசுக் கட்சியினர் வருகை தராமையால் சந்திப்பை நடத்த முடியவில்லை. எப்படியாயினும் இந்த மாதம் முடிவடைவதற்குள் சந்திப்பு இடம்பெறும்

ஆனால் இன்று (நேற்று) தமிழரசுக் கட்சியினர் வருகை தராமையால் சந்திப்பை நடத்த முடியவில்லை. எப்படியாயினும் இந்த மாதம் முடிவடைவதற்குள் சந்திப்பு இடம்பெறும்-என்றார்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசாவுடன் இது குறித்துத் தொடர்புகொண்டு கேட்டபோது, எங்கள் கட்சி உறுப்பினர்கள் சிலர் இன்னமும் நாடு திரும்பவில்லை. தலைவர் சம்பந்தனுடன் கலந்துரையாடி விரைவில் அந்தக் கூட்டம் இடம்பெறும்-என்றார். (த-5)

# கச்சதீவை மீளப் பெறுவதே மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

## சட்ட சபையில் ஜெயலலிதா முழக்கம்

சென்னை, மார்ச் 27

சட்டத்துக்கு முரணான வகையில் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீளப்பெறுவதுதான் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதைத் தடுக்க ஒரே வழி. மேலும் தமிழக மீனவர்களும் இந்திய குடிமக்கள் தான் என்பதை மத்திய அரசு நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டசபையில் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பான கவனவீர்ப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது :-

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்தும் தாக்கப்படுவதுடன் சிறை வைக்கவும் படுகின்றனர். இதனால் மீனவர்களின் குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகின்றன.

இலங்கைக் கடற்படையினரால் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 4 தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதற்காக இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவரை மத்திய அரசு கண்டிக்க வேண்டும்.

இந்திய மத்திய அரசு தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டும் காணாமலும் உள்ளது. தமிழ மீனவர்களும் இந்தியாவின் குடிமகன் தான் என்பதை மத்திய அரசு நினைவில் கொள்ள வேண்டும்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுப்பதற்கு ஒரேவழி கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்பதுதான். 1994 ஆம் ஆண்டு இலங்கையிடம் கச்சதீவு, சட்டப்படி தாரை வார்க்கப்படவில்லை.

இதனை எதிர்த்து 2008 ஆம் ஆண்டு நான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். இந்திய நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்படாததால் இலங்கை- இந்திய ஒப்பந்தம் செல்லுபடியாகாது.

எனவே இலங்கையிடமிருந்து கச்சதீவை உடனடியாக மத்திய அரசு மீட்க வேண்டும் - என்றார். (த-5)

# இலங்கைப் படைக்கு உதவியதாக 'எயார்ரெல்'லுக்கு எதிராக போராட்டம்

சென்னை, மார்ச் 27

இறுதிப் போரில் இலங்கைப் படையினருக்கு 'எயார்ரெல்' நிறுவனம் உதவி புரிந்ததாகத் தெரிவித்து கோவையிலுள்ள 'எயார்ரெல்' அலுவலகம் மாணவர்களால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் இலங்கைப் படையினரின் தொலைத் தொடர்பு நடவடிக்கைகளுக்கு 'எயார்ரெல்' நிறுவனம் உதவி செய்தது. இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு அந்த நிறுவனத்துக்கும் பங்கிருப்பதாகத் தெரிவித்தே மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

தமிழக மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கோவையிலுள்ள 'எயார்ரெல்' அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். இதனால் போராட்டம் நடத்திய மாணவர்கள் அனைவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் விருதுநகர் மாவட்டத்தில் தமிழக மாணவர்களும் வடஇந்திய மாணவர்களும் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சியினரும் நேற்றுப் பல இடங்களில் போராட்டம் நடத்தினர்.

சென்னை, தஞ்சை, திருச்சி, கடலூர், நகர் பகுதியிலுள்ள இந்திய அரசின் உற்பத்தி வரி, வருமானவரி அலுவலகங்களை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

இரண்டு கேரள மீனவர்கள் சுட்டக்கொல்லப்பட்டமைக்கு இத்தாலியுடன் உறவை முறித்துக் கொள்ளும் இந்திய மத்திய அரசு, தமிழக மீனவர்கள் 600 பேர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட போதும் இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

எங்களின் வரியில் இந்திய மத்தியரசு சிங்களவனுக்கு ஆயுதம் வாங்கிக் கொடுத்து எங்களையே கொல்லுகின்றது எனத் தெரிவித்து வருமானவரி அலுவலகங்களை முற்றுகையிட்டனர். முற்றுகையிட்ட தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சியினர் நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். (த-5)

# ஓட்டோ விபத்தில் எட்டுப் பேர் காயம்

ஓட்டோவொன்று வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணித்த ஐந்து சிறுவர்கள், இரண்டு பெண்கள் உட்பட எட்டுபேர் காயமடைந்துள்ளனர். இவர்களுள் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி - தென்னெகும்புர மகாவலி இரஜமாவத்தையில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது ஓட்டோ சாரதி உட்பட எட்டுபேர் அதில் பயணித்துள்ளனர். இவர்களுள் ஐந்து சிறுவர்கள், இரண்டு பெண்கள் அடங்குகின்றனர் எனப் பொலிஸ் தலைமையக அதிகாரியொருவர் தெரிவித்தார். விபத்தில் காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# உணவு, தண்ணீரின்றி நடுக்கடலில் தத்தளித்த 21 இலங்கையர் மீட்பு

ஜாவா, மார்ச் 27

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 21 இலங்கை அகதிகள் இந்தோனேசிய அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு ஜாவா பகுதியில் சென்டாங்பிரு - மலாங் கடற்பகுதியில் உணவு, நீர் இன்றித் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை அகதிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அகதிகள் பயணித்த படகில் இயந்திர கோளாறு ஏற்பட்டதாகவும் இந்தோனேசிய மீனவர் ஒருவர் இந்தப் படகைக் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகு மீட்கப்பட்ட பின்னர் சென்டாங்பிரு கிராமத்தில் உள்ளூர் வாசிகள் இலங்கை அகதிகளுக்கு உணவு கொடுத்துள்ளனர்.

> சென்டாங்பிரு கிராமத்தில் உள்ளூர் வாசிகள் இலங்கை அகதிகளுக்கு உணவு கொடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட இலங்கை அகதிகள் குறித்த தகவல் பெறப்பட்டு வருவதாக இந்தோனேசிய ஆகாயம் மற்றும் கடல் செயற்பாட்டு பொலிஸ் பொறுப்பாளர் பிரயிட்னோ தெரிவித்துள்ளார்.

குறித்த இலங்கையர்கள் ஒரு வாரம் உணவு இன்றி இருந்ததால் உடல் நலக் குறைவுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்கப்பட்ட இலங்கையர்கள் மலாங் குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பொறுப்பாளர் பிரயிட்னோ கூறியுள்ளார். (த)

# முடிந்தால் முஸ்லிம்கள் கொழும்பில் போராடட்டும்

## போராட்டம் தோல்வியென பொதுபல சேனா கூறுகிறது

நாடு முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதாகக் கூறி முஸ்லிம் அடிப்படைவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கை முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது எனத் தெரிவித்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட அத்தே ஞானாசார தேரர், முடிந்தால் தலைநகர் கொழும்பில் முழு அடைப்புப் போராட்டத்தை நடத்திக் காட்டுங்கள் என்று முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்குச் சவால் விடுத்தார்.

நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபல சேனா அமைப்பு உள்ளிட்ட சிங்கள இனவாதக்குழுக்கள் மேற்கொள்கின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து நாடு முழுவதும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முழு அடைப்புப் போராட்டம் அனுஷ்டிக்க முஸ்லிம்கள் தீர்மானித்திருந்தனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கில் மட்டும் இந்த முழு அடைப்புப் போராட்டம் முழுமையாக அனுஷ்டிக்கப்பட்டதுடன், வடக்கின் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் பல முஸ்லிம்கள் கடைகளை அடைத்து முழு அடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இருப்பினும், தலைநகரான கொழும்பு, தெற்கு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் இந்த முழு அடைப்புப் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

இதுவிடயம் குறித்து வினவியபோதே பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானா சார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு அரசைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் மீண்டும் வலியுறுத்தவுள்ளது. அரச கல்வியைப் பாதுகாப்பதற்காக மொத்த உற்பத்தி செலவில் ஆறு சதவீதத்தைக் கல்விக்கு ஒதுக்குமாறு எற்கனவே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்திருந்தது.

இது தொடர்பாக மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டமொன்று எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி தேசிய நூலக ஆவணப்படுத்தல் நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழங்காவில் வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் இடம்பெற்ற புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்ட நிகழ்வின் போது அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தியானம் மற்றும் யோகாசனத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## சீரில்லாத பஸ் சேவையால் பாதிக்கப்படும் அலுவலர்கள்

மன்னார், மார்ச் 27

மன்னாரில் இருந்து நானாட்டான் செல்லும் பஸ் சேவை சீராக இடம் பெறாமையால் கடமையின் நிமித்தம் பயணிக்கும் அலுவலர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

மன்னாரில் இருந்து காலை 8.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய நானாட்டான் பஸ் சேவை 8.45 மணிக்குப் பின்னர் புறப்படுவதனால் அரச மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள் தினமும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இலங்கை போக்குவரச் சபைக்குச் சொந்தமான பஸ் வண் டியே இந்தப் பகுதிக் கான சேவையில் ஈடு பட்டு வருகின்றது.

துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியே இந்தப் பகுதிக்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

மன்னார், வங்காலை ஆகிய பகுதிகளில் இருந்து நானாட்டானுக்கு கடமைக்குச் செல்பவர்களின் நன்மை கருதி இந்த பஸ்சேவை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-86)

## இந்திய வீட்டுத் திட்டம்; இராமர் புளியங்குளம் மக்களுக்கும் வீடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இராமர் புளியங்குளம் மக்களுக்கு இந்திய அரசின் மூன்றாம் கட்ட வீட்டுத்திட்டத்தில் வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்தார்.

''இந்திய வீடு கிடைக்காதவர்களுக்கு ஜனாதிபதி செயலணியால் வீடுகள்'' என்னும் தலைப்பில் கடந்த 9 ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது. அந்தச் செய்தி தொடர்பாக பிரதேச செயலர் விளக்கமளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராமர் புளியங்குளம் மக்களுக்கு இந்திய அரசின் மூன்றாம் கட்ட வீட்டுத் திட்டத்தில் வீடுகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்குரிய பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி விஷேட செயலணியின் அனுமதிக்காக எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலணியின் அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னர் வீட்டுத்திட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் -என்றார். (ஒ-5)

# எமில்நகர் மைதானம் இடம் மாறுகிறதா?

## கண்டித்து வினோ எம்.பி. விளையாட்டுத்துறை அமைச்சருக்கு கடிதம்

மன்னார், மார்ச் 27

*மன்னார் எமில் நகரில் பொது விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் விளையாட்டுத்துறை அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.*

அதில் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள், ஆர்வலர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பல தரப்பட்டவர்களின் ஆலோசனைகள் மற்றும் அபிப்பிராயங்கள் பெறப்பட்டு மன்னார் மாவட்டத்துக்கான பொது விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான பொருத்தமான இடம் மாவட்டச் செயலகத்தால் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இனங்காணப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் விளையாட்டுத்துறை தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் மன்னார் மாவட்ட செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பரிந்துரைகள் அங்கீகரிக்கப்பட்டதை ஆலோசனைக்குழு உறுப்பினர் என்ற வகையில் நினைவுபடுத்துகின்றேன்.

மன்னார் நகர எல்லைக்குள் சுமார் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட எமில்நகர் மைதானம் விளையாட்டுக் கழகங்களாலும், வீரர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மன்னார் மாவட்டத்துக்கான பொது மைதானமாகத் திகழ்வதற்கும், அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் ஏற்ற ஒரு மைதானமாகவே இது சகலராலும் இனங்காணப்பட்டது. இத்தெரிவின்போது வேறு எந்த ஒரு மைதானமும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் முடிவுறும் நிலையை எட்டுகின்ற தருணத்தில் திடீரென முன்னைய திட்டம் கைவிடப்பட்டதாக அறிகின்றேன். இது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத, பெரும்பான்மையானவர்களின் விருப்புக்கும், உணர்வுகளுக்கும் சவாலானதொரு விடயமாகும். தனிப்பட்ட ஓரிரு அதிகாரிகளின் விருப்புக்களுக்காக மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் இரகசியமான முறையில் மாற்றம் செய்யப்பட்டமை விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தாங்கள் இந்த விடயத்தில் தலையிட்டு உண்மை நிலையைக் கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். மன்னாரில் உள்ள விளையாட்டுத் துறை சார்ந்த அதிகாரிகள் மத்தியில் வியப்பையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ள இந்த மைதான இடமாற்றம் தொடர்பாக உள்ளூர் வீரர்களின் மன ஆதங்கத்தைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

தனிப்பட்ட, சுயலாபங்களுக்காக ஒட்டுமொத்த மன்னார் மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்களின் உணர்வுகளுக்கு மாறாக செயற்படுவோரின் இத்தகைய நடவடிக்கைகள் கண்டிக்கப்படத்தக்கவை. எனவே எமில் நகர் மைதானத்தையே மீண்டும் தெரிவு செய்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு உரிய அதிகாரிகளைப் பணிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## வவுனியா 'போராட்டம்' பிசுபிசுத்தது

வவுனியா, மார்ச் 27

வவுனியாவில் உதயனுக்கு எதிராக ஒழுங்குசெய்யப்பட்ட போராட்டம் மக்களின் ஆதரவு இல்லாததால் பெரும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

உதயனில் வெளிவந்த கவிதையொன்றின் சொற்பதப் பிரயோகங்களில் தவறு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து உதயன் பத்திரிகையில் வருத்தம் தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் ஆளும் கட்சிக்கு ஆதரவான சிலர் உதயனுக்கு எதிரான போராட்டங்களை ஒழுங்கு செய்தனர்.

நேற்று முன்தினம் முள்ளியவளையில் இத்தகையதொரு போராட்டம் இடம்பெற்றது. இதற்கு மக்களின் ஆதரவு சிறிதும் கிடைக்கவில்லை. கடைகளை மூடுமாறு கோரிக்கை விடப்பட்டபோதிலும் எவரும் இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

மேலும் திரட்டப்பட்ட சிலர் மாத்திரமே ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். இவர்கள் உதயனுக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

### துதிபாடினர் ஆளுநருக்கு

இறுதியில் கூட்டமொன்றும் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய பலர் உதயனை மறந்து வடக்கு ஆளுநரைத் துதி பாடுவதில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

இவற்றை எல்லாம் வேடிக்கை பார்த்த மக்கள் இப்போதைய சூழ்நிலையில் இது தேவைதானா எனக் கேள்வி எழுப்பியதைக் காண முடிந்தது.

இதேவேளை நேற்றைய தினம் வவுனியாவில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்ட உதயனுக்கு எதிரான போராட்டம் மக்களின் ஆதரவு கிடைக்காமையால் இடம்பெறவில்லை.

இங்குள்ள மூன்றுபேர் அடங்கிய கோஷ்டி ஒன்று இதனை நடத்துவதற்கு முன்னின்று பாடுபட்டதாகவும் தெரியவருகின்றது.

இவர்களால் பத்திரிகை விநியோகத்தர்களுக்குத் தொலைபேசியில் மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் அறிக்கைகள் வாயிலாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.

மேலும் சமூக அமைப்புக்கள் பலவும் இந்தப் போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டன.

இந்த நிலையில் மக்களின் ஆதரவு அறவே கிடைக்காத நிலையில் வவுனியாவில் ஒழுங்கு செய்யப்பட்ட உதயனுக்கு எதிரான போராட்டம் இடம்பெறாது பிசுபிசுத்துப் போனதாகத் தெரிய வந்துள்ளது. (க-433,400,402)

## சதிகாரர் வலையில் சிக்குவது நீதியாகுமா? வன்னி மக்களின் குரலாக ஒலிப்பவன் உதயனே!

வன்னி மக்களின் குரலை ஒலிக்க வைப்பதில் உதயன் முதன்மைபெற்று விளங்குகின்றான். வன்னியிலே அவலத்தோடு வாழுகின்ற மக்களுக்கு இழைக்கப்படுகின்ற துன்பங்கள் தொடர்பாக அந்த மக்கள் வெளியில் சொல்ல முடியாத வேளைகளில் எல்லாம் இந்த மக்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதில் உதயனின் பங்கு அளப்பரியது.

பாதிக்கப்பட்ட வன்னி மக்களின் குரலாக ஒலித்து வரும் உதயனின் குரலை நசுக்குவதற்காக மக்கள் விரோதிகளும், குள்ளநரிக் கூட்டங்களும் பல முறை முயற்சித்தும் தோற்றுப்போன வரலாறு அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்ததால் உதயன் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளான். மகத்தான மக்கள் பணிசெய்து வரும் துணிச்சல்மிக்க உதயனின் குரல்வளையை அறுக்க வேண்டும் என துரோகிகள் காத்திருந்தனர்.

இந்த வேளையில் உதயனில் வெளிவந்த ஆங்கிலத்தில் ஆளுநருக்கு ஒரு கடிதம் என்ற கவிதையின் ஒரு சில வரிகளை மட்டுமே சுட்டிக்காட்டி வன்னி மக்கள் உதயனை வெறுப்பதாகக் காட்டுவதற்குச் சிலர் நாடகமாடுகின்றனர்.

உதயனில் வெளிவந்த அந்தக் கவிதை மக்களின் மனங்களை நோகடித்ததை அறிந்து உதயன் மக்களிடம் நேரடியாகவே மன்னிப்பைக் கோரிச் செய்தி வெளியிட்டிருந்தான்.

இத்தகைய ஒரு சிறு தவறு வெளிவந்தமைக்காக வன்னி மக்களுக்காகவே ஓங்கிக் குரல் கொடுத்து வரும் உதயனை வன்னி மக்களாகிய நாம் மறந்து கண்ணை மூடிக் கொண்டு சதிகாரர்களின் வலையில் சிக்குவது நீதியாகுமா?

இந்த விடயத்தில் வன்னி மக்களாகிய நாம் மிகவும் தெளிவாகவே இருக்கின்றோம். மக்களைக் குழப்பும் கூத்தாடிகள்தான் உதயனுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் என்று கூறி தமது சுயநல நடவடிக்கைகளை அரங்கேற்றி வருகின்றார்கள்.

தவறுதலாக ஒரு நாள் எமது கைவிரல் கண்ணில் பட்டுவிட்டது என்பதற்காக எமது கைவிரலையே வெட்டி எறிந்து விடுவதற்கு நாம் துணிகின்றோமா?

வன்னி மக்களாகிய எமக்காகக் குரல்கொடுத்து வரும் எமது உதயனை என்றைக்கும் எமது உறவாகவே பார்க்கின்றோம். உதயனே எமக்கான உனது பணிகள் தொடர வேண்டும்.

*உதயனின் வன்னி உறவுகள் சார்பில்*

*வன்னி வாசகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராக முழு அடைப்பு போராட்டம்

கொழும்பு, மார்ச் 27

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காகச் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி அதனூடாகப் பொறிமுறையொன்றை வகுக்கவேண்டும் என்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையை அரசு நிராகரித்துள்ளதால் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் முழு அடைப்புப் போராட்டத்தில் ஈடுபடப் பொது எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்த முழு அடைப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு மக்களை அணிதிரட்டுவதற்காக எதிர்வரும் 31 ஆம் திகதி கண்டியில் மாபெரும் பொதுக்கூட்டமொன்றை நடத்த பொது எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ளன என்று அதில் அங்கம் வகிக்கும் நவ சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்பர் என்றும் அவர் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பில் விக்கிரமபாகு கருணாரட்ன கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள் 50 சதவீதத்திற்கும் அதிகமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என அரசு கூறுகின்ற போதிலும், நாட்டில் அவ்வாறானதொரு நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்பது எமக்குத் தெரியவில்லை.

சர்வகட்சி மாநாடு யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தது பேச்சு நடத்துவதற்காக அல்ல. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை வகுக்கவே அவர் அதனை முன்வைத்தார். ஆனால், இதனை அரசு நிராகரித்துவிட்டது.

எனவே, அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடுதழுவிய ரீதியில் முழு அடைப்புப் போராட்டத்தில் ஈடுபடப் பொது எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதற்கமைய நாடுமுழுவதிலுமுள்ள மக்களை அணிதிரட்டும் நடவடிக்கையாக எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டமொன்றை கண்டியில் நடத்த ஏற்பாடு செய்துள்ளோம் - என்றார்.

(த-சி)

## வடக்கு...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

ஆராய்வதற்கும் அவை முனைப்புக் காட்டி வருகின்றன.

கடந்தவாரம் கனேடிய அதிகாரிகள் யாழ். மாவட்டத்துக்கு வருகைதந்து நிலைமைகளை ஆராய்ந்திருந்தனர். இந்த நிலையிலேயே பிரிட்டன் அதிகாரிகள் இன்று யாழ். மாவட்டத்துக்கு வருகை தருகின்றனர்.

யாழ். மாவட்டத்துக்கு வருகைதரும் பிரித்தானியக் குழுவினர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மற்றும் யாழ். மாவட்ட செயலாளரைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

## தமிழர்கள்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

உறுமயவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சிங்கள ராவய அமைப்பின் தலைவருமான அக்மீமன தயாரத்ன தேரர், இவ்விவகாரம் இருநாட்டு உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும், இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டில் தொடரும் எதிர்ப்புகள் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியாவின் தமிழ்நாட்டுக்குச் செல்லும் இலங்கையின் பௌத்த பிக்குகளும், பௌத்தர்களும் தாக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்லாது, இலங்கையிலுள்ள சிங்களவர்கள் எவரும் தமிழ்நாட்டுக்கு வரக்கூடாது என்றும் அவர்கள் அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

இதை எப்படி நாம் ஏற்றுக்கொள்வது? புத்தர் பிறந்த புனித பூமிதான் இந்தியா. அங்கு சென்றுவருவதற்கு பௌத்தர்களுக்கு உரிமை உள்ளது. அதுமட்டுமல்லாது, இந்தியா என்பது எமது அயல் - நட்பு நாடு. வரலாற்றுக் காலம் முதல் உறவுகளைப் பேணும் நாடு. இந்தியாவுக்கு ஒரு தாக்கம் ஏற்பட்டால் அது எமக்கும் தாக்கத்தைச் செலுத்தும்.

தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராக எழுகின்ற எதிர்ப்புகளால் இலங்கை - இந்திய உறவில்தான் பாதிப்பு ஏற்படும். இதற்கு நாம் இடமளிக்க முடியாது. இலங்கை என்பது ஓர் இறைமையுள்ள நாடு. எமக்கேற்ற வகையில்தான் நாம் இங்கு செயற்படவேண்டும். இருப்பினும், தமது ஏவல்களுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படும் தலையாட்டிப் பொம்மையாக எம்மை மாற்றத் தமிழ்நாடு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில், போரின் பின்னர் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் அனைத்து சிறப்புரிமைகளுடனும் வாழ்கின்றனர். நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஐக்கியத்துடன் வாழ்ந்துவருகின்றனர். எந்த மக்களையும் பாரபட்சத்துடன் அரசு நடத்தவில்லை. இவ்வாறான நிலையில், தமிழ்நாட்டிலுள்ளவர்கள் ஏன் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்?

இலங்கையின் பௌத்த பிக்குகளும், பௌத்தர்களும் தமிழ்நாட்டில் தாக்கப்படுவது தொடர்வதால், எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் கட்டவிழ்க்கப்பட்டால் அதற்கு இந்திய மத்திய அரசே முழுப் பொறுப்பேற்கவேண்டும்.

எனவே, எதிர்கால நலனையும், இலங்கை - இந்திய நட்புறவையும கருத்திற்கொண்டு இலங்கைக்கு எதிரான தமிழ்நாட்டின் எதிர்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார் அக்மீமன தயாரத்ன தேரர்.

இதேவேளை, இது குறித்து சிங்கள அமைப்புகளின் ஒன்றியத்தின் உறுப்பினரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட சூழ்ச்சியாகும். இலங்கையிலுள்ள தமிழர்கள் நலன் குறித்து தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குத் துளியளவும் அக்கறை இல்லை என்பதே அவர்களது நடவடிக்கைகளினூடாக வெளிப்படுகின்றது.

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் இங்கு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் அங்கு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். எனவே, இதற்கு இந்திய மத்திய அரசு இடமளிக்கக்கூடாது. தமிழ்நாட்டின் இலங்கை எதிர்ப்பு நடவடிக்கைகளை அது தடுத்துநிறுத்தவேண்டும் - என்றார் அவர்.

# பொதுபலசேனாவை தடை செய்யக் கோரிக்கை

பொதுபலசேனாவைத் தடைசெய்வதற்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய எட்டு முஸ்லிம் நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுக்க முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு திட்டமிட்டுள்ளது.

பொதுபலசேனா உருவாக்கப்பட்டது முதல் இன்றுவரை அந்த அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்திய சம்பவங்கள் அடங்கிய பட்டியலையும் அந்த நாடுகளிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு, பொதுபலசேனா எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்துவதற்கெனத் திட்டமிடப்பட்டுள்ள விடயங்கள், அந்த அமைப்புக்கு உதவும் வெளிநாடுகள் பற்றிய விவரங்கள் போன்றவையும் அந்நாடுகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

பொதுபலசேனாவுக்கு எதிரான முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து கிழக்கில் திங்கட்கிழமை அதை வெற்றிகரமாக அனுஷ்டித்த முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு கொழும்பில் மாபெரும் மாநாடு ஒன்றையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பொதுபலசேனாவின் இனவாதப் போக்குடன் உடன்படாத பௌத்த பிக்குகள், பௌத்த புத்திஜீவிகள் போன்றோரைக்கொண்டு இந்த மாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுபலசேனா முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுத்துச் செல்லும் அனைத்துப் பொய் பிரசாரங்களையும் வன்முறையின்றி இவ்வாறு ஜனநாயக ரீதியில் முறியடிப்பதற்காக கட்டம்கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது.

இதற்காக உள்நாடு மற்றும் சர்வதேச மட்டத்தில் பரந்துபட்ட அளவில் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(சி-)

## விசேட...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

இந்தக் கூட்டத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான 61 ஏக்கர் காணி நாவற்குழியில் அமைந்துள்ளது. இதில் 30 ஏக்கர் காணியில் 30 வீட்டுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 31 ஏக்கர் காணியில் சிங்களக் குடும்பங்கள் அடாத்தாகக் குடியமர்த்தப்பட்டுள்ளன. அருகில் 125 தமிழ்க் குடும்பங்கள் குடியமர்ந்துள்ளன. இந்தக் காணி தமிழ்க் குடும்பங்களுக்கே சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும்.

ஆனால் அங்கு வசிக்கும் 125 தமிழ்க் குடும்பங்கள் தமக்குக் காணிகளை வழங்குமாறு தொடர்ச்சியாகக் கோரிவருகின்றபோதும் இதுவரையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

தமிழ் மக்கள் வசிக்கின்ற காணிகள் முழுவதிலும் தமக்குப் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாகச் சீருடையினர் தெரிவித்து வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(த-5)

## இந்திய அரசின்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

புதன்கிழமை முதல் நடைபெறவுள்ளது என தமிழீழத்துக்கான தமிழக மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது.

இன்று புதன்கிழமை காலை முதல் தமிழகத்தில் இருக்கும் மத்திய அரசின் அலுவலகங்களுக்கு தமிழக மாணவர்கள் திரண்டு சென்று பூட்டுப்போட்டுப் போராட்டம் நடத்துவர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

## ஒப்பந்தத்தை...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

செய்து ஒலிபரப்பப்படுவதாகத் தெரிவித்திருந்தனர்.

கடந்த 18 ஆம் திகதி இவ்வாறு போலி ஒலிபரப்பு இடம்பெற்றதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பி.பி.சி. நிறுவனம் இது குறித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குத் தெரியப்படுத்தி இருந்தது. ஆயினும் தொடர்ந்து போலி ஒலிபரப்பு இடம்பெற்றதால் வேறு வழியின்றி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் செய்துகொண்ட பண்பலை ஒலிபரப்பு ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதாக பி.பி.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

பி.பி.சி. உண்மை ஒலிபரப்புக்குப் பதிலாக இலங்கை அரசுக்கு சார்பாக போலி ஒலிபரப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சிற்றலை வரிசை ஊடாக பி.பி.சி. தமிழோசையை நேயர்கள் தொடர்ந்தும் கேட்க முடியும்.

(த)

## ஜெயலலிதாவின்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

ஒன்பது அணி உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் ஐ.பி.எல்லின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரின் எச்சரிக்கையை அடுத்தே ஐ.பி.எல். நிர்வாகம் இந்த அவசர முடிவை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.

(த)

## மகா ராணி...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை, மொரிசியஸுக்கு மாற்றும் முயற்சிகள் நடந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் ஸ்டீபன் ஹாப்பர் அரசு, பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்பதில்லை என்று உறுதியான முடிவை எடுத்து விட்டார் எனவும் சண்டே கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

வெள்ளைக்கார பொதுநலவாய நாடுகளான பிரிட்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்றனவும், கொழும்புக்கு தமது தலைவர்களை அனுப்புவதைத் தவிர்க்கலாம்.

பதிலாக, அவர்கள் தமது பிரதித் தலைவர்களை அல்லது வெளிவிவகார அமைச்சர்களையோ மூத்த அதிகாரிகளையோ அனுப்பி வைக்கலாம்.

அவ்வாறு நடந்தால், பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறைந்து போய் விடும்.

கொழும்பில் நடக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிக்குமாறு கரிபியன் நாடுகளுக்கு கனடா அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது.

அன்டிகுவா பார்புடா, பகாமாஸ், பார்படோஸ், பெலிஸ், டொமினிக்கா, கிரனெடா, கயானா, ஜமைக்கா, செனா். வின்செண்ட்- கிரெனடைன்ஸ், சென்.லூசியா, சென். கிட்ஸ் நெவிஸ், ரினிட்டாட் அன் டுபாகோ ஆகிய நாடுகளுக்கு கனடா அதிகளவு நிதியுதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய உச்சி மாநாட்டில் பிரிட்டன் மகாராணி பங்கேற்காவிட்டால் அது இலங்கை ஜனாதிபதிக்கு முக்கியமான பின்னடைவாக அமையும்.

ஏனென்றால் உலகெங்கும் நடந்த பொதுநலவாய மாநாடுகளில், பிரிட்டன் பங்கேற்று கௌரவப்படுத்தியிருந்தது.

அண்மையில் பிரிட்டன் மகாராணி வெளியிட்ட அறிக்கையில், பொதுநலவாய நாடுகள் நல்லாட்சி, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கருத்து சுதந்திரத்தை உறுதிப்படுத்தல், சட்டத்தின் ஆட்சி போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி-த)

## ஜெனிவா...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

ஆட்டங்காணச்செய்துள்ளது என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

கொரியா, ஈரான், சிரியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு எதிரான பிரேரணைகளுக்கு எதிராக நாம் ஆதரவு வழங்கவில்லை என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

சிரியா, ஈரான், கொரியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு எதிரான தீர்மானங்களால் ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெறமுடியவில்லை. இந்தத் தீர்மானங்கள் இராணுவத் தலையீடுகளை ஊக்கப்படுத்தி அத்தலையீடுகளை நியாயப்படுத்தக் கூடும் என்று சிரியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராகக் கடந்த வாரம் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை 25 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-சி)

## கிரிக்கெட்டுக்கு...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

சென்னையில் இடம்பெறும் ஐ.பி.எல். ஆட்டங்களில் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் பங்கெடுக்கக் கூடாது. இதனை இந்திய கிரிக்கெட் சபை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் சென்னையில் ஐ.பி.எல். ஆட்டங்களையே நடத்த முடியாதெனத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனது கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நேற்று அவர் எழுதிய அவசரக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.பி.எல். 'ரி -20' கிரிக்கெட் ஆட்டங்கள் இந்தியாவின் 9 முக்கிய நகரங்களில் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகின்றன.

இதில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் பங்கெடுக்கின்றனர். குறிப்பாக தமிழகத்தின் 'சண்' தொலைக்காட்சியின் 'சன் ரைசர்ஸ்' அணியின் தலைவராக இலங்கை கிரிக்கெட் வீரர் குமார் சங்ககாரவே உள்ளார். மேலும் இந்த ஐ.பி.எல். தொடரில் 12 இலங்கை வீரர்கள் வரையில் விளையாடவுள்ளனர்.

தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள் உச்சக்கட்டதை எட்டியுள்ளன. மேலும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதால் தமிழக மக்கள் கொதித்துப் போயுள்ளனர்.

எனவே தமிழக மக்களின் உணர்வுகளை மத்திய அரசு மதித்து, இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள், நடுவர்கள் என்று எந்த அதிகாரிகளையும் சென்னைக்குள் அனுமதிக்கக் கூடாது. இதனை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இல்லையேல், சென்னையில் எந்தவொரு ஐ.பி.எல். ஆட்டங்களும் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது - என்றுள்ளது.

(த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தொடர்புகளுக்கு
தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி :
news@uthayan.com
கருத்து:
comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com

# தமிழக மாணவர்களின் எழுச்சி; டில்லி அரசு அசட்டை செய்தால்..?

அரசியல் சார்பின்றி, தமிழகத்தில் மாணவர்கள் மத்தியில் முகிழ்த்துள்ள போராட்டம் இப்போது வலுப்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. தமது போராட்டத்தில் அரசியல் தலைவர்களோ, கட்சிகளோ சேர்ந்து தத்தமது பலத்தை அதிகரிக்க இந்த மாணவர்கள் விரும்பவில்லை என்பது துலக்கமாகத் தென்படுகிறது. வைகோ மற்றும் நெடுமாறன் ஆகியோர் மாணவர் போராட்டத்துக்கு ஆதரவளித்து, அதனூடு தமக்குள்ள மக்கள் ஆதரவைப் பெருக்க முனைந்த வேளை அது வேண்டாம் என்றும், அரசியல் சாயம் பூசப்படுவதை விரும்பவில்லை என்றும் நிராகரித்து விட்டார்கள்.

★ இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க தமிழக சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய அரசு செயற்படுத்த வேண்டும்.

★ இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மீது அனைத்துலக விசாரணை நடத்தி தண்டனை வழங்க வேண்டும்.

★ இலங்கையில் தமிழீழம் அமைய பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

★ தமிழக மீனவர்களைக் கொல்கிறது இலங்கைக் கடற்படை. அதனால் அந்நாட்டின் தூதரகத்தை எதிர்வரும் முதலாம் திகதிக்குள் சென்னையிலிருந்து அகற்ற வேண்டும்.

★ இலங்கைப் பொருள்களை வாங்கவோ, விற்கவோ கூடாது.

தமிழகத்தில் போராட்டம் நடத்தும் மாணவர்களின் பிரதான கோரிக்கைகள் இவையாகும்.

-இலங்கைத் தூதரகத்தை சென்னையிலிருந்து அகற்றுவதற்கு மாணவர்கள் காலக்கெடுவும் விதித்துள்ளனர்.

-தூதரகம் அகற்றப்படாவிடில் முப்பது நாள்களுக்குள் தமிழ்நாட்டின் ஒரு கோடி 65 இலட்சம் மாணவர்கள், தமது வாக்காளர் அடையாள அட்டைகளைத் திருப்பி அரசிடம் கையளிக்கப் போவதாகவும் தமது மாற்று நடவடிக்கை குறித்து அவர்கள் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

தமிழக மாணவர்களின் போராட்டம், தமிழக மக்களின் அபிப்பிராயத்தை மாற்றிவிட்டது என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். விடுதலைப் புலிகள் குறித்தும் ஈழப் போராட்டம் குறித்தும் தமிழ்நாட்டில் சாதகமான மனநிலை உருவாகி வருகிறது என்று கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் பிரபாகரனின் படத்தையோ தமிழீழப் படத்தையோ பத்திரிகைகளில் மட்டும் பார்த்த மக்கள் தற்பொழுது இப்படங்களைத் தமது கைகளில் ஏந்திக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

தனித் தமிழீழம் இல்லையேல் தனித் தமிழ்நாடு என்ற கோஷமும் எழுப்பப்படுகின்றன. இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் குறித்த தனது முடிவை அறிவிப்பதில் இந்திய அரசு காலம் தாழ்த்தியதன் விளைவே இது என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த வாரம் அமெரிக்கா, இந்திய அரசின் ஆதரவுடன் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது. அதன் பின்னர், இப்போதெல்லாம் தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் ஓய்ந்துவிட்டன. ஆனால் மறுபக்கத்தில் மாணவர் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. அரசியல் கட்சிகள் வெறும் எதிர்ப்பு, கண்டனப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த வேளை, சென்னை லொயோலா கல்லூரி மாணவர்கள் திடீரென உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

மூன்றாம் நாள் அப்போராட்டம் வேறுவடிவம் எடுத்தது. உண்ணாவிரதம் பரவலடைந்தது. அடுத்த ஆறாம் நாள் மாணவர்கள் தமிழ்நாடு முழுவதும் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். அப்போராட்டம் தற்பொழுதும் தொடர்கிறது. அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கை போய்விட்டது. இப்போராட்டம் தற்பொழுது ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டமாக மாறியுள்ளது.

மன்மோகன்சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு, ஈழத் தமிழர் பிரச்சினையில் நியாயத்துடன் செயற்பட வேண்டும்; இல்லையேல் அது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு ஊறுவிளைவிப்பதாக அமையும்.

ஜெனிவா, மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்துவிட்டதாக நினைத்துக் கொண்டு, குறிப்பாக தமிழகத்தில் மாணவர்களே வாக்காளர்களாக மாறவுள்ள சூழ்நிலையில், கடந்த பல தசாப்தங்களாக பெரும்போக்குடன் செயற்படும் வழிமுறையை மத்திய அரசு தொடர்ந்தால் பெருநட்டம் அதற்குத்தான்.

தமிழக மாணவர்களின் போராட்டத்தை, எழுச்சியை அராஜக வழியில் அடக்கிவிடலாம் என்று எண்ணுவது மேன்மேலும் பாதகமான விளைவுகளையே தரும் என்பதனை மனதில் இருத்துமா...?

# நுளம்பு ஒழிப்பில் சிறப்பாக ஈடுபடும் சபைக்குப் பரிசு

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

தென்மராட்சி, மார்ச் 27

நுளம்பு ஒழிப்புச் செயற்பாட்டில் திருப்திகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உள்ளூராட்சிச் சபைகளில் சிறந்த உள்ளூராட்சிச் சபை தெரிவு செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அறிவித்துள்ளார்.

★நுளம்பு ஒழிப்பு செயற்பாட்டில் உள்ளூராட்சி சபைகளின் தீவிர பங்களிப்பைப் பெறுதல்.

★ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபை பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச செயலகம், சுகாதாரம், கல்வி மற்றும் சமுர்த்தி போன்ற பல்வேறு நிறுவனங்களின் தீவிர பங்களிப்பை இந்த திட்டத்துக்காகப் பெறுதல்.

★கிராமங்களில் நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காக கிராம நுளம்பு ஒழிப்புக் குழுக்களின் ஊடாக சமூகத்தின் பங்களிப்பை பெறுதல்.

★ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபை பிரதேசங்களையும் நுளம்பு இனப் பெருக்கம் இல்லாத மண்டலம் எனப் பெயரிடல்.

ஆகியவற்றை போட்டிக்கான குறிக்கோளாகக் கொண்டு தெரிவுகள் இடம்பெறவுள்ளன. தெரிவுகள் உள்ளூராட்சி மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகிய குழுக்கள் மூலம் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# அரச ஊழியர்களுக்கான காணி வழங்கலில் அநீதி

## வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

வவுனியா மாவட்ட அரச ஊழியர்களுக்கான காணி வழங்கலில் தனக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும், வவுனியா பிரதேச செயலர் சட்ட விரோதமான முறையில் செயற்படுவதாகவும் தெரிவித்து வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதியால் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையென்றும், இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் வவுனியா பிரதேச செயலர் தெரிவித்தார்.

போர் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து 1995 ஆம் ஆண்டிலிருந்து வவுனியாவில் வசித்து வருவதாக தெரிவித்த உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சு.கருணாநிதி மேலும் தெரிவிக்கையில்:-

அரச ஊழியருக்கு ஓமந்தைப் பிரதேசத்தில் காணி வழங்கும் திட்டத்துக்கு அமைவாக வவுனியா முன்னாள் பிரதேச செயலரால் நடத்தப்பட்ட காணிக் கச்சேரியில் தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் எனது பெயர் இடம்பெற்றிருந்தது.

பின்பு தற்போதைய பிரதேச செயலர் ஏ.சிவபாதசுந்தரனால் நடத்தப்பட்ட காணிக் கச்சேரியிலும் எனது பெயர் தெரிவு செய்யப்பட்டு, பெயர்ப் பட்டியலும் பிரதேச செயலரினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை எனக்குக் காணி வழங்கப்படவில்லை. பிரதேச செயலரைச் சந்தித்தபோது மேன்முறையீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி மேன்முறையீடு செய்தபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் அரச காணி சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின்படி காணிக் கச்சேரி நடத்தப்பட்டுத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு காணி வழங்க வேண்டும். வேறிடங்களில் காணி உள்ளவர்களுக்கும் என்னை விடக் குறைவான சேவைக் காலம் உள்ளவர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் இந்த விடயத்தில் பண மோசடி நடவடிக்கையில் ஈடுபடுவதாகவே என்னாலும் உணர முடிகின்றது. பாதிக்கப்பட்ட பலர் காணி ஆணையாளருக்குச் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் காணி ஆணையாளரினால் விசாரணைக் குழுவொன்று அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி விடயங்களை கவனத்தில் எடுத்து எனக்கு காணி வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், சட்ட விரோதமான நடவடிக்கையில் ஈடுபடும் மேற்படி பிரதேச செயலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாப் பிராந்தியக் கிளையில் சு.கருணாநிதி முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வவுனியா பிரதேச செயலர் ஏ.சிவபாசுந்தரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

உதவித் தேர்தல் ஆணையாளர் குறிப்பிடுவது போல 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற காணிக் கச்சேரி, இரத்துச் செய்யப்பட்டு விட்டது. நான் வந்த பின்னர் நடத்திய காணிக் கச்சேரியில் உரிய ஒழுங்கு முறையில் விண்ணப்பப் படிவம் அவரால் நிரப்பித் தரப்படவில்லை. அத்துடன் நாம் விசாரணைக்கு அழைத்த போதும் அவர் சமுகமளிக்கவில்லை.

மேலும் அவர் என்னால் காணிக் கச்சேரி நடத்தப்பட்ட காலத்தில் வவுனியாவில் சேவையாற்றவில்லை. அத்துடன் நான் காணி அனுமதி வழங்கப் பணம் பெறுவது தொடர்பான குற்றச்சாட்டை மறுக்கின்றேன். என் மீது ஆதாரமில்லாத குற்றச்சாட்டை முன்வைத்தமைக்காக அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளேன் எனத் தெரிவித்தார். (த-5-400-402)

# ஊழியர் சேமலாப நிதியை சிரமமின்றிப் பெற ஏற்பாடு

அச்சுவேலி, மார்ச் 27

''ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெற்றுக்கொள்ள உரிமை உடையவர்கள் தம்மிடம் உள்ள தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரலாம். அவர்களுக்கு உரிய கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னுரிமை அடிப்படையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.''

இவ்வாறு தொழில் திணைக்கள யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீர்வேலியில் செயற்பட்டு வந்த ''சேவி'' கண்ணாடித் தொழிற்சாலையின் பணியாளர்களின் ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

சேவி கண்ணாடித் தொழிற்சாலையில் பாதிக்கப்பட்ட ஊழியர் பொது அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ந.கனகலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

1972 முதல் 1992 வரை 20 வருடகாலம் சிறப்பாக 24 மணி நேரமும் செயற்பட்ட தொழிற்சாலையில் கடமை புரிந்து ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக்கொள்ளாத ஊழியர்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டு தமது சந்தேகங்களுக்கு உரிய விளக்கத்தைக் கேட்டனர்.

ஊழியர்களின் சந்தேகங்களுக்கு உதவித் தொழில் ஆணையாளர் தொடர்ந்து விளக்கம் அளிக்கையில்:-

கண்ணாடித் தொழிற்சாலை செயலிழந்து 20 வருடங்களுக்கு மேலாகின்றது. இதில் கடமை புரிந்த ஊழியர்களில் சிலர் ஊழியர் சேமலாப நிதியை உரிய முறையில் பெற்றுள்ளனர். மேலும் பலர் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

பணிகொள்வோர் உரியகாலப் பகுதியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிக்கான கொடுப்பனவைச் செலுத்தி இருந்தால் அவர்களுக்குரிய கொடுப்பனவை உரிய முறையில் பெற்றுக்கொள்ளமுடியும். தொழிற் திணைக்களம் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

ஊழியர் சேமலாபநிதியைப் பெற்றுக் கொள்ளாத ஊழியர்கள் தங்களிடம் உள்ள ஆவணங்கள் மற்றும் தகவலுடன் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தருவது கொடுப்பனவுகளை விரைவாக பெற்றுக்கொடுப்பதற்கு உதவியாக இருக்கும்.- என்றார்.

(த-11)

# பாடசாலைகளில் மதிய உணவு அடுத்த ஆண்டுடன் நிறுத்தப்படும்

தென்மராட்சி, மார்ச் 27

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உலக உணவுத்திட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வரும் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்குத் திட்டம் அடுத்த வருடம் நிறைவு பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களைச் சமைப்பவர்களுக்குக் கொடுப்பனவோ அல்லது உலர் உணவுப் பொருள்களோ வழங்கப்படாதால் சமையல் செய்வதற்கு எவரும் முன்வருவதில்லை. இதனால் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க முடியவில்லையென அதிபர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வேளையில் மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டு பெற்றோரின் பங்களிப்புடன் திட்டத்தை செயற்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் நிறுத்தப்படுவது குறித்தும் கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

(த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிபொற்கேணி பாடசாலையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

## முசலி பிரஜைகள் குழு கடிதம்

மன்னார், மார்ச் 27

முசலி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிறி பொற்கேணி கிராமப் பாடசாலையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரும் கடிதம் ஒன்று மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சுனேஸ் சோசை தெரிவித்தார்.

சிறி பொற்கேணி கிராமம் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் ஒரு கிராமம் ஆகும். இங்கு 150 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் விவசாயத்தையும், கூலித் தொழிலையும் நம்பியுள்ளனர். இங்குள்ள மாணவர்கள் தற்போது முருங்கன், பரிகாரிகண்டல் மற்றும் வேப்பங்குளம் பாடசாலைகளுக்கு நாளாந்தம் சென்று வருகின்றனர்.

சிலர் பஸ்களிலும் வசதி அற்ற மாணவ, மாணவிகள் நடையிலும் பாடசாலைகளுக்குச் சென்று வருகின்றனர். போக்குவரத்துக் கஷ்டங்களால் சில பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலக வேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

**சிறி பொற்கேணி கிராமம் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் ஒரு கிராமம் ஆகும். இங்கு 150 குடும்பங்கள் வசித்து வருகின்றன.**

இந்த மாணவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு சிறி பொற்கேணிக் கிராமத்தில் அமைந்துள்ள பாட்சாலையை மீளவும் ஆரம்பிக்குமாறு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

# மன்னாரில் நீங்கியது 'பாஸ்' நடைமுறைகள்

## மீனவ சங்க சமாசத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 27

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடற்படையினரினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாஸ் நடைமுறை தளர்த்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடந்த பல வருடங்களாக கடற்படையினரினால் பாஸ் நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் குறித்த பாஸ் நடைமுறையை தளர்த்தக் கோரி தொடர்ச்சியாக மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசம் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தது.

இந்த நிலையில் கடந்த வாரம் மன்னாருக்கு வருகை தந்த கடற்றொழில் பிரதி அமைச்சர் மீனவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன் பாஸ் நடைமுறையைத் தளர்த்துமாறு உரிய தரப்பினிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது கடற்படையினரினால் வழங்கப்பட்டு வரும் கடற்றொழில் பாஸ் நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

**குறித்த பாஸ் நடைமுறையை தளர்த்தக் கோரி தொடர்ச்சியாக மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசம் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தது.**

மீனவர்கள் அரசினால் தடை செய்யப்பட்ட தொழில் முறைமைகளைத் தவிர அனைத்துத் தொழில்களையும் மேற்கொள்ள முடியும்.

மீனவ அடையாள அட்டை வழங்கப்படும் வரை தேசிய அடையாள அட்டையினைக் கடற்படையினருக்குக் காண்பித்து விட்டுத் தொழிலுக்குச் செல்ல முடியும்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அனைவருக்கும் மன்னார் மாவட்ட மீனவர்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

# பயன்படுத்தப்படாத நிலையில் நூலக அபிவிருத்திக்கான நிதி

## விரைவில் பணிகள் ஆரம்பமாகும் என்கிறார் பூநகரி தவிசாளர்

பூநகரி, மார்ச் 27

பூநகரி பிரதேச சபையின் பொது நூலக அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதி இதுவரை பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போரினால் அழிவடைந்த பூநகரி பொது நூலகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் எனப் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக பூநகரிப் பிரதேசத்துக்கான கனடா சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் 5 இலட்சம் ரூபா கடந்த வருடம் நவம்பர் மாதம் பிரதேச சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும் இதுவரை அந்த நிதி பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராசாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இந்த நிதியைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத் திட்டங்களுக்கான அனுமதியை உள்ளூராட்சி ஆணையாளர் இதுவரை வழங்கவில்லை. மேலும் சபையில் நிரந்தரமாகக் கணக்காளர் இல்லாத காரணத்தாலும் அந்த நிதி பயன்படுத்தாமல் உள்ளது.

விரைவில் இந்த நிதி மூலமாக நூலகத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது- என்றார். (க-14)

## லண்டனில் 'அம்மா' குறும்படம்

வவுனியாவில் தயாரிக்கப்பட்ட குறும்படம் ஒன்று லண்டன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த இளைஞரான த.பிரபாகரனின் இயக்கத்தில் இந்தக் குறும்படம் வெளிவந்துள்ளது. இதனை பாலேந்திரன் தயாரிக்க இதற்கான இசையை கந்தப்பு ஜெயந்தன் அமைத்துள்ளார்.

'அம்மா' என்னும் பெயர் சூட்டப்பட்ட இந்தக் குறும்படம் சிவராத்திரி தினத்தன்று லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் தீபம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

இதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-421)




வியப்பூட்டும் விலைக்குறைப்பு

தினசரி சென்னை சேவை

சென்னை 8,100/= (செல்ல மட்டும்)
சென்னை 15,000/= upwards (சென்று திரும்ப)

Baggage allowance 37 kgs.
Complementary Meals provided
(all inclusive) Upwards

AIR - INDIA express

Groups fares offer only over 15 passengers.

Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818
or Contact your nearest Travel Agent


# மின் கம்பங்களை நடுவதற்கு எதிர்ப்பு; மின் இணைப்பு வேலைகளில் தாமதம்

துணுக்காய், மார்ச் 27

உயிலங்குளத்தில் மின்கம்பங்களை நடுவதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் மின் இணைப்பு வேலைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

துணுக்காய் உயிலங்குளம் அணைக்கட்டின் கீழான வீதியில் தற்போது மின்கம்பங்கள் நடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நடப்பட்ட மின் கம்பங்களை சற்று நகர்த்தி வீதியோரங்களில் நடுவதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதன் காரணமாக மின் இணைப்பு வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மின் கம்பங்களை உரிய வகையில் நட்ட பின்னரே தென்னியங்குளம் வரை மின்னிணைப்பை வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உயிலங் குளத்திலுள்ள காணி உரிமையாளர்கள் இது தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டுக்குவரவேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-18)


ST.JOHN'S COLLEGE, JAFFNA.
VACANCIES

Applications are here by invited from qualified persons for the following Vacancies

1. To teach English Medium Biology for A/L classes
2. To teach English Medium Economics for A/L classes

Please send Your complete CV including the contact details of two non-related referees by post or via e-mail on or *before 03rd April 2013* to the following address. Only shortlisted candidates will be called for the interview.

The Principal
St.John's College, Jaffna.
stjohns@sltnet.lk

(C/7338)(6.7.11)



சாரதிகள் (பயிற்சி) பாடசாலைகள்



சாரதி பாடசாலைகளின் எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக நடத்தப்படும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் விஷேடமானதுமான கலந்துரையாடலொன்று **2013 மார்ச் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை** காலை 9 மணிக்கு இடம் பெறுகிறது. அனைத்து சாரதிகள் பாடசாலைகளின் உரிமையளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்:- நாரஹேன்பிட்டி பாலிக்கா மண்டபம்
(அப்பலோ மருத்துவமனையின் பின்புறம்)
மேலதிக விபரங்களுக்கு:-

TP: 0777635747, 0772621441, 0777304539, 0776391571

(சி/7206)

அகில இலங்கை சாரதிகள் பாடசாலைகளின் உரிமையாளர்கள் சங்கம்



விற்பனைக்கு

வாகனசேவிஸ் நிலைய அனைத்து உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:0716 543 433

(சி/7348)(6.7)


கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி உப அதிபர் சாந்தினி நாகராஜா அவர்களின் அன்புக் கணவர்

**வல்லிபுரம் நாகராஜா**

இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்,
யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி,
சுன்னாகம். (c/7347)(6.7.11)

## கழிவு நீரால் கேடு

வவுனியா வேப்பங்குளப் பகுதியில் அமைந்துள்ள அரிசி ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்துவதாக அப்பகுதியில் வசிக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வேப்பங்குளம் / ஆவது ஒழுங்கைப் பகுதியில் இந்த அரிசி ஆலை இயங்கி வருகின்றது. இந்த ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் துர்நாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் சுகாதாரக் கேடுகளை எதிர்கொள்வதாகத் தெரிகின்றது.

இது தொடர்பாக மக்கள் பலமுறை முறைப்பாடு தெரிவித்தபோதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. (க-402)

மரண அறிவித்தல்

**சின்னப்பு சிவக்கொழுந்து**



மடத்தடி,சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சிவக்கொழுந்து நேற்று(26.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சிவானந்தன் (ஆனந்தி-மகன்),
ஜெயந்தி சிவானந்தன்
(ஆசிரியர், யா/ றோ.க.த.பாடசாலை,ஆனைக்கோட்டை)

கா்மலையடி,
சண்டிலிப்பாய்.
(34898)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை அபிவிருத்தி நிலை குறித்து உலக வங்கிக் குழுவினர் ஆராய்வு




வடமராட்சி, மார்ச் 27

வல்வெட்டித்துறை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்காகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடை முறைப்படுத்துவது குறித்தும் உலக வங்கிக் குழுவினர் கலந்துரையாடியுள்ளனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கிக் குழுவினர் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் வல்வெட்டித்துறை நகரசபையைத் தெரிவுசெய்தனர்.

இதனையடுத்து அண்மையில் அங்கு சென்று வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், உறுப்பினர்களான சூ.சே.குலநாயகம், ஜெயராஜா, திருமதி கைலாஜினி இந்திரன் மற்றும் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

உலக வங்கிக் குழு சார்பில் ஆஸ்திரேலிய அரசின் சர்வதேச அபிவிருத்திக்கான ஆஸ்திரேலிய முதல் செயலாளர் ஸ்ரீவன் வார்சோனெக், ஆஸ்திரேலிய தூதரகத்தின் சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலர் திருமதி டில்கார குணவர்த்தன, உலக வங்கியின் இணைப்பாளர் சரத் விக்கிரமரட்ண, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சுற்றுலாத்துறைப் பணிப்பாளர் அஷ்ரப் மற்றும் உலக வங்கிக் குழுவின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

வல்வெட்டித்துறையின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தேவைகள் அடங்கிய அறிக்கை மற்றும் படங்களைக் கொண்ட செயற்றிட்ட நகல் உலக வங்கி அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நகலில் வல்வெட்டித்துறை மீன்பிடித்துறை வளர்ச்சி, துறைமுக அபிவிருத்தி, விவசாயம், பூங்கனிச் செய்கை, கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள், விளையாட்டுத்துறை, சுற்றுலாத் துறை அபிவிருத்தி, பொது நூலகம், பொதுப் பூங்கா மற்றும் குளங்கள் ஆழப்படுத்தல், வீதிகளை அபிவிருத்தி செய்தல், தொண்டமானாறு வெளிக்கள நிலைய அபிவிருத்தி போன்ற பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் நகரசபையால் முன்வைக்கப்பட்டிருந்தன.

சுமார் ஐந்தரை மணி நேரம் வல்வெட்டித்துறையில் தங்கி நின்ற இந்தக் குழுவினர் அபிவிருத்தித் திட்டங்களில் இடம்பெற்ற வேலைகளைப் பார்வையிட்டனர். நகரத்தின் தேவைகளையும் கேட்டறிந்தனர்.

வல்வெட்டித்துறையின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் நிறைவேற்றப்படுவதில் உள்ள இடர்ப்பாடுகள் மற்றும் தடைகள் தொடர்பாக உலக வங்கிக் குழுவினருடன் வருகை தந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சுற்றுலாத்துறைப் பணிப்பாளர் அஷ்ரப் குறிப்பிடுகையில்:-

நகர அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு தலைவரும், உறுப்பினரும் செயற்பட வேண்டும். ஒருங்கிணைப்புக் குழுவில் உரையாடி அவற்றுக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இதன் மூலமே அபிவிருத்தி வேலைகள் துரிதமாக முன்னெடுக்க முடியும்.

வல்வெட்டித்துறை நகரசபையைப் பொறுத்தவரையில் இருதரப்பினரும் புரிந்துணர்வுடன் செயற்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.- என்றார்.

கலந்துரையாடலை அடுத்து நகர எல்லைக்குள் உள்ள வாடி ஒழுங்கை, நெற்கொழு ஆகிய இடங்களில் நடைபெற்ற வேலைத் திட்டங்களைக் குழுவினர் பார்வையிட்டனர். அத்துடன் இந்த ஆண்டுக்கான முன்மொழிவுகளை நிறைவேற்றத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். (ம-8)

## இயற்றாலையில் டெங்கு விழிப்புணர்வு

தென்மராட்சி, மார்ச் 27

வரணி-இயற்றாலைப் பகுதியில் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் சுகாதாரப் பகுதியினர் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை அண்மையில் மேற்கொண்டனர்.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள், நிறுவனத் தொண்டர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் அந்தப் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

வரணி- இயற்றாலை பொதுநோக்கு மண்டபத்தில் பிரதேச மக்களுக்கான உணவு, நீர் மூலமாக பரவும் நோய்த்தடுப்பு மற்றும் தனி நபர் சுகாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான கருத்தரங்கும் நடத்தப்பட்டது. (வ-9)

## ஓட்டோவிலிருந்து பற்றரியைத் திருடியவர் நீதிமன்றில்

வலி. வடக்கு மார்ச் 27

ஓட்டோவில் இருந்து பற்றரியைத் திருடிய குற்றச்சாட்டின் பெயரில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

நல்லூரைச் சேர்ந்த பொன்னையா முரளிதரன் என்பவரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நல்லூர் கொண்டலடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் இருந்து ஆறாயிரத்து 250 ரூபா பெறுமதியான பற்றரி மீட்கப்பட்டதுடன் அவர் சரீரப் பிணையில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். (வ-86)

## சுற்றுவட்டம் இல்லை; ஆபத்தில் கைதடிச் சந்தி



கைதடி, மார்ச் 27

கைதடிச் சந்தியில் கட்டாயச் சுற்று வட்டம் (ரவுண்ட் எபவுர்ட்)இல்லாத காரணத்தினால் வீதியால் செல்வோர் தினமும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாக பொது மக்களால் முறைப் பாடுகள் தெரிவிக்கப்படு கின்றன.

கைதடிச் சந்தியில் சாவகச்சேரி வீதி (ஏ - 9), யாழ்ப்பாணம் (ஏ - 9) வீதி மற்றும் கோப்பாய் வீதி ஆகிய மூன்று வீதிகளும் சந்திக்கும் இடத்தில் முன்னர் கட்டாயச் சுற்றுவட்டம் இருந்தது. கடந்த ஆண்டு கைதடிச் சந்தியின் வீதி அகலப்படுத்தப்பட்டிருந்தது. புதிதாகத் திருத்தம் செய்யப்பட்ட வேளை இக்கட்டாயச் சுற்று வட்டம் அகற்றப்பட்டுவிட்டது. ஆனால் அதனை இப்பகுதியில் மீளவும் அமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

இதேவேளை கடந்த வாரம் இரவு வேளை இந்த வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டாயச் சுற்றுவட்டம் இல்லாத காரணத்தினால் எதிரே வந்த வாகனத்துடன் மோதிய போதும் வாகன சாரதியின் சாமர்த்தியத்தினால் உயிரிழப்போ சேதமோ இல்லாமல் மயிரிழையில் தப்பிக்கொண்ட சம்பவம் இடம்பெற்றது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடிக் கவனம் எடுத்து சுற்றுவட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-288)

## வரணி வைத்தியசாலைக்கு விரைவில் அம்புலன்ஸ்

தென்மராட்சி, மார்ச் 27

வரணி வைத்தியசாலைக்கு விரைவில் அம்புலன்ஸ் வாகனம் வழங்கப்படும். இவ்வாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வரணி மற்றும் கைதடிப் பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கு விரைவில் கொண்டு வரப்படவுள்ள அம்புலன்ஸ்களில் ஒன்று வரணி வைத்தியசாலைக்கு வழங்கப்படும். யாழ். மாவட்டத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் உதவி வைத்தியர்கள் மூலம் மக்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

**வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படும் போது குறித்த வைத்திய சாலைக்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.**

வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படும் போது குறித்த வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படுவர். கைத டியில் அமைக்கப்பட்டு வரும் வைத்தியசாலைக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும் அதனை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (வ-9)

## சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் வீதிகளை புனரமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, மார்ச் 27

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பல வீதிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுவதாகவும் அவற்றைப் புனரமைத்து வழங்குமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப் பட்டது.

இதற்குப் பதிலளித்த சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா சபையின் வருமானம் குறைவாக உள்ளதால் சபை நிதி மூலம் சேதமுற்ற வீதிகளை தார் வீதியாக மாற்ற இயலாது.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் நிதி உதவி கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் வீதிகள் தார் வீதியாக மாற்ற முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்-

பல்வேறு வீதிகளுக்கு நிதி கோரி மதிப்பீடுகள் தயாரித்து அனுப்பியுள்ளதாகவும் அங்கிருந்து அனுமதி கிடைத்ததும் இவ்வருட இறுதிக்குள் வேலைகள் முன்னெடுக்கப்படுமெனவும் கூறினார். (வ-9)

## ஆவரங்கால் தும்புத் தொழிற்சாலை மீண்டும் இயங்க ஆரம்பித்தது

வடமராட்சி, மார்ச் 27

ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலைய தும்புத் தொற்சாலை இரண்டு வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன் தும்புத் தொழிற்சாலை கட்டப்பட்டு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2007 ஆம் ஆண்டு முதல் இந்த தொழிற்சாலை இயங்கி வந்தது. இதற்கென 23 இலட்சம் ரூபாவை நிதியாக யு.என்.டி.பி. நிறுவனம் வழங்கியிருந்தது.

25 யுவதிகள் பயிற்சி [illegible] சாலையில் வேலை வாய்ப்பு பெற்றிருந்ததுடன் தும்பு உற்பத்திப் பொருள்களுக்கு பெரும் கிராக்கியும் இருந்து வந்தது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கை உற்பத்திப் பொருள்கள் இங்கு வந்து சேர்ந்ததால் இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட தும்புப் பொருள்களுக்கு கிராக்கி இல்லாமல் போனதுடன் சந்தை வாய்ப்பும் கிட்டாமல் போனது. இதனால் தொழிற்சாலை கடந்த இரண்டு வருடங்களாக இயங்கவில்லை.

தற்போது கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.பிரதீபன் எடுத்த முயற்சியாலும் அவரால் வழங்கப்பட்ட ஆலோசனை [illegible] திறக்கப் பட்டு தும்புத் தொழிற்சாலை மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## டெங்குக்கு போட்டியாக உண்ணிக் காய்ச்சல்

### தென்மராட்சிப் பகுதியில்

தென்மராட்சி, மார்ச் 27

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலுக்குப் போட்டியாக உண்ணிக் காய்ச்சலும் உருவெடுத்துள்ளது.

இந்த மாதம் டெங்கு காய்ச்சலால் இதுவரை ஆறு பேர் பீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதனைவிட உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோரின் தொகை அதிகரித்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அடிக்கடி மழை பெய்து வருவதால் ஆலயங்களில் உற்சவங்கள் ஆரம்பித்துள்ள நிலையில் ஆலய சுற்றாடலைத் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபடுவோரில் பெரும்பாலோர் உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

சிறு பூண்டுகளுக்குக் கீழ் உண்ணிகள் காணப்படுவதால் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவோர் கால் உறைகளைப் பயன்படுத்துமாறும், இவ்வாறான தொழில்களில் ஈடுபடுவோர் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா காந்திக்கும், எம்.ஜி.ஆருக்குமே ஈழத் தமிழர் விவகாரத்தில் அக்கறை

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை, மார்ச் 27

இலங்கைப் பிரச்சினையில் இந்திரா காந்திக்கும் எம்.ஜி.ஆருக்கும் மட்டுமே முழுமையான அக்கறை இருந்தது என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.

ஊட்டியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க- அ.தி.மு.க. இரு கட்சிகளுமே தொடர்ந்து நாடகம் ஆடி வருகின்றன. உண்மையிலேயே அந்தக் கட்சிகளுக்கு இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை இல்லை.

அரசு, மக்கள் அவையில் இலங்கைத் தமிழர் நல்வாழ்வு தொடர்பாகவும், ராஜபக்ஷவை போர்க் குற்றவாளி என்றும் அறிவிக்க, தீர்மானம் கொண்டு வரவேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் இந்திரா காந்திக்கும் எம்.ஜி.ஆருக்கும் மட்டுமே முழுமையான அக்கறை இருந்தது. அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருக்குமே அக்கறை இல்லை. அவர்கள் இருவர் மட்டும் இன்னும் சில காலம் உயிருடன் இருந்திருந்தால் தமிழீழம் பிறந்திருக்கும். ஆனாலும் பா.ம.க. மட்டுமே தடம் மாறாமல் தொடர்ந்து போராடி வருகிறது.

எதிர்வரும் மக்கள் அவைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையே பிரதான விடயமாகஇருக்கும். அதனால் திராவிட இயக்கங்களோடும், தேசியக் கட்சிகளோடும் பா.ம.க. கூட்டணி வைக்காது. தனித்துப் போட்டியிடும். ஒருமித்த கருத்துக் கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதற்கு பா.ம.க. முயற்சி மேற் கொள்ளும். பா.ம.க. பத்து தொகுதிகளில் போட்டியி டும் - என்றார். (வ)

## 2 ஆம் உலகப் போரில் நொறுங்கிய அமெ. விமானப் பாகங்கள் சிக்கின



இரண்டாம் உலகப் போரின்போது அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள ஓலாம் ஹில்ஸ் மலைப் பகுதியில் விழுந்து நொறுங்கிய அமெரிக்கப் போர் விமானத்தின் உடைந்த பாகங்கள் மற்றும் அதில் பயணித்த சில வீரர்களின் எலும்புக் கூடுகள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காமெங் மாவட்டம், கேஷே பகாங் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஓலாம் ஹில்ஸ் மலைப் பகுதிக்கு சென்றபோது விமான பாகங்கள் உடைந்து கிடப்பதைக் கண்டுபிடித்து இராணுவத்துக்கு தகவல் கொடுத்தனர்.

அதனையடுத்து, குறித்த காட்டுப் பகுதியில் இராணுவ வீரர்கள் தொடர்ச்சியாக 4 நாள்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது பிளாக் ஹாக் விமானத்தின் உடைந்த பாகங்களை அந்தக் குழுவினர் கண்டுபிடித்தனர்.

அந்த விமானத்தில் சென்ற வீரர்களின் எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் அவை இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டன.

இதேவேளை, குறித்த பகுதியில் 2010 ஆம் ஆண்டு பானி பகாங் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், விமானத்தின் உடைந்த பாகங்களை கண்டுபிடித்தார். மனித எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஹெலி கொப்டர் ஒப்பந்தத்தில் ஊழல்; ஒப்புக்கொண்டார் பாதுகாப்பு அமைச்சர்

கொச்சி, மார்ச் 27

இத்தாலி நிறுவனத்திடம் இருந்து ஹெலிகொப்டர்கள் வாங்கிய விவகாரத்தில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.

முக்கியஸ்தர்கள் பயணம் செய்வதற்கு இராணுவத்துக்கு இத்தாலியைச் சேர்ந்த நிறுவனத்திடம் இருந்து ஹெலி கொப்டர்கள் வாங்கியதில் ரூ.400 கோடி அளவுக்கு ஊழல் இடம் பெற்றுள்ள தாகவும் விமானப் படை முன்னாள் தளபதி தியாகிக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டதாகவும் முறைப்பாடுகள் எழுந்தன.

இது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு அரசு உத்தரவிட்டது. இந்தநிலையில், கொச்சியில் நேற்று முன்தினம் பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்ததாவது:-

இராணுவத்துக்கு ஹெலி கொப்டர்கள் வாங்கிய விவகாரத்தில் ஊழல் இடம்பெற்றுள்ளது. இந்த பேரத்தில் இலஞ்சம் வாங்கப்பட்டுள்ளது. இது குறித்து சி.பி.ஐ. தீவிரமாக விசாரித்து வருகிறது.

தயவு செய்து சிறிது காலம் பொறுத்திருங்கள். இந்த ஊழலில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஊழலில் ஈடுபட்ட வர்கள் யாராக இருந்தாலும் தப்ப முடியாது-என்றார். (வ)

## இத்தாலி மாலுமிகள் மீதான விசாரணை டில்லி பாட்டியாலா நீதிமன்றில்

இந்திய மீனவர்கள் 2 பேரை சுட்டுக் கொன்ற இத் தாலிய கப்பல் மாலுமிகள் மீதான கொலை வழக்கை சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்ததை அடுத்து, வழக்கு டில்லி பாட்டியாலா சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஏப்ரல் முதல் வாரத்தில் இந்த வழக் கின் விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் ஆரம்பமாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் சிறப்பு நீதிமன்றம் இயங்கும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. ஆலப் புழா அருகே கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இத்தாலி வணிகக் கப்பலின் மாலுமிகள் சுட்டதில் மீனவர் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## தே.மு.திக. எம்.எல்.ஏக்களின் இடைநீக்கம் 6 மாதமாக குறைப்பு

தே.மு.தி.க. சட்ட சபை உறுப்பினர்கள் 6 பேர் சட்ட சபையில் இருந்து ஓராண்டுக்கு இடைநீக்கம் செய்யப்பட்டமை 6 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டசபையில் நேற்று பேசிய சபாநாயகர், தே.மு.தி.க. உறுப்பினர்களை தாக்கிய 6 தே.மு.தி.க. சட்டசபை உறுப்பினர்கள் மீதான தண்டனையை 6 மாதங்களாகக் குறைப்பதாக அறிவித்தார்.

மேலும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பரிந்துரையின் பேரில், இந்த தண்டனைக் குறைப்பைச் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதே வேளை சேலத் தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பாக வீதி மறியலில் ஈடுபட்ட தே.மு.தி.கவினர் 50 இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

தே.மு.தி.க. உறுப்பினர்கள் 6 பேரை சட்ட சபையில் இருந்து இடைநிறுத்தியதாகக் கண்டித்து தே.மு.தி.கவினர் பல இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர். (வ)


## மரண அறிவித்தல்



### நல்லையா தர்மகுலசிங்கம்

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் - வவுனியா)

நவிண்டில், கரணவாயைப் பிறப்பிடமாகவும், இல. 67, நாவலர் வீதி, பண்டாரிக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா தர்மகுலசிங்கம் நேற்று முன்தினம் (25.03.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்வராணி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், சிவகுருநாதன் (நாராயண தாசன்), காலஞ்சென்ற ரோகினியம்மா (பொன்னாலை) ஆகியோரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், கிரிஷாந்தி, அருணன், அஞ்சனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், முகுந்தனின் அன்பு மாமனும், மானஷாவின் பாசமிகு பேரனும், விஜயராணி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் ஜெயவீரசிங்கம் (துங்கன்- வர்த்தகர் சாவகச்சேரி), சோதிமலர், பத்மராணி ஆகியோரின் பாசமிகு சகோ தரனும், வரதராஜா (ஓய்வுபெற்ற நீதிவான் - உயர் நீதிமன்றம்), புலேந்திரன், பாக்கியலட்சுமி, ரங்கராஜா (ஓய்வுபெற்ற ஆளுநரின் செயலாளர் - வட மாகாணம்), சௌந்தரராஜன் (பொறியியலாளர் - Bahrain), சிவகுருநாதன் ஜெயலட்சுமி, சிவநாதன், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் நகுலேந்திரராஜா, வளர்மதி, கணேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற புலேந்திரனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை மதியம் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சிணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

024 222 1996,
077 0544 590.

தகவல்:
குடும்பத்தினர்.


(26194) (45.6.7)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### கனகசபை பரமநாதன்

தோற்றம்
09.07.1932

மறைவு
19.03.2011



எங்கள் குடும்ப விளக்காய்
வாழ்ந்திட்ட தெய்வமே!
எத்தனை உறவுகள் இருந்தாலும்
உங்களுக்கு ஈடாகுமா
ஆண்டிரண்டு சென்றாலும்
ஆறாது எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இந்துக்கல்லூரி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகாம்பிகை சுப்பிரமணியம்



இயக்கச்சி, முகாவிலைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை சுப்பிரமணியம் கடந்த 24.03.2013 ஞாயிற்றுக் கிழமை இறைபத மடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.
077 645 4401

(27804)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய - அமெ. உறவு பதற்றத்தையே உருவாக்கும்

## எச்சரிக்கின்றது வடகொரியா

பியாங்யாங், மார்ச் 27

அமெரிக்காவுடன் தென்கொரியா புதிதாக மேற்கொண்டுள்ள இராணுவ ஒப்பந்தம் ஆத்திரமூட்டுவனவாக அமைந்துள்ளது என்று வட கொரியா தெரிவித்துள்ளது.

தென்கொரியா, அமெரிக்காவுடன் புதிய இராணுவ ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. அதனடிப்படையில் வடகொரியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களைச் சமாளிக்க இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே தென்கொரியாவின் இத்தகைய நடவடிக்கைகள் மேலும் ஆத்திரமூட்டுவனவாக் அமைந்துள்ளன என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

''அமெரிக்காவுடனான உறவுகளை தென்கொரியா பலப்படுத்தி வருகின்றது. அதன்மூலம் வடகொரியாவுக்கு மறைமுக எச்சரிக்கையை தென்கொரியா விடுக்கிறது. அமெரிக்கப் படைகளை தென்கொரியாவில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். இந்தநிலையில் தென்கொரியா அமெரிக்காவுடன் புதிய இராணு ஒப்பந்தங்களை மேற்கொள்வது எம்மை ஆத்திரமடைய வைக்கிறது''- இவ்வாறு வடகொரியா தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள தென்கொரிய அதிகாரிகள்,

''வடகொரியாவில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு எமக்கு அமெரிக்காவின் வழிகாட்டல்கள் தேவை. இதுகுறித்து நாம் யாருடைய அழுத்தங்களையும் கருத்தில் கொள்ளத் தேவையில்லை''- என்று குறிப்பிட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு வடகொரியா, தென்கொரியா மீது எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதுடன், தென்கொரிய போர்க்கப்பல் ஒன்றையும் மூழ்கடித்திருந்தது. அதில் 46 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னரே தென்கொரிய - அமெரிக்க இராணுவ உறவு வலுப்பட ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சிரிய போராளிக் குழுவின் முக்கிய தளபதி காயம்



அலப்போ, மார்ச் 27

சிரியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் சிரிய போராளிக் குழுவின் முக்கிய தளபதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரிய போராளிக் குழு உருவாக்கத்தில் முக்கிய பங்குவகித்த கேணல் ரியாட் அல் அசாட் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

அசாட், டியா அல் சோ மாகாணத்தில் வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோதே குண்டுவெடிப்பில் சிக்கினார் என்று கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பில் அவரது கால் பகுதியில் கடும் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், காலை அகற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவமனை வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## தற்கொலைத் தாக்குதல்

### ஆப்கனில் 5 பொலிஸார் உயிரிழப்பு

காபூல், மார்ச் 27

ஆப்கனில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 5 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். ஆப்கனின் ஜலாலபாத் நகரில் உள்ள பொலிஸ் நிலையத்தைக் குறி வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

8 தீவிரவாதிகள் தமது உடலில் குண்டுகளைக் கட்டியவாறு நிலையத்துக்குள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு தலிபான்கள் உரிமை கோரியுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.(ற)

## முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு அதிக பாதுகாப்பு வழங்க வேண்டும்

### பாகிஸ்தான் இராணுவம் வலியுறுத்து

இஸ்லாமாபாத், மார்ச் 27

பாகிஸ்தான் திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அந்த நாட்டு இராணுவம் வலியுறுத்தியுள்ளது.

முஷாரப் மீது பெனாசிர் பூட்டோ கொலை உட்பட பல்வேறு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. அதையடுத்து பதவியிழந்த பின்னர் நாட்டைவிட்டு வெளியேறிய முஷாரப் லண்டன் மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் தஞ்சமடைந் திருந்தார்.

தற்போது எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் பொருட்டு நாடு திரும்பியுள்ளார் முஷாரப். அவருக்கு தலிபான் தீவிரவாத அமைப்பு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளது. அதை அடுத்தே பாகிஸ்தான் இராணுவம் முஷாரப்புக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க வேண் டும் என்று உள்துறை அமைச் சைக் கோரியுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சு கருத்து வெளியிடுகையில்,

''முஷாரப்பின் பாதுகாப்புக் குறித்து இராணுவம் எமக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. முஷாரப் தனது பாதுகாப்புக் குறித்து எம்முடன் கலந்துரையாடவில்லை. எனினும் அவரின் பாதுகாப்புக் குறித்து நாம் கவனமெடுத்துள்ளோம்.''- என்று தெரிவித்துள்ளது. (ற)

## சைப்பிரஸுக்கு நிதியுதவி; யூரோ நாடுகள் இணக்கம்

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 27

நிதிநெருக்கடி காரணமாக திவால் ஆவதைத் தடுப்பதற்காக சைப்பிரஸ் நாட்டுக்கு ரூ.210, 600 கோடி நிதியுதவி அளிக்க யூரோ நாணய உறுப்பு நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில், யூரோ நாணய உறுப்பு நாடுகளின் அவசரக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. 9 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்ற அந்தக்கூட்டத்தின் இறுதியில் இந்த முடிவு எடுக்கப்படுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற)

## 100 கோடி பார்வையாளர்

### சாதனை படைக்கிறது 'யூரியூப்'

நியூயோர்க், மார்ச் 27

ஒருமாதத்தில் 'யூரியூப்' இணையத்தளத்தைப் பார்வையிடுபவர்களின் எண்ணிக்கை 100 கோடியை எட்டியுள்ளது என்று கூகுள் நிறுவனம் தெரிவிக்கிறது.

இதுகுறித்து கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''யூரியூப் இணையத்தளத்தின் மாதாந்த பார்வையாளர்கள் எண்ணிக்கை 100 கோடியை எட்டியுள்ளது. இது ஒரு மகத்தான சாதனை. இன்று உலகின் பலம்வாய்ந்த ஊடகமாக யூரியூப் மாற்றம் பெற்றுள்ளது.'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'யூரியூப்' இணையத்தளத்தை 2005ஆம் ஆண்டு பேபால் நிறுவன ஊழியர்களிடம் இருந்து சுமார் 27,000 கோடி ரூபாவுக்கு கூகிள் நிறுவனம் வாங்கியது. அப்போது அதன் மாதாந்தப் பார்வையாளர்களின் எண்ணிக்கை 5 கோடியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



## தோழியைக் கவர முயற்சித்தவர் பொலிஸாரால் எச்சரிக்கை


தோழியின் மனதைக் கவர சினிமாப் பாணியில் திட்ட மிட்டவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

அமெரிக்காவின் ஜோன்ஸ் போரோ நகரைச் சேர்ந்தவர் 26 வயதுடைய ஜெப்ரி டைகர் சீகல். இவர் தன் தோழியின் மனதைக் கவர தமது நண்பருடன் இணைந்து ஒரு திட்டம் தீட்டினார். அதன்படி சீகல் அந்தப் பெண்ணுடன் நடந்து செல்லும் வழியில் அவரது நண்பர் கத்தியுடன் வந்து மிரட்ட வேண்டும். திட்டத்தின் படி சீகலும், தோழியும் வீதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென வழிமறித்த முகமூடி அணிந்த நண்பர். பெண்ணை தன்னிடம் விட்டு விட்டு ஓடிவிடு மாறு சீகலை மிரட்டினார்.

அதன்பின்னர் இருவரின் திட்டத்தில் இல்லாத சம்பவங்கள் நடக்கத் தொடங்கின. சீகல் கதாநாயகன் வேலையில் இறங்குமுன் தோழி சீகலை அங்கேயே விட்டு விட்டு அலறியடித்துக் கொண்டு ஓடிவிட்டார். ஓடிக்கொண்டே பொலிஸாரையும் அழைத்து விட்டார். அதைக்கண்ட நண்பர் மறு பக்கத்தால் தலை தெறிக்க ஓடிவிட்டார். பாவம் சீகல் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். சீகலை விசாரிக்கும்போது, சீகல் நண்பருக்கு அனுப்பிய குறுந்தகவல்கள் அகப்பட்டன. அதை யடுத்து அவர்களின் திட்டமும் அம்பலமானது. சீகலை எச்சரித்த பொலிஸார்வழக்குப் பதிவு செய் யாது விட்டுவிட்டனராம்.(ற)

## ஓயாத கலவரம்

### மியன்மாரின் ஏனைய நகர்களுக்கும் பரவுகிறது



மெக்ரியா, மார்ச் 27

மியன்மார் மெக்ரியா நகரில் கடந்த புதன்கிழமை இரு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடையேயான வன்முறைச் சம்பவங்கள் மேலும் சில நகரங்களுக்கும் பரவியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மற்றொரு நகரான கோனில் உள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான பள்ளிவாசல், கடைகள் மற்றும் வீடுகள் தாக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

300க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட குழுவே அங்கு வன்முறைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது. அதையடுத்து முஸ்லிம்கள் நகரை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

வன்முறைகள் காரணமாக இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## இந்தோனேஷிய நிலச்சரிவு

### 6 பேர் சாவு; 11 பேரைக் காணவில்லை

ஜகார்த்தா, மார்ச் 27

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 11 பேர் காணாமற்போயுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 4 பேர் குழந்தைகள் என்று மீட்புப்படையினர் தெரிவித்துள்ள னர்.

இந்தோனேஷியாவில் தற்போது கடும் மழை பெய்து வருகின்றது. அதனால் அங்குள்ள மலைக்கிராமங்கள் நிலச்சரிவு அபாயத்தை எதிர்கொண்டு வருகின்றன. (ற)

## பக்ரம் சிறைச்சாலை நிர்வாகம் ஆப்கன் அரசிடம் கையளிப்பு

காபூல், மார்ச் 27

ஆப்கனின் மிகப் பெரிய சிறைச்சாலையான பக்ரம் சிறைச்சாலையின் நிர்வாகம் ஆப்கன் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பென்டகன் தெரிவித்துள்ளது.

ஆப்கனில் நேட்டா படை நடவடிக்கை ஆரம்பித்தது முதல் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தச் சிறைச்சாலை கடந்த திங்கட்கிழமை ஆப்கன் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

ஆப்கனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பதற்றத்தைக் குறைக்கும் விதத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக இடம்பெற்ற இந்தக் கையளிப்பு நிகழ்வு காபூலின் வடக்கே உள்ள பக்ராம் இராணுவத் தளத்துக்கு அண்மையில் பார்வான் கைதிகள் அடைப்பு நிலையத்தில் நிகழ்ந்தது.

தற்போது பக்ரம் சிறைச்சாலையின் நிர்வாகம் முற்றிலும் ஆப்கான் அரசிடம் ஒப்படைக்கப்பட்ட போதும் மிக ஆபத்தான கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஆப்கன் அரசுகள் இணைந்தே முடிவெடுக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி சிறைச்சாலையை 2012 செப்ரெம்பர் மாதம் ஆப்கன் அரசுக்கு அமெரிக்கா வழங்குவதாக இருந்த போதும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் அது பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின் வைத்திருந்த ஐந்து பேர் வசமாகச் சிக்கினர்

கொழும்பு,மார்ச் 27

பாதுக்க - மீகொட பிரதேசத்தில் வீடொன்றினுள் ஹெரோயின் பொதி செய்து கொண்டிருந்த பெண் உள்ளிட்ட ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண புலனாய்வு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து 727 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

# தமிழ், சிங்களத்தில் தேசிய அ.அட்டை நாடெங்கும் விநியோகிக்க வேண்டும்

## உயர் நீதிமன்றில் மஹரகம வாசி மனுத் தாக்கல்

தேசிய அடையாள அட்டையை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் விநியோகிக்குமாறு கோரி அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு மஹரகம பகுதியில் உள்ள நபர் ஒருவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்கை விசாரணை செய்த பிரதம நீதியரசர் தலைமையிலான குழு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளது.**

இந்த தனக்கு வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை சிங்களத்தில் அச்சிடப்பட்டுள்ளது. அதனால் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்றபோது தாம் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக மனுவில் தெரிவித்திருந்தார். சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குக் கொண்டு செல்வது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறியுள்ள மனுதாரர், நாடு முழுவதுக்கும் பயணம் செய்யும் உரிமை இதன்மூலம் மறுக்கப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே தேசிய அடையாள அட்டையை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் விநியோகிக்க உத்தரவிடும்படி அவர் தனது மனுவில் கோரியுள்ளார்.

ஆள்பதிவுதிணைக்கள பதிவாளர் நாயகம், பாதுகாப்பு செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். இந்த மனுவை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு பரிசீலனை செய்ததோடு மனுமீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (ச)







### காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
### LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT

**காணி செயலகம், இல: 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல**

**Land Secretariat, No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.**

### அறிவித்தல்

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் விசேட துரித வேலைத்திட்டம். (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்)**

முரண்பாட்டுச் சூழலின் முடிவிற்குப்பின்னர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச காணி தொடர்பாக மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களமானது விசேட துரித வேலைத்திட்டம் ஒன்றை மாகாண காணி ஆணையாளர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்துள்ளது.

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்; நீங்கள்...**

- ✓ சட்டரீதியாக அல்லது தற்பொழுது அரசகாணியை வைத்திருக்கின்றீர்களா?
- ✓ அரச காணியில் அத்துமீறல் செய்திருந்தீர்களா? அல்லது தற்பொழுது அத்துமீறியுள்ளீர்களா?
- ✓ இந்த மாகாணங்களில் வதிபவராய் அரச காணியொன்றைக் கோரியுள்ளீர்களா? அல்லது உரிமையாக்க விரும்புகிறீர்களா?

**அப்படியாயின் சம்பந்தப்பட்ட காணிகள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளீர்களா?**

- ❖ உங்கள் பிரச்சினையை காணி அமைந்துள்ள கிராம அதிகாரி ஊடாக பிரதேச செயலகத்திற்கு நேரடியாக அல்லது தபால் மூலமாக அனுப்பி வையுங்கள்.
- ❖ "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு" (LLRC) காணி விடயத்திற்கான குறித்த படிவத்தை கிராம அதிகாரியிடம் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ குறித்த படிவத்தை காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்கள இணையத் தளத்திலிருந்து (www.landcommdept.gov.lk) பதிவிறக்கம் செய்யமுடியும்.
- ❖ பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு, பதிவிலக்கத்துடன் பெற்றுக் கொள்வீர்கள்.
- ❖ நிலைமைபற்றி உங்களுக்கு அறிவித்ததும், முழுமையான ஒத்துழைப்பினை வழங்கவும்.
- ❖ ஒவ்வொரு விசாரணையின் போதும் உங்களது பதிவிலக்கத்தைப் பயன் படுத்துங்கள்.

மேலதிக தகவல்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குட்பட்ட அனைத்துப் பிரதேச செயலகங்களில் அல்லது வடக்கு மற்றும் கிழக்கு மாகாண காணி ஆணையாளரது அலுவலகங்களில் அல்லது காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு" (LLRC) பிரிவில் (வடக்கு, கிழக்கு) பெற்றுக் கொள்ள முடியும். 2013/01 இலக்க சுற்றறிக்கை மற்றும் "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு" (LLRC) வேலைத்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்.**
2013/ 03/ 22

(34888)(2.6.7)

**R. P. R. [illegible]**
**காணி ஆணையாளர் நாயகம்.**


## சிகரெட் பெட்டியில் படத்துடன் தகவல்

சிகரட் பெட்டியில் படத்துடன் கூடிய எச்சரிக்கைத் தகவலைப் பிரசுரிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொது மக்கள் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

சிகரட் பெட்டியில் படத்துடன் கூடிய எச்சரிக்கைத் தகவலை பிரசுரிப்பதற்கு 96 வீதமான பொது மக்கள் தங்கள் பூரண ஆதரவைத் தெரிவித்தனர்.

இந்தத் தகவல் மதுபானம் மற்றும் போதை பொருள் தகவல் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப் பீட்டில் தெரியவந்துள்ளது.

இந்தக் கணிப் பீட்டில் இலங்கையில் 96 வீதமானோர் சிகரட் பெட்டியில் படத்துடன் கூடிய எச்சரிக்கைத் தகவலை நடைமுறைப் படுத்துவதற்குப் பூரண ஆதரவினைத் தெரிவித்தனர்.

குறித்த கணிப் பீட்டில் வயதானோர், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள், சிகரட் புகைப்பவர்கள், புகைக்காதவர்கள் என்ற வித்தியாசமின்றி அனைத்து தரப்பினரும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இந்தச் சட்டத்தின் பிரதிபலனை அடைவதற்கு சிகரட் பெட்டியில் 80 வீதமான அளவில் படத்துடன் கூடிய எச்சரிக்கைத் தகவலை பிரசுரிக்க வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றனர்.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதனால் எதிர்காலத்தில் சிகரட் பாவனைக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள முடியும்.

இந்தக் கருத்துக் கணிப்பீடு கொழும்பு, கம்பஹா ஆகிய [illegible] பிடத்தக்கது. (ச)


**கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் அவர்களின் "மணிவிழா"**

இடம் : துர்க்கா மணிமண்டபம் நல்லூர்
காலம் : 06.04.2013 காலை 8மணி
குறிப்பு : இந்த விழாவில் கலந்துகொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ளவும்
தொ.பே. 077 3264 196
(மணிவிழா இணைச் செயலர்) (34873) (45.6.7)



### பணியாளர் தேவை

- ஓமந்தையில் உள்ள "நெஸ்லே" நிறுவனத்தின் 'பால் குளிரூட்டி' நிலையத்தில் பணிபுரிவதற்கு **உதவியாளர்** (க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள்) தேவை.
- வவுனியாவில் உள்ள "நெஸ்லே" நிறுவனத்தின் பால் சேகரிப்பு நிலையத்தில் கணக்கு பதிவுப் பணியை மேற் கொள்வதற்கு **க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக** பாடத் துறையில் சித்தியடைந்தவர் தேவை.

நிலையப் பிராந்தியத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 08.04.2013**
தொடர்பு முகவரி:
**முகாமையாளர், இலக்கம் 352, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.** (C/7332)(6.711)



### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் வடக்கு, தில்லையம்பதி கோயிலுக்கு அருகில் கிணறு மற்றும் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9037 288, 077 3639 388 (34864)(45.6.7)


### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் அன்னம்மா தியாகராஜா**

(முன்னாள் ஆசிரியர் யாழ்/சிறிசோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்)

**மலர்வு**
**13*11*1931**
**உதிர்வு**
**21*03*2008**
**திதி: பூரணை**

இன்று ஆண்டுகள் ஐந்தானாலும்
கணம் நீ எங்களை விட்டுப் பிரிந்தது போல்
தோன்றுகிறதே!
நித்தம் எங்கள் நெஞ்சினிலே நிழலாக
நீ பதிந்திட்டாய்
எங்கே எங்களை விட்டு
நீ சென்றாய் சொல்!
உன் கனவுகளுடன் நாங்கள்
ஒன்றித்து உருகித் தவிக்கின்றோம்
எங்கள் தெய்வமே......

"பாமா வாசா",
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(34868)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகப் போராட்டங்கள் சார்க் நாடுகளைப் பாதிக்கும்

## யாத்திரிகர்கள் மீதான தாக்குதலை ஏற்க முடியாது என்கிறார் வாசுதேவ



கொழும்பு,மார்ச் 27

தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்கள் சார்க் வலய நாடுகளையே பாதிக்கும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை யாத்திரிகர்கள் மீது தமிழகத்தைச் சேர்ந்த சிலர் திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்துவது கண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசியல்வாதிகளுக்கு அல்லது அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தினால் அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியும். ஆனால், அப்பாவி யாத்திரிகர்கள் மீது தாக்குதல் நடத்துவதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது.

இவ்வாறான தாக்குதல்களை தடுக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்காமை அந்த மாநிலத்தின் ஜனநாயக ஆட்சி தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளது.

தமிழக அரசியல்வாதிகள் தங்களது அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறு குழப்பங்களை விளைவித்து வருகின்றனர்.-என்றார். (ச)



கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றபோது சுவாமி தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடை சூழ வீதி வலம் வருகிறார்.

# சக்திமிகு நாடுகள் இரட்டை வேடம்

## கோத்தா குற்றச்சாட்டு



கொழும்பு,மார்ச் 27

சக்தி வாய்ந்த நாடுகள் இலங்கை விடயத்தில் இரட்டை வேடம் பூண்டிருக்கின்றன என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில், சக்தி வாய்ந்த நாடுகளும், அவற்றின் ஆதரவு நாடுகளும் இலங்கை விடயத்தைக் கையாள்கையில் இரட்டைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன.

இலங்கையின் அடைவு மட்டங்கள் குறித்து அந்த நாடுகள் அவதானம் செலுத்துவதில்லை.

இலங்கையுடன் பேச்சு நடத்தும்போது இலங்கையின் அடைவு மட்டங்களைப் பாராட்டுகின்ற அந்த நாடுகள், சர்வதேச நாடுகளுடன் செயற்படும்போது மாறுநிலைப்பாட்டில் இருக்கின்றன.-என்றார். (ச)

# அனல் மின் நிலையம் விரைவில் திறக்கப்படும்

கொழும்பு,மார்ச் 27

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை விரைவில் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு மின்சாரத் துறை அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.


பலாங்கொட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து 600 மெகாவாட்ஸ் மின்சாரத்தை பெற உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனாவின் முதலீட்டுடன் நிர்மாணிக்கப்பட்ட அனல் மின் உற்பத்தி நிலையம், ஆரம்பத்தில் இருந்தே பல வேறு பழுதடைதல் நிலைமைக்கு முகம் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

**இந்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 600 மெகாவாட்ஸ் மின்சாரத்தைப் பெற உத்தேசிக்கப் பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

# மிருகங்கள் பரிமாற்றம்



கொழும்பு,மார்ச் 27

இலங்கையின் மிருகக் காட்சிசாலைகளில் உள்ள மிருகங்களை சர்வதேச மிருகக் காட்சி சாலைகளுடன் பரிமாறிக் கொள்ள இலங்கை மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கை சட்டரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கமைய இந்தியாவுக்கு இலங்கையில் இருந்து அனகொண்டா பாம்புகள் அனுப்பப்படவுள்ளன.

அதற்குப் பதிலாக அங்கிருந்து மான் இனங்கள் கொண்டுவரப்படவுள்ளன. ஜப்பான் மிருகக் காட்சி சாலைகளுக்கு சிறுத்தைக் குட்டிகள் வழங்கப்படவுள்ளதுடன், அதற்குப் பதிலாக பென்குயின்கள் கொண்டுவரப்படவுள்ளன என்று மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

உதயன்
அரசுக்கு எதிராக
☎0215671111
advt@uthayan.com



# திறப்பு விழா அழைப்பு
# கோபுரம் சில்க்ஸ்


நிகழும் மங்களகரமான நந்தன வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள் இன்று(27.03.2013) புதன்கிழமை பகல் 9.10 முதல் 10.13 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எம்மால் ஸ்தாபிக்கப்பட்ட **கோபுரம் சில்க்ஸ்** எனும் ஸ்தாபனம்

**உயர்திரு பூ.சசிதரன் தம்பதியரால்**
(உரிமையாளர், ராசி கலக்ஷன், நல்லி சில்க்ஸ்)
ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

திருமண வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள், வேஷ்டிகள், சால்வைகள், சேட் வகைகள் இன்றைய நவநாகரிகத்திற்கு ஏற்ற வகையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்கேட் & பிளவுஸ், சூட்டிங்,சல்வார் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகளின் மகத்தான தெரிவு! மலிவு விலையில்!!

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.





Ajeraa Creation

70, நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(C/7345)

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
# வேலாயுதம் வீரகத்தி



அன்னை மடியில்
1933.05.25
குருநாதர் திருவடியில்
2003.03.18

காலத்தின் ஒளி விளக்காய் எம்மோடு இணைந்து
உயிரோடு உயிராய் கலந்துவிட்ட எம் தெய்வமே!
கண்முன்னே வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உம் அன்புக்கு ஈடாகுமா?
மண்ணைவிட்டு விண் சென்று பத்தாண்டுகள் ஆனபோதும்
மண்ணில் உள்ளவரை மறப்போமா உம் நினைவை
இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

மாசேரி, வரணி. (C 9234)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துக்கான பயணத்தடை; ஒரு வருடத்துக்கு விதியுங்கள்

## சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு,மார்ச் 27

இலங்கை அரசு ஒரு வருடத்துக்கு தமிழகத்துக்கான பயணத் தடையை விதிக்க வேண்டும் என்று ஒமல்பே சோபித தேரர் கோரியுள்ளார்.

தற்போது தமிழகத்தில் இலங்கையர்கள் மீது மிலேச்சத்தனமாக தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று அவர் கூறினார்.

பாடசாலை மாணவர்கள், கிறிஸ்தவ யாத்திரிகள், பிக்குகள், இலங்கை தூதரகம் என்பவற்றின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

அது இலங்கையர்களுக்கு அச்சுறுத்தலான விடயமாகும்-

எனவே தமிழகத்துக்கான பயணங்களை மேற்கொள்ளாது தவிர்ப்பதற்கு இலங்கையர்கள் தீர்மானிக்க வேண்டும்- என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# சட்டவிரோத கசிப்பு நிலையம் மதுவரிப் பிரிவால் முற்றுகை

கொழும்பு,மார்ச் 27

புத்தளம்,மதுரங்குளி, வேலாசிய பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு தயாரிப்பு நிலையம் ஒன்றை புத்தளம் மதுவரிப் பிரிவினர் முற்றுகையிட்டுள்ளனர். குறித்த இடத்தில் தயாரிக்கப்பட்ட 73 கசிப்புப் போத்தல்கள் மற்றும் கசிப்புத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை மதுவரிப் பிரிவினர் மீட்டுள்ளனர். இந்தக் கசிப்புத் தயாரிப்பு நிலையத்தில் இருந்து மதுரங்குளி ,ஆமகுளிய பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபருக்கு எதிராக புத்தளம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ச)


**பொறிக்கடவை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் வேள்விவிழா.**

எமது ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் வேள்வி விழா 01.04.2013 திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடி உள்ளது. ஆலய பொங்கல் விழாவின்போது ஆலய சுற்றாடலில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வணிக நிலையம் அமைப்பவர்கள்,கச்சான் வியாபாரிகள் பொலித்தீனுக்குப் பதிலாக கடதாசிப்பைகள் பயன்படுத்து மாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். கரைச்சி பிரதேச சபையினரதும், சுகாதாரத் திணைக்களத்தினரதும் அனுமதிப்பத்திம் பெற்றிருப்பவர்கள் மாத்திரம், உணவகம், தேனீரகம், குளிர்களி நிலையங்கள் அமைக்க அனுமதிக்கப்படுவர்.

(26260)(5.6.7) தலைவர், ஆலய அறங்காவலர் சபை.


# வருட இறுதிக்குள் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி

## மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 27

2012ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் இந்த வருட இறுதிக்குள் பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளப்படுவர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

**பல்கலைக்கழக துணை வேந்தர்களுடன் அடுத்த மாதம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.**

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக துணை வேந்தர்களுடன் அடுத்த மாதம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் ஷனிக்கா ஹிரிம்புரேகம குறிப்பிட்டார்.

2012ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவாகள் இந்த முறை பல்கலைக்கழக நுழைவுக்காக விண்ணப்பித்துள்ளனர் என்று அவர் கூறினார்.

இதேவேளை த 2011 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மீண்டும் மீன் மழை

கொழும்பு,மார்ச் 27

பொலநறுவை புதியநகர் பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் மீன் மழை பெய்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய நகர பொலிஸ் அதிகாரி அலுவலகப் பகுதியிலேயே நேற்ற பகல் இவ்வாறு மீன் மழை பெய்துள்ளது.

இரு வகையான மீன்கள் மழையுடன் விழுந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)


**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 27 - 03 - 1942

மறைவு 27 - 03 - 2009



அமரர் பிரான்சிஸ் சேவியர் ஹர்த்தம்மா (தங்கமணி)


எம் அம்மாவே! ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாது எம் அன்பும், பாசமும், ஆறுதலும்.
என்றும் உம் நினைவுகள் எம்முடன் நிலைத்திருக்கும்.

5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு. (34666)(5.6) குடும்பத்தினர் பிரான்சிஸ் சேவியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜெனிவாத் தீர்மானம்: சர்வதேச சமூகத்தின் தெளிவான சமிக்ஞை

எம்.ஏ.சுமந்திரன்,
(நாடாளுமன்ற உறுப்பினர்)

இலங்கையில் வேற்றுமைகளைக் களைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் பொறுப்புக்கூறும் விடயங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானம் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் கிடைத்த ஒரு வெற்றியாகும். இன நல்லிணக்கம், ஜனநாயக மறுசீரமைப்பு, நிலையான சமாதானம், நீதி, தண்டனை விலக்களிப்புக் கலாசாரத்துக்கு முடிவு கட்டுதல் ஆகியவற்றில் அவாக் கொண்டுள்ள இலங்கையர்கள் தனித்து விடப்படவில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது. இலங்கைக்குள் அடக்கப்பட்ட மக்களின் குரலை செவிமடுக்க மாட்டோம் என்ற ஆட்சியாளர்களின் பிடிவாதமான போக்கை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவே இல்லை என்பதற்கு இது ஒரு தெளிவான சமிக்ஞை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தற்போதைய தீர்மானத்தின் வாசகங்களை நோக்கினால் அது கடந்த மார்ச் மாதத்தைய தீர்மானத்தினின்றும் பெரிய மாறுதல்களைக் கொண்டிருப்பது வெளிப்படை.

இவற்றுள் -

★ சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் பொறுப்புக் கூறும் விடயம்.

★ இத்தகைய மீறல்கள் தொடர்பில் நம்பகத் தன்மைமிக்க, பக்கம் சாராத விசாரணைகளை நடத்துவதற்கு அரசுக்குள்ள இன்றியமையாத கடப்பாட்டை வலியுறுத்துதல்.

★ இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் முழு வரம்புகளையும் மீறித் தொடர்வதைச் சுட்டுதல்.

★ ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை ஏற்றுக் கொள்ளுதல்.

★ சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை சம்பந்தமான குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற ஐ.நா. மனித உரிமைகள்

ஆணையாளரின் அழைப்பை குறிப்பில் கொள்ளுதல்.

-ஆகியவை தொடர்பான அதிகரித்த கருத்துக்கள் விசேடமாக அடங்குகின்றன.

இந்தத் தீர்மானத்துக்கான மூல வரைவிலிருந்து இறுதித் தீர்மானம் மறுசீரமைக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையில் 2012 இன் தீர்மானத்தினின்றும் இது மிகவும் முன்னேற்றகரமானதே.

முக்கியமாக இத்தீர்மானம் இம்முறை வாக்களிக்கத் தகுதியுள்ள ஆபிரிக்க நாடுகள் பலவற்றினதும், பெரும்பாலும் முழுமையாக ஐரோப்பிய, கிழக்கு ஐரோப்பிய மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளினதும் ஆதரவைப் பெற்றுள்ளது. ஆசியாவில் கூட பிரேரணையை ஆதரிப்பதில் இந்தியா மற்றும் தென்கொரியா இணைந்துள்ளன. இலங்கை அரசின் விசுவாசமான நண்பர்களான ஜப்பானும் மலேசியாவும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஆகவே, இந்தத் தீர்மானம் மேற்குலகத்தினுடையது மட்டுமல்ல. சமத்துவம், ஜனநாயகம், சுதந்திரம், நீதி ஆகியவற்றின் விழுமியங்களை மட்டும் அது வலியுறுத்தவில்லை. அதற்கு அப்பால் தீர்மானத்தில் தீர்க்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான விழுமியங்கள் தொடர்பில் கண்டங்கள் கடந்த ஆதரவையும் அது வெளிப்படுத்தி நிற்கின்றது.

குறிப்பாக ஆதரவளித்த நாடுகளில் சில ஸியாரோ லியோன் போன்றவையாகும். அதன் பிரதிநிதி ''எமது நாடு இரத்த ஆறு ஓடிய, பேரழிவு தந்த பத்தாண்டு சிவில் போரை எதிர்கொண்டது. ஆனால் நேர்மையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறும் கடப்பாடுகள் ஆகியவை மூலமே அந்த இரத்த ஆறு ஓடிய, பேரழிவு தந்த போர் அழிவிலிருந்து நமது நாடு மீண்டெழுந்தது. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்'' - என்றார்.

இலங்கையைப் பாராட்டும் தீர்மானம் ஒன்றை 2009இல் இலங்கை பெற்றுக் கொள்வதற்கு உதவிய இந்தியா இப்போது, அதற்கு மாறாக, வரவேற்கத்தக்க வகையில், தனது குடிமக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில், கடும் விமர்சன நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இந்த வீச்சத்தின் போக்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும். வெளிப்படையான [illegible] ஆதரவுத் தரப்பில் மட்டும் தங்கியிருந்து கொண்டு, ஜனநாயக உலகைப் புறமொதுக்கும் அதன் தந்திரம் கொஞ்சம் கொஞ்சமாக உலகரீதியான ஆதரவை அதற்கு இழக்க வைக்கும். சுருக்கமாகச் சொல்வதானால், மறுசீரமைப்புகளுக்கான புவி அரசியல் சார் அழுத்தம் வலிமையானது.

நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்கும் போக்கில் இலங்கை மக்களை இயன்றளவு வலிமையாக்க முனைவதே இன்றைய தேவையாகும்.

அதில் நாங்கள் தவறுவோமேயானால் - சகிப்புத் தன்மையற்ற மத, இனவாதச் சக்திகளின் விஷக் கலவையும், உரிய நிவாரணங்கள் அளிக்கப்படாத மக்களின் மனக்குறை மற்றும் ஆதங்கங்களும்,, சட்டத்தின் ஆட்சியின்மையும் சேர்ந்து மீளவே முடியாத வகையில் தமது கைவரிசையைக் காட்டிவிடும்.

தமிழ் மக்கள் நிரந்தர இராணுவ ஆக்கிரமிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் உட்பட்ட நிலையில் வாழும் வடக்கு, கிழக்குக்காக மட்டுமல்லாமல், சமூகத்தின் ஏனைய இன மக்களுக்காகவும் தற்போதைய மோசமான போக்கைத் தடுத்து நிறுத்துவது அவசியமாகும்.

அண்மைக் காலமாக வெளிப்பட்டுவரும் இனவாத பாஸிசத் தீவிரப் போக்கு முஸ்லிம் மக்களை ஊறுபடுத்தக் கூடியதான அச்சத்தைத் தருவதோடு 1983 நிலையைப் பீதியோடு நினைவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது. [illegible] மற்றும் ஆயுதம் தாங்கிய எதிர்க் குழுக்கள் ஆகிய தரப்புகளின் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மனக்குறைகள், துக்கங்கள் அரசினால் கேட்டறியப்படுவதோடு அவர்களின் அன்புக்குரியவர்களின் மறைவு குறித்த உண்மைகளும் கண்டறியப்பட வேண்டும்.

அதுவே, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உண்மையைக் கண்டறியும் உரிமை, நீதி, உரிய இழப்பீடு ஆகியவை கிடைப்பதை உறுதி செய்வதோடு மீண்டும் அத்தகைய இழப்புகள் ஏற்படாமல் உறுதிப்படுத்தும் வகையில் உண்மையான பொறுப்புக் கூறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதற்கான காரணமாகும்.

இவ்வாறு, எமது மக்களின் ஆழமான, வலிகள் நிறைந்த கோரிக்கைகளுக்காக நாம் குரல் கொடுப்பது பழி தீர்க்கவல்ல; நீதியான சமாதானத்திற்காகவே.

பழி தீர்த்தலுக்கும் நீதி நிலை நாட்டப்படுதலுக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் உள்ளன. பழிதீர்ப்பதற்கான கோரிக்கை இரண்டு தரப்புகளினாலுமே இழைக்கப்பட்ட குற்றங்களை முன்னிலைப்படுத்தாது. ஏனெனில் நீதி நிலை நாட்டப்படுவதற்கான கோரிக்கை மட்டுமே பக்கச் சார்பற்றதாக இருக்கும்.

பழிவாங்குவதற்கான அழைப்பு உண்மைகளை மட்டுப்படுத்துவதாக அமையும். ஆனால் நீதி நிலைநாட்டப்படுவதற்கான அழைப்பு முழு உண்மைகளையும் வெளிக் கொணர்வதை வலியுறுத்துவதாக அமையும்.

பழிவாங்குவதற்கான அழைப்பு பழைய காயங்களைத் தீர்க்கும் நோக்கிலேயே கடந்த காலத்தைப் பார்க்கும். ஆனால் நீதி நிலைநாட்டப்படுவதற்கான அழைப்பு எதிர்காலத்தை வளப்படுத்தும் இலக்கிலேயே கடந்த காலத்தை நோக்கும்.

மனித உரிமைகள் சபை மிகத் தெளிவாகப் பேசியுள்ளது. இலங்கை இப்போது கற்றுணர்ந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆதாரபூர்வமான பரிந்துரைகளைக் கட்டாயம் நடைமுறைப்படுத்துவதோடு சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த விசாரணைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

நாங்கள், முன்னர் ஏற்கனவே பலதடவைகள் சுட்டிக்காட்டியமை போன்று சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றே சுயாதீன மற்றும் நம்பகத்தன்மை நிலைமைகளை நிறைவு செய்யும்.

> இலங்கை அரசின் முன் ஒரேயொரு தெரிவுக்கான வாய்ப்பு மட்டுமே உள்ளது. அது. ஒன்றில் சரியான முன்னெடுப்பைத் தானே தெரிவு செய்தல் அல்லது அந்தத் தெரிவே சரியானதை முன்னெடுப்பதற்கு விட்டுக் கொடுத்தல் [இழத்தல்] ஆகும்.

இலங்கை அரசின் முன் ஒரேயொரு தெரிவுக்கான வாய்ப்பு மட்டுமே உள்ளது. அது, ஒன்றில் சரியான முன்னெடுப்பைத் தானே தெரிவு செய்தல் அல்லது அந்தத் தெரிவே சரியானதை முன்னெடுப்பதற்கு விட்டுக் கொடுத்தல்(இழத்தல்) ஆகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிடைக்கும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கடகம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** பழைய கசப்பான சம்பவங்களை பேசிக்கொண்டிருக்க வேண்டாம். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகு முறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமையால் அசதி, சோர்வு வந்து நீங்கும். எதிலும் நிதானமாகச் செயற்படுங்கள்.

**நாளை**

பங்குனி-15 வியாழக்கிழமை 28.03.2013

திதி: பிரதமை பி.ப. 02.39 வரை

நட்சத்திரம்: அத்தம் மு.ப. 10.16 வரை

சுபநேரம்: 07.43- 09.13 வரை

இராகுகாலம்: 01.43- 03.13 வரை

**துலாம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும். இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடிவடையும்.

**கும்பம்:** பணவரவு திருப்தி தரும். புதிய நட்பு மலரும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். எதிலும் முன் யோசனையுடன் செயற்படுங்கள்.

**மீனம்:** திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | 9 | 8 | |
| | | 9 | 6 | | 8 | | | |
| 8 | | | 2 | 4 | | 5 | 3 | |
| | 4 | 1 | 5 | | | | | 8 |
| 9 | | 2 | 3 | | 4 | | | 1 |
| 7 | | | | | 2 | 3 | 9 | |
| | 5 | 7 | | 2 | 3 | | | 9 |
| | | | 7 | | 6 | 2 | | |
| | 2 | 3 | | 8 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 3 | 5 | 4 | 7 | 6 | 2 | 8 |
| 8 | 7 | 2 | 9 | 1 | 6 | 4 | 5 | 3 |
| 5 | 4 | 6 | 8 | 3 | 2 | 9 | 1 | 7 |
| 6 | 3 | 5 | 7 | 8 | 9 | 2 | 4 | 1 |
| 1 | 8 | 7 | 2 | 6 | 4 | 5 | 3 | 9 |
| 2 | 9 | 4 | 1 | 5 | 3 | 7 | 8 | 6 |
| 3 | 6 | 8 | 4 | 9 | 5 | 1 | 7 | 2 |
| 7 | 5 | 1 | 6 | 2 | 8 | 3 | 9 | 4 |
| 4 | 2 | 9 | 3 | 7 | 1 | 8 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



நயினாதீவு-பெருங்குளம்
நயினை அருள்மிகு ஸ்ரீ மதுரைமீனாக்ஷி அம்மன் திருக்கோயில் புனராவர்த்தன சம்புரோக்ஷண நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி சிறப்புமலர்
மங்களகரமான நந்தன வருஷம் பங்குனித் திங்கள் 14ஆம் நாள் இன்று(27.03.2013) புதன்கிழமை
அருளாசி வழங்கிய ஆன்மநாயகன் பிரதிஷ்டா பூஷணம் நயினை சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்கள் அவர்கள்

**சர்வபோதகம்**
சர்வதேச இந்துமத பீடாதிபதி
சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்
சிவன் தேவஸ்தானம் - வல்வெட்டித்துறை.

**பிரதிஷ்டா பிரதமகுரு**
தரும ஆதீன ஆகம பிரவீணா ஆசீர்வாதசரபம்
சிவஸ்ரீ ஐ.கைலாச வாமதேவக்குருக்கள்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீனகுரு

**சர்வசாதகம்**
சாதக கலாபூஷணம்
சிவஸ்ரீ பா.பாலகணேஸ்வரக் குருக்கள்
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீனகுரு.

**ஏனைய சிவாச்சாரியார்கள்**
கிரியா கலாபமணி சிவஸ்ரீ சா.பாலசுந்தரக்குருக்கள் - நயினை.
சிவதர்ம வள்ளல் சிவஸ்ரீ ச.சிவகுமாரராஜகுருக்கள்- குப்பிளான்.
கிரியா கலாபமணி சிவஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக்குருக்கள் - கல்வியங்காடு
கிரியா பத்மதலாதரன் சிவஸ்ரீ ம.பாலச்சந்திரக்குருக்கள் - நல்லூர்.
சர்வகிரியா விதுஷன் சிவஸ்ரீ சதா.யோகீஸ்வரக்குருக்கள் - நல்லூர்.
அலங்கார பூஷணம் சிவஸ்ரீ ச. சந்திரசேகரக்குருக்கள் - ஹற்றன்.
நித்திய பூஜாநிதி சிவஸ்ரீ ச.கண்ணன்குருக்கள் - கடிகன்சேனை.
கிரியாகலாப முத்தாமணி சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக்குருக்கள் - நயினை.
கானவிநோதன் சிவஸ்ரீ பா.விக்னேஸ்வரக்குருக்கள் - கொட்டகலை.
ஹரிகர உபாசகர் சிவஸ்ரீ இ.கிஸ்ணமூர்த்திக்குருக்கள் - கோண்டாவில்.
சீர்த்த உபாசகர் சிவஸ்ரீ வ. உமாசுதக்குருக்கள் - மயிலணி.
கிரியாபூஷணம் சிவஸ்ரீ ச.பாஸ்கரக்குருக்கள் - கலட்டி,யாழ்ப்பாணம்.
சர்வ ஆலய குரு சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக்குருக்கள் - நீராவியடி.
சிவாகம ஜோதி சிவஸ்ரீ கீ.கிஸ்ணதாசக்குருக்கள் - கோவில்.

**உபசாதகர்கள்**
சிவஸ்ரீ வா.கைலாசவிஜய்குருக்கள்-நயினாதீவு.
சிவஸ்ரீ ச.பத்ம நிலோசனசர்மா-மட்டக்களப்பு.

**யாக சம்ரக்ஷகர்கள்**
வா.கைலாசபானுசர்மா-நயினாதீவு.
ப.ஆனந்தசர்மா-வவுனியா.
ச.பாலசுப்பிரமணியசர்மா-நாவல்நகர்.
க.மோகனரூபசர்மா-மட்டக்களப்பு.

**ஆலய நித்தியகுரு**
ஆ.பாலசுப்பிரமணியசர்மா-யாழ்ப்பாணம்.

**ஆலய ஆரம்பகால ஸ்தபதி**
நயினை திரு.அ.பழனிவேலு-நயினாதீவு

**ஆலய புனருத்தாரண அமைப்பு**
இறைபணி வித்தகர் செல்லையா சிவலிங்கம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**மங்களவாத்தியம்**
நயினை ஆனந்தன் புதல்வர்கள்
விஷேட இணுவில் க.உதயநாதன் குழுவினர்.

**பூமாலை அலங்காரம்**
சி.ஆனந்தன்,பிரபாகரன்,தீபன்
நயினாதீவு.

**யந்திரங்கள் கலசங்கள் வடிவமைப்பு**
கி.சாந்தசற்குணநாதன் ஆசாரியார்
யாழ்ப்பாணம்.

**சிற்ப வடிவமைப்பு வர்ண வேலைகள்**
சிற்பகலா ஜோதி
கலியுகப்பெருமாள் புருஷோத்தமன்
கொள்ளிடம்-சீர்காழி

ஒலி ஒளி அமைப்பு : ச.சுபாஸ்கரன் -நயினை-8, நா. குணவன்னான் -நயினை-7
மின் இணைப்பு வேலை: நயினை ச.சக்திவேல் -நயினாதீவு-7
(13992)(5,6,7)

அன்னதானம்(மாகேசுர பூஜை): திரு.மு.பொன்னுத்துரை குடும்பத்தினர் (நயினை-8), திரு.ந.விசுவநாதன் குடும்பத்தினர் (நயினை) -5ஏ, திரு.சி.தனபாலசிங்கம் குடும்பத்தினர்-நயினை-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு உயிர்களைத் தவிர அனைத்தும்

## ■ வழங்கத் தயார் என்கிறார் ஜனாதிபதி

அம்பாறை,மார்ச் 27

வடக்கு, கிழக்கு மக்கள் பயங்கரவாதச் செயற்பாடுகளால் இழந்த உயிர்களைத் தவிர, ஏனைய அனைத்தையும் வழங்குவதற்கு அரசு தயாராக உள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரியில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு 'ரன்பிம' காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.



இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு, கிழக்கு மக்கள் பயங்கரவாத செயற்பாடுகளால் கடந்த காலங்களில் தங்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இருப்பிடங்களை விட்டு வெளியேறி இருந்தனர்.

தற்போது பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த அரசு, வடக்கு, கிழக்கு மக்கள் அவர்களது சொந்தக் கிராமங்களில் சுதந்திரமாக வாழ்வதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் தங்களது சொந்த மண்ணில் உரிமையுடன் வாழ்வதே மஹிந்த சிந்தனை திட்டத்தின் நோக்கமாகும். அதற்கு அமைய வடக்கு, கிழக்கு மக்களுக்கு 1,000 காணித் துண்டுகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரச காணிகளில் குடியேறியவர்களுக்கும் சட்டப்படியான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.-என்றார்.

இந்தநிகழ்வில் தொலைத்தொடர்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)



திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நீரழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களுக்கு நீரழிவு தொடர்பான விளக்கங்களை மாணவர்கள் வழங்குகின்றனர். (40)

# கல்வி ஒதுக்கீட்டை அதிகரிக்கக் கோரிக்கை

## மீண்டும் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 27

கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு அரச பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் மீண்டும் வலியுறுத்தவுள்ளது.

அரச கல்வியை பாதுகாப்பதற்காக மொத்த உற்பத்தி செலவில் ஆறு வீதத்தை கல்விக்கு ஒதுக்குமாறு ஏற்கனவே பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்திருந்தது.

இது தொடர்பாக மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தை பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி தேசிய நூலக ஆவணப்படுத்தல் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.(ச)

# முஸ்லிம் பிரதேசங்களில் இராணுவத்தினர் ரோந்து

மட்டக்களப்பு,மார்ச் 27

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களின் பிரதான வீதிகளில் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குவிக்கப்பட்ட இராணுவத்தினர் தொடர்ந்து நேற்று செவ்வாய்க்கிழமையும் பாதுகாப்புக் கடமையிலும் ரோந்து நடவடிக்கைளிலும் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பிரதான வீதியின் குர் ஆன் சதுக்கம் தொடக்கம் பிரதான வீதியின் சகல சந்திகளிலும் ஆங்காங்கே இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக ஸ்தம்பிதமடைந்திருந்த கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பிரதேசங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை வழமை நிலைக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை கலாசார நிகழ்வுகளால் வளர்க்க முடியும்

## கல்முனையில் அமைச்சர் ஏக்கநாயக்க

கலமுனை,மார்ச் 27

கலை, கலாசார மற்றும் பாரம்பரிய நிகழ்வுகளின் ஊடாக இனங்களிடையே உறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும் என்று கலாசார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார். கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பில் நிர்மாணிக்கப்பட்ட மத்திய கலாசார நிலைய கட்டட திறப்பு விழா நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கலை, கலாசார பாரம்பரியங்களையும், இன உறவையும் வளர்க்கும் நோக்குடன் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனைக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் 160 கலாசார மத்திய நிலையங்களை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வேலைத் திட்டத்தின் கீழ் இந்த கலாசார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பல கலாசார மத்திய நிலையங்கள் அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்பட வுள்ளன. அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.-என்றார். (ச)

## குத்தகைக்கு

நீர்வேலி இராஜ பாதை
சந்தியில் அமைந்துள்ள
கட்டடத்தொகுதி
குத்தகைக்கு
கொடுக்கப்படும்.
தொ.பே: 077 5285 395,
077 2203 096
(34864) (46.6.7)

# வட மத்திய மாகாண கிணறுகள் பரிசோதனை

## சுகாதார அமைச்சு தீர்மானம்

இரத்தினபுரி,மார்ச் 27

வட மத்திய மாகாணத்தில் உள்ள நிலத்தடி கிணறுகளை பரிசோதனை செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வட மத்திய மாகாணத்தில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதி கரித்து வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிணற்றடி நீர் பரிசோதனை குறித்து வட மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்துப் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வட மத்திய மாகாணத்தில் கடந்த வருடமும் நிலத்தடி கிணறுகள் பரிசோதனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

## வீடுகளுக்குள் புகுந்தது வெள்ளம்

நுவரெலியா, மார்ச் 27

மலையகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணி முதல் பெய்த கடும் மழையால் போடைஸ் பகுதியில் பல வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்
பிறப்பு
02.01.1939
இறப்பு
26.02.2013
அமரர் சித்தன்
சண்முகம்



கண்ணீருக்கு தடை போட்டது போல
உம் நினைவுகளுக்கு தடை போட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்று விட்டீர்கள் தந்தையே!

26.02.2013 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சித்தன் சண்முகம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை காலை 6.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரது அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரைக்கு எடுத்துச் செல்லப்படும். நாளை (28.03.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதவன் மில்லடி,
அச்சுவேலி மேற்கு.
(34882)
(6.7.11)
குடும்பத்தினர்.

நீங்காத நினைவில் 91 ஆம் நாள்
அந்தியேட்டியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்
எமது அன்புச் செல்வன்
அமரர் லிங்கநாயகம் சாரங்கன் (சாரு)



28.12.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புச் செல்வன் அமரர் லிங்கநாயகம் சாரங்கன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.03.2013) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் நெடுந்தீவு மேற்கு, பெரியதுறை தீர்த்தக்கரையிலும், அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் மிக அன்புடன் வேண்டுகின்றோம்.

'நெல்வரை' மேற்கு,
நெடுந்தீவு.
தொ.பே.இல: 021 321 6980
கு. லிங்கநாயகம் குடும்பம்.
(ஓய்வு நிலை அதிபர்)
(34644)(8.7.11)

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின்
வானொலி நாடகங்கள்



526 நாடகங்கள் எழுதிய
கலாபூஷணம் அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளையின்
நாடகங்கள் தினமும்
யாழ் சேவையில்
இரவு 6.30 மணிக்கு
மறு ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன.
மாணவர்களே!
அவற்றைக் கேட்டு இலங்கை
மண் வாசனை நாடகங்களை
எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்.
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.
(34853)(2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

# கும்பாபிஷேக சிறப்பு மலர் - 27.03.2013

செல்வப் புனிதர் புகழ்பாடும் சீரார் குரும்பைப் பதிதன்னில்
வல்விக் கினநோய் அணுகாமல் வாழ்வும் சுகமும் மணம்வீசக்
கல்விக் கமலத் தொகைமலரக் கருணைக் கடலா யுறைகின்ற
சொல்வித் தகமா ரித்தாயைத் தொழுவார் துயரம் விடுவாரே



## கும்பாபிஷேகப் பிரதமகுருவின் ஆசி உரை



ஈழநாட்டில் யாழ்.நகரின் வடபால் வனப்பும், செழிப்பும் பெற்று தெய்வ பக்தியும் இறை நம்பிக்கையும் கொண்ட மக்களையும், சான்றோர்களையும், வர்த்தகப் பெருமக்களையும் தன்னகத்தே கொண்டு தனித்துவமான பண்பாடுகளைப் பேணி வரும் ஊராம் குரும்பசிட்டியிலே பல்லாண்டு காலமாகப் பெருங்கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருபவள் எங்கள் அகில புவன மாதாவாம் முத்துமாரி அம்மன் மக்களின் துயர் தீர்த்தும் வேண்டுவன ஈந்தருளும் தாயாரின் பெருமைகளையும், புதுமைகளையும் அங்கு வாழ்ந்த மக்கள் சீரோடும் சிறப்போடும், புகழோடும் வாழ்ந்து வந்ததை எனது தகப்பனார் சிவலோகநாதக்குருக்கள் அவர்களின் காலத்திலிருந்தே நானறிவேன். அவ்வாறு சிறப்போடு வாழ்ந்து வரும் நாளில் கடந்த கால போர் அனர்த்தமும் இடப்பெயர்வும் எல்லோரையும் துயர் கொள்ளச் செய்தது.

எப்படியாயினும் அம்பிகை அங்கே பரிபூரணமாக வியாபித்திருந்ததன் பயனாக அவளது திருப்பெருங் கருணையினால் குறுகிய காலத்தில் ஊர்மக்களின் பெருமுயற்சியால் அதே இடத்தில் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டு, புதுப்பொலிவோடு காட்சியளிக்கின்றது. முத்துமாரி அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும் அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ பிரஸ்திஸ்டா மகாகும்பாபிஷேகத்தின் பயனாக இவ்வூர் மீண்டும் செழிப்புற்று ஊர்மக்கள் நன்மைகளையும், நலன்களையும் பெறவேண்டும் எனப் பிரார்த்தித்து ''எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'' என வேண்டி எல்லாம் வல்ல முத்துமாரி அம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசி கூறி அமைகின்றேன்.

சி.இராசேந்திரக் குருக்கள், திருநெல்வேலி முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட வலி.வடக்குப் பிரதேசத்தில் தனித்துவம்மிக்க கிராமமாக விளங்கும் குரும்பசிட்டியில் தெய்வீக வரலாறு செப்பிநிற்கும் முத்துமாரி அம்பாளின் மகிமை மகத்தானதாகும். உன்னத வழிபாட்டுத் தலமாக விளங்கிய இவ்வாலயம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் பல இன்னல்களை எதிர்கொண்டபோதும் மீண்டும் எழுந்து நிற்கும் அற்புதத்தை நோக்குமிடத்து முத்துமாரி அம்பாள் குரும்பசிட்டிவாழ் மக்களின் உள்ளக் கோயில்களில் எழுந்தருளியுள்ளாள் எனும் உண்மை வெள்ளிடை மலையாகின்றது.

தன் பெருங்கருணையால் அவ்வூர் மக்களுக்கு அருள் பாலித்து, அனுக்கிரகித்து வரும் முத்துமாரி அம்பாளுக்கு அவளடியார்கள் மகாகும்பாபிஷேகம் செய்யத் திருவுளம் கொண்ட இத்தினம் மகத்தான நாளாகும்.

பக்திப் பரவசத்தோடு இன்று பக்தர்கள் கூடிநின்று அம்பாளுக்கு எடுக்கும் இப் பெருவிழாவில் அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டவும் தாயவள் தாள்பணிந்து வாழ்த்துகின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர், யாழ்ப்பாண மாவட்டம்.

## பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இறைவனின் அருட்சக்தியாக விளங்குபவள் சக்தி. இச் சக்தியானவள் பல வடிவங்களில் நின்று உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் இடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அப்பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், சமூகம், கலைகள் சம்பந்தமான வாழ்வியல் வளர்ச்சிக்கும் தளமாக அமைந்துள்ளன. அவ்வகையில் ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன், அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் விளங்கின;விளங்குகின்றன.இத்தகைய ஆலயங்களை சிறப்பாக புனராவர்த்தனம் செய்துகும்பாபிஷேகம் நடத்திப் பராமரித்தல் அவசியமானதாகும்.

அந்த வகையில் யாழ்ப்பாணம், குரும்பசிட்டி அருள் மிகு முத்துமாரியம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவும், ஆலயத்தின் புனருத்தாரண கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்தவுள்ளஆச்சாரிய பெருமக்களுக்கும், இந்ந அரிய பணிசெம்மையாக நடை பெற நன்கு ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித் துக் கொள் கின்றேன். எல்லாம் வல்ல குரும்பசிட்டி முத்துமாரி அம்பாளின் அருள் பெற்று அனை வரும் இன்பமாக வாழ வேண்டுமெனப் பிரார்த் திக்கின்றேன்.


சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்,இந்து சமய ,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.
இல 248, 1/1, காலி வீதி,
கொழும்பு- 04

மாரிதன் மலரடி யோங்க மண்மிசைத் தலமு மோங்க
சீரிய பதியுமோங்க சிறப்புற மனைகளோங்க
வீரிய மைந்தரோங்க விளைபயிர் மண்ணிலோங்க
பேரிடர் களைவாய் குரும்பை மாரிநின் சீரடிகள் போற்றி



(13994)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# பருவம் தப்பிய மழையால் புகையிலை அறுவடை பாதிப்பு

வடமராட்சி, மார்ச் 27

பருவம் தப்பிப் பெய்த மழையினால் புகையிலை அறுவடை, உலர்த்தல் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் புகையிலைச் செய்கையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

வடமராட்சி உள்ளிட்ட குடாநாட்டின் பல பகுதிகளிலும் புகையிலை அறுவடை நடைபெற்று வருகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தில் ஒரு புகையிலைச் செடி 80 ரூபா தொடக்கம் 130 ரூபா வரையும், வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேசத்தில் ஒரு புகையிலைச்செடி 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரையான விலைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

**வடமராட்சிப் பிரதேசத்தில் ஒரு புகையிலைச் செடி 80 ரூபா தொடக்கம் 130 ரூபா வரையும் வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேசத்தில் ஒரு புகையிலைச்செடி 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரையான விலைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.**

அறுவடை செய்யப்படும் புகையிலையைக் கொள்வனவு செய்வதில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த புகையிலை வர்த்தகர்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். கொள்வனவு செய்யப்படும் புகையிலையை வெயிலில் காயப்போட்டு உலர்த்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் கடுமையாகப் பெய்த மழையினால் தோட்டங்களில் வெட்டப்பட்ட புகையிலையும், வெயிலில் உலரப் போடப்பட்ட புகையிலையும் நனைந்து சேதமடைந்தன. இதனால் புகையிலை வர்த்தகர்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. (ந-8)

# வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு நகர் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு

வடமராட்சி, மார்ச் 27

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்புப் பணிக்கு, பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கி வருவதாக பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தெரி வித்தார்.

இந்தப் பிரதான வீதியில் பருத்தித்துறை தொடக்கம் நெல்லியடி வரையான வீதி அகலிப்புப் பணி துரிதமாக நடைபெற்று வரு கின்றது.

பருத்தித்துறை நகரப் பகுதியில் பிரதான வீதியின் நடு மையத்திலிருந்து 7-8 மீற்றர் தூரத்துக்கு வீதி அகலிப்பு நடைபெற இருந் தது. ஆயினும் 8-9 மீற்றர் தூரத்துக்கு வீதியை அகலிப்புச் செய்யக் கூடிய வகையில் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களைப் பின்னோக்கி நகர்த்த முன் வந்துள்ளார்கள் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்ததுடன், இந்த ஒத்துழைப்புக்கு வர்த்தகர்களுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார். (ந)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவப் பணம் 50 ரூபாவாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவம் உடையவர்களின் அங்கத்துவப் பணத்தை 50 ரூபாவாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் ஆர்.எம்.வி.ஜே. ரணதுங்கா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்கக் கிளைகளின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் கடந்த 23 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இதுவரை காலமும் அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு அங்கத்துவப் பணமாக 20 ரூபா மட்டுமே பெறப்பட்டு வந்தது. எனினும் அங்கத்தவர் ஒருவருக்கு 29 ரூபா வரை அவர்களது தேவைகளுக்காக செலவு செய்யப்படுகிறது. இதனால் சேமிப்பில் உள்ள நிதி விரயமாக்கப்படுகிறது.

அனைத்து அரச சேவை ஓய்வூதியர்களும் நலன் பெறக் கூடியதாக இந்த வருடம் அங்கத்துவம் பெறுபவர்களுக்கு அங்கத்துவப் பணத்தை 50 ரூபாவாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ந-14)

## சமய சந்நிதிகளில்

மூளாய் பூரணை புட்கலை ஸ்ரீ ஹரிஹரபுத்திர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

★ ★ ★

நயினை ஸ்ரீமதுரை மீனாக்ஷி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இன்று புதன்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 27

தெல்லிப்பழை விழிசிட்டி ஞானவைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேக தினம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் விசேட பூஜை, அபிஷேகம் மற்றும் 108 கலச சங்காபிஷேகம் என்பன இடம்பெறும். இந்த ஆலயம் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு கடந்த வருடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# பருத்தித்துறை நகர மத்திய பஸ் நிலையத்தின் தண்ணீர்த் தாங்கிக்கு குடிதண்ணீர் வருமா?

## மக்கள் அங்கலாய்ப்பு

வடமராட்சி, மார்ச் 27

பருத்தித்துறை நகர மத்திய பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கியில் ஒரு வார காலத்துக்கும் மேலாக குடிதண்ணீர் இல்லாததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளார்கள்.

முந்திய காலங்களில் இந்தத் தண்ணீர் தாங்கிக்கு பருத்தித்துறை நகரசபையால் பவுசர் மூலம் குடிதண்ணீர் நிறைக்கப்பட்டு வந்தது. அதனால் பயணிகளும், பொது மக்களும் தண்ணீரைத் தாராளமாகப் பயன்படுத்தி வந்தனர்.

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தண்ணீர்த் தாங்கிக்கு குடிதண்ணீர் நிரப்பப்படாமையினால் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக பயணிகளும், பொதுமக்களும் கடை, கடையாய் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உச்ச வெயில் காலநிலை நிலவும் இந்தக் காலத்தில் தண்ணீரின் தேவை அதிகரித்துள்ள நிலையில் ஆத்திரம் கொண்ட பயணிகள், குடிதண்ணீர்த் தாங்கியில் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

**தண்ணீர்த் தாக்கிக்கு குடிதண்ணீர் நிரப்பப் படாமையினால் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக பயணிகளும், பொது மக்களும் கடை, கடையாய் அலைய வேண்டிய நிலைஏற்பட்டுள்ளது.**

பயணிகள், பொதுமக்களின் குடிதண்ணீர்த் தாகத்தைப் போக்க பஸ் நிலையத்தில் உள்ள தண்ணீர் தாங்கிக்கு தண்ணீரை நிறைக்க நகரசபை முன்வருமா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ந-8)

### கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி

# பண மோசடி செய்த நபர் தலைமறைவு

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட நபர் சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் பருத்தித்துறை அல்வாயைச் சேர்ந்த நவரத்தினம் சஜீபன் என்பவரிடம் கனடாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி பன்னிரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

குறிப்பிட்ட நபர் பணத்தைப்பெற்ற போதிலும் கனடாவுக்கு அனுப்பாத நிலையில் இது சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸார் குறிப்பிட்ட நபரிடம் சென்ற வேளையில் அவர் தலைமறைவாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகப் பொலிஸார் புலன் விசாரணையை மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்துள்ளனர். (ந-86)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க அடிக்கல் நடும் விழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கட்டட அடிக்கல் நடும் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 47/2 ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரி சுரேஸ்குமார் மேனன், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏ. விநாயகமூர்த்தி, திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் பிரதேச செயலர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்வர். (ந-14)

# பண்ணிசைப் போட்டி

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினரால் பண்ணிசைப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறும். போட்டியில் பங்குபெற விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம், இணுவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ரி)

# ஆன்மிகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தில் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் ஆன்மிகக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அமெரிக்க ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டு நாத சுவாமிகளது கருத்தரங்கு இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தமிழ்நாடு பாண்டிச்சேரியிலிருந்து பெறப்பட்ட ஆன்மிக ஏடு நிரம்பிய வன்தட்டினை ரிஷி தொண்டு நாத சுவாமிகள் இந்து மாமன்றத்திடம் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

அன்றைய தினம் பிற்பகல் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினால் மடிக்கணினிகளும் சிவ தொண்டர் அணிகளுக்கு மடிக்கணினி உட்பட கணினிகளை இந்துமாமன்றமும் வழங்கவுள்ளன. (ந)

# அதிபர்களுக்கான கூட்டம்

வடமராட்சி, மார்ச் 27

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-8-ரி)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] குமார் அறிவித்துள்ளார். (ந-9)

# மன்னிப்பின் மேன்மை

*மன்னன் நெப்போலியன் ஒரு முறை கூறினான். பேரரசர்களான யூலியஸ் சீசர், மகா அலெக்சாண்டரும் நானும் நீடித்த நிலையான பேரரசை நிறுவவேண்டும் என்று விரும்பினோம். ஆனால் எமது அரசு நிலைக்கவில்லை. ஏனெனில் எமது அரசு கொலைகளிலும் அடக்குமுறைகளிலும் அமைக்கப்பட்டது. ஆனால் இயேசுவின் அரசு நீடித்த நிலையான அரசாக இருக்கிறது. ஏனெனில் இது மன்னிப்பிலும் அன்பிலும் அமைக்கப்பட்டது.*

*இயேசுவின் வருகையும் வாழ்வும் மன்னிக்கும் அன்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. உலகிலேயே எல்லா வரலாற்று மாமனிதரும் ஆச்சரியப்படுகின்ற பல தத்துவங்களை இயேசு மனுக்குலத்துக்குக் கொடுத்துள்ளார்.*

*இயேசுவின் வருகைக்கு முன்பாக "கண்ணுக்குக்கண், பல்லுக்குப் பல்" என்று "பழிக்குப் பழி" என்ற இயல்பே மனித நடைமுறையில் இருந்தது. ஆனால் இயேசுவோ, உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள், உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள். உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களுக்கு ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர் களுக்கு செய்யுங்கள். மன்னியுங்கள் மன்னிக்கப் பெறுவீர்கள் என்று மன்னிப்பின் மேன்மையைக் கூறும் இயேசு, மன்னிக்கும் பண்பை தனது போதனையிலும் புதுமைகளிலும் காட்டுகிறார்.*

*ஒரு முறை அவரின் சீடர் எமக்கு செபம் செய்ய கற்றுத் தாருங்கள் என்று கேட்ட போது "நீங்கள் இப்படியாக செபியுங்கள் என்று கூறி சிறந்த ஒரு செபத்தை கற்பித்தார். அதில் எங்களுக்கு எதிராக குற்றம் செய்யும் அனைவரையும் நாம் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும்" என்று கற்பித்து நாம் மற்றவர்களின் குற்றங்களை மன்னிக்கும் போது தான் இறைவனும் நமது குற்றங்களை மன்னிக்கிறார் என்று கூறு கிறார். மன்னிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி இன்னும் அநேக விடயங்களைக் கூறிய இயேசு உலகையே உலுக்கிய நிகழ்வான சிலுவைப்பாடுகளிலும் மரணத்திலும் தன்னைக் கொன்றவர்களையும் மன்னிக்கிறார். இது உலக வரலாற்றிலே மனிதத் தன்மையையே மாற்றி அமைக்கின்ற நிகழ்வாக விளங்குகிறது. தன்னை கொடிய முறையில் கொல்பவர்களையும் மன்னித்து மன்னிப்பின் உச்சக் கட்டத்தைக் காட்டுகிறார்.*




*நாமும் மன்னிக்கும் மக்களாக இருக்கவேண்டும் என்று நம்மை இயேசு அழைக்கின்றார். மன்னித்து அன்பு செய்ய முடியாத தப்பான பண்பினால் நாம் எத்தனை கொலைகளைச் சந்தித்து விட்டோம். எத்தனை இழப்புக்களை சந்தித்தோம். எத்தனை உறவுகளைத் தொலைத்து விட்டோம். இந்த தவக்காலமும், இயேசுவின் பாடுகளும் நமக்கு மன்னிப்பின் இன்றியமையாத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. நம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் ஒருவரையொருவர் மன்னிக்கும் தன்மை உடையவர்களாக வாழ்வோம். அதன் வழியாக புதிய உலகம் சமைப்போம்.*

அருட்பணி. அ.ம.ஸ்ரீபன் அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்


## 27.03.2013 (புதன்கிழமை)











### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச் செய்தி



திருநெல்வேலியின் மத்தியில் வீற்றிருந்து அருளாட்சி புரிந்துவரும் அன்னை சிவகாம சுந்தரி அம்பிகைக்கு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. கும்பாபிஷேக காலங்களில் ஆலயத்திலே நாங்கள் சாதாரணமாகக் காண முடியாத பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அழகான யாகசாலை அதிலே அன்னை ரூபா, ரூபமாக கும்பத்திலே எழுந்தருளி இருக்கும் காட்சி நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இந்திரன், ஜயமானன் இவர்களை தத்துவமாக விளக்கும் ஒன்பது குண்டங்கள், அந்தக் குண்டங்களிலே மந்திரம், கிரியை பாவனைகளோடு சிவாச்சாரியார்கள் செய்கின்ற மகத்தான ஹோமங்கள் வேத பாராயணம், திருமுறை பாராயணம், அரகர கோசம் இவை எல்லாம் நாம் சாதாரண நாள்களில் காண முடியாதவை. இவை எல்லாம் நிறைந்திருக்கும் மகா கும்பாபிஷேகத்தை தரிசிப்பதன் மூலம் ஆன்ம ஈடேற்றம் கிடைக்க வாய்ப்பு உண்டு. இக் கும்பாபிஷேகத்தை தரிசிக்கும் பக்தர்கள் அன்னையின் அருள் பெற்று சிறப்புற வாழ ஆசீர்வதிக் கின்றேன்.

சிவஸ்ரீ நா. மகாதேவக் குருக்கள்

### பிரதம குருவின் ஆசிச் செய்தி



எம் சிவகாமசுந்தரி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் நடத்த அருள் பாலித்துள்ளது. கும்பாபிஷேகம், கும்பாபிஷேகக் கிரியைகளைக் காண்பது என்பது அரும்பெரும் பாக்கியம் ஆகும். பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் இடம் பெறுகின்றது. ஆகவே ஒரு கும்பாபிஷேகம் தவற விட்டால் பன்னிரு ஆண்டுகளுக்கு பின்னர் தான் மீண்டும் கும்பாபிஷேகம் இடம்பெறும். சிவகாமசுந்தரி அம்பாளின் மகா கும்பாபிஷேக பலன்கள் எல்லா மக்களுக்கும் கிடைக்கப்பெற்று நாட்டில் சாந்தியும், அமைதியும் தளைத்தோங்க வேண்டும் என்று சிவகாமசுந்தரி சீரடி வணங்கிப் பிரார்த்திக்கின் றேன்.

வைரவநாத ஜெகதீஸ்வரக் குருக்கள்.

### ஆலய வரலாறு

யாழ். குடாநாட்டின் தொன்மை மிக்க கிராமங்களில் திருநெல்வேலியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இக் கிராமத்தில் சைவமும், தமிழும் செழித்து வளர்ந்து வந்துள்ளது. இக் கிராமத்தின் மக்கள் கடவுள் பக்தியும், கடின உழைப்பும் உடைய வர்கள்.

இக் கிராமத்தில் பலர் கல்வியில் சிறந்து விளங்கி புகழ் பெற்றுள்ளனர். ஆறுமுகநாவலரின் தாய்வழி மூதாதையரான ஞானப்பிரகாச முனிவர் திருநெல் வேலியைச் சேர்ந்தவர்.

திருநெல்வேலி கிராமத்தில் காணப்படும் சைவ ஆலயங்களுள் ஒன்று அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம். திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கல்வியங்காடு செல்லும் ஆடியபாதம் வீதியில் ஆண்டிப்புலம் என்ற தோம்புப் பெயர் கொண்ட காணியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் தொன்மைக்கு கச்சேரியில் ஆலயங்கள் தொடர்பான பதிவுப் புத்தகத்தில் இரண்டாம் பக்கத்தில் இந்த ஆலயம் பற்றிய குறிப்பு காணப்படுவது சிறப் பாகும்.

1844 ஆம் ஆண்டு பதிவுப்படி ஓடு கொண்டு வேயப்பட்ட கூரையுடையதென்றும், தினமும் ஒரு நேரப் பூஜை இடம்பெறுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த ஆலயத்தின் முகாமையாளராக குமாரவேலு சண்முகம் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் 1951 ஆம் ஆண்டு தொடக்கம் கொடி ஏற்றப்பட்டு திருவிழா நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலயம் 1969 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புதிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டன.

1971 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

அடியார்களின் நிதியுதவியுடனும் அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மூலமும் வழங்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபா நிதி உதவியுடனும் பரிபாலன சபையினால் இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதி கும்பாபிஷேகம் நடை பெற்றது.

### ஆலய பரிபாலன சபையின் ஆசிச் செய்தி

நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம் அம்பாளின் அருட்கடாட்சத்தினால் மகா கும்பாபிஷேகம் காண்கிறது.

பரிபாலன சபையினராகிய நாம் வெறும் கருவிகளே. திருப்பணிகள் ஆரம்பித்த நாளில் இருந்து எமது முயற்சிகள் தங்கு தடை இன்றி நிறைவேறின. இப் பெரும் பணிக்கான பொருளுதவியும், நிதி உதவியும், சரீர உதவியும் பெரியோர்களின் ஆலோசனைகளும், ஆசிகளும் வாழ்த்துக்களும் எம்மை உற்சாகப்படுத்தின. திருநெல்வேலி வாழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் திருநெல்வேலி வாழ் அன்பர்கள் குறிப்பாக துடிப்புடனும், துணிவுடனும் இயங்கும் திருநெல்வேலி இளைஞர்கள் எமக்கு உறுதுணையாக நின்றனர். இதனால் இக் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம் பெறுகின்றது. மீண்டும் உதவிய அன்புள்ளங்களுக்கு எமது இதயபூர்வ நன்றிகள். அம்பாளின் அருட்கடாட்சம் அனைவரும் பெறுவோமாக.

ஆலய பரிபாலன சபை.

## "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**சிறி சிவராம் ரேடர்ஸ்**
இல.248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8629
077 756 0760

**விமலா களஞ்சியம்**
இல. 6, ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி.

**ரூபி நகைமாடம்**
இல.07, பலாலி றோட்,
திருநெல்வேலி.
தொ.பே: 0779 905 819

**ஆசா வர்த்தக நிலையம்**
137, பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொ.பே: 021 222 0401

**ஜொலி ரெஸ்ரோரன்ட்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**ஏசியன் புடைவையகம்,**
இல.24, பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொ.பே: 021 321 8306

**கனகா பத்திரிகை விற்பனையகம்**
இல.06,
திருநெல்வேலி.

**தேனு களஞ்சியம்**
இல.29, நவீன சந்தை,
திருநெல்வேலி.
தொ.பே: 021 222 6013

**ராம் கரன் புத்தகசாலை**
இல.04, நவீன சந்தை,
பலாலி றோட், திருநெல்வேலி.

(C/7349)(10,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொந்தக் காணிகள் இருந்தும் இரவல் இடத்தில் தபாலகங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.குடாநாட்டில் சில தபாலகங்களுக்குச் சொந்தக் காணிகள் இருந்தும் அவற்றுக்கான கட்டட வசதி இல்லாமையால் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

வட்டுக்கோட்டை, கைதடி, அளவெட்டி, பருத்தித்துறை ஆகிய தபால்நிலையங்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த தபாலகங்களுக்குச் சொந்தக் காணிகள் இருந்தும் அவற்றுக்கென நிரந்தரக் கட்டடங்கள் இதுவரை அமைக்கப்படவில்லை.

இதனால் கடந்த பல வருடங்களாக இந்தத் தபாலகங்கள் தனியார் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன.

இந்தத் தபாலகங்களுக்கு நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதற்கு இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறுகையில்;

இந்தத் தபாலகங்களுக்குரிய நிரந்தர கட்டடங்கள் அமைப்பதற்கு தபால் திணைக்களத்திடம் போதிய நிதி வசதி இல்லை- என்றார்.

(த-17)

பிள்ளை நேயப் பாடசாலைகளாக

## தென்மராட்சியில் 24 பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்குத் தெரிவு

தென்மராட்சி,மார்ச் 27

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 24 பாடசாலைகள் பிள்ளை நேயப் பாடசாலைஅபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை, வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயம், சாவகச் சேரி சக்தியம்மன் வித்தியாலயம், வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, போக்கட்டி அ.த.க. பாடசாலை, போக்கட்டி றோ. க.த.க. பாடசாலை, கெற்பேலி அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், இயற்றாலை அ.மி.த. க. பாடசாலை, கரம்பகம் அ.த.க. பாடசாலை; மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், கரம்பை அ.மி.த.க. பாடசாலை, தனங்கிளப்புஅ.த.க.பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை, கைதடி எழுதிடல் அ.த.க.பாடசாலை, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.(ந-9)

## நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வடமராட்சி, மார்ச் 27

பருத்தித்துறை நகர அபிவிருத்தி தொடர்பாக பருத்தித்துறை வரியிறுப்பாளர் சங்கம் மற்றும் நகர சபை ஆகியற்றுக்கிடையே கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நகர சபை அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெறும் என வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் சிவா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(ந-8)

## நூற்றாண்டு விழா

கோப்பாய் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.வீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூற்றாண்டு மலர் வெளியீடும், பரிசில் வழங்கல், கௌரவிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசுப்பிரமணியம் உட்பட பலர் கலந்துகொள்வர். (ந-14)

## கடலின் நடுவே தனித்திருந்தவாறு மக்களுக்குச் சேவை செய்கிறோம்

### தீவகத்தின் அதிசயம் நெடுந்தீவு என்கிறது பிரதேச சபை

யாழ். குடாநாட்டின் ஏனைய பிரதேச சபைகளால் ஆற்ற முடியாத மக்கள் நலப் பணிகளை கடலின் நடுவே தனித்திருக்கும் நெடுந்தீவில் நாம் ஆற்றி வருகின்றோம் என்று நெடுந்தீவு பிரதேச சபை அறிவித்துள்ளது.

சாவு வீடொன்றில் கலந்து கொள்ள நெடுந்தீவுக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனும், யாழ். மாநகர சபை உறுப்பினர் விந்தனும் அங்கு வந்தவர்களுடன் கலந்துரையாடிவிட்டு ஊடகங்களுக்கு ஏதேதோ கூறியுள்ளனர்'' என்று தெரிவிக்கும் நெடுந்தீவு பிரதேச சபை அது தொடர்பில் நீண்ட கடிதம் ஒன்றையும் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபையின் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதுவித வசதிகளுமற்று அபிவிருத்தியின்றி வறண்ட பிரதேசமாகக் காணப்பட்ட நெடுந்தீவுப் பிரதேசம் 1990 ஆம் ஆண்டின் பின் பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டு செயற்திட்டங்களையும் அபிவிருத்திகளையும் பெற்று இன்று தீவகத்தின் அதிசயமாக விளங்குகின்றது.

தடங்கலற்ற கடற்போக்குவரத்து சேவை, 24 மணிநேர மின் விநியோகம், குடிதண்ணீர் விநியோகத்திட்டம், அபிவிருத்திப் பணிகள், விவசாய வணிக மற்றும் கைத்தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள், வாழ்வாதார உதவித்திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் மூலம் நெடுந்தீவு வளமான பிரதேசமாக மாற்றமடைந்துள்ளது. நெடுந்தீவைச்சேர்ந்தவிந்தனோ அல்லது அவர் சார்ந்த கட்சியினரோ ஒரு நாளாவது நெடுந்தீவிலிருந்து மக்கள் நலப் பணியாற்ற முயலவில்லை- என்றுள்ளது.

வாழ்வாதார உதவிகள், வீடமைப்புத் திட்டங்கள், குடிதண்ணீர், மின்சாரம் போன்ற விடயங்களில் அரசியல் தலையீடுகள் உள்ளதாகவும், உரிய உதவித் திட்டங்கள் வழங்கப்படுவதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## மிகவும் மோசமான நிலையில் கைதடி நவீல்ட் பாடசாலை வீதி

### விரைவில் புனரமைத்துத் தருமாறு விழிப்புலனற்றோர் கோரிக்கை

தென்மராட்சி,மார்ச் 27

கைதடி நவீல்ட் பாடசாலைக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு யாழ். மாவட்ட விழிப் புலனற்றோர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கைதடி ஏ-9 வீதியிலிருந்து கோப்பாய்- கைதடி வீதியை இணைக்கும் இந்த வீதி, நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது. பல இடங்களில் குன்றும் குழியுமாக காணப்படுவதால் விழிப்புலனற்றோர் வீதியை விட்டு விலகிச் செல்ல வேண்டிய அவலநிலை காணப்படுகிறது.

இந்த வீதியை அண்டிய பகுதியில் மாகாண அரச திணைக்கள அலுவலகங்கள் இயங்கிவருகின்ற போதிலும் வீதி திருத்தப்படாமல் உள்ளதால் வாகனங்கள் வரும் போது வீதியில் செல்லும் எம்மைப் போன்றோர் வீதியை விட்டு இறங்கிச் செல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-9)

மலிவு விற்பனை மலிவு விற்பனை



புதுவருடத்தை முன்னிட்டு இன்று(27.03.2013) முதல் - (14.04.2013) வரை

தம்ரோ, சியெஸ்டா பொருள்களின் யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் சோபா செற்றி, மெத்தை, கட்டில், அலுமாரி வகைகள், கொம்பியூட்டர் ரேபிள்கள், பிளாஸ்ரிக் கதிரை வகைகளை

5% - 10% வரையிலான விற்பனைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

(35308)2.6.7)

ஜமுனா பர்னிச்சர், 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 2829

ஜமுனா பர்னிச்சர், 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 222 1092

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இவ்வருடம் கடந்த இரு மாதங்களில் மட்டும் 60 பேர் காசநோயால் பாதிப்பு

### மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி தகவல்

யாழ்.மாட்டத்தில் இந்த வருடம் கடந்த இரண்டரை மாத காலப் பகுதியில் மட்டும் 60 பேர் வரையில் காசநோயின் தாக்கத்துக்கு இலக்காகி உள்ளனர் என்று மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியர் எஸ்.யமுனானந்தா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சளிப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் சுமார் 60 பேருக்கு காசநோயின் தாக்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போது உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குடாநாட்டில் காசநோயின் தாக்கம் தற்போது குறைந்து செல்கின்றது. இதற்கென மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டமையே இதன்தாக்கம் குறைந்ததுக்கு முக்கிய காரணம்.

தொடர்ந்தும் கிராமங்கள் தோறும் தொடர்ச்சியாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடத்தி இந்தத் தாக்கத்தை முழுமையாக ஒழிப்பதேஎமது நோக்கம் - என்றார்.

இதேவேளை கடந்த ஆண்டில் மட்டும் 319 பேர் இந்த காசநோய்த் தாக்கத்துக்கு இலக்காகி சிகிச்சை பெற்றதாவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-17)

## பாடசாலையில் பழுதடைந்துள்ள கணினிகளை திருத்த நடவடிக்கை

வடமராட்சி, மார்ச் 27

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் பழுதடைந்த கணினிகளை வலய மென்பொருள் மாற்று வலையமைப்பு தீர்வு, பராமரிப்பு அணியினர் மூலம் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலய மட்டப் பாடசாலைகளில் உத்தரவாத காலம் முடிவடைந்த திருத்தம் செய்யப்பட வேண்டிய கணினி உபகரணங்களின் விவரங்களை கடிதமூலம் வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இணைப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

விவரங்கள் கிடைக்கப்பெற்றதும் தீர்வு அணியினர் பாடசாலைகளுக்கு நேரடியாகப் பயணம் செய்து பழுதடைந்த கணினி உபகரணங்களைத் திருத்தி அமைத்து வழங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## நீதிமன்றில் மோ.சைக்கிள்

வடமராட்சி, மார்ச் 27

உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிளை உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

அநாதரவாகக் காணப்பட்ட என்பி/ரிஎச் 9639 இலக்கமுடைய நீலநிற மோட்டார் சைக்கிள் கடந்த வருடம் பெப்ரவரி 10ஆம் திகதி பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஒ-8)

## பரு. முதலாம் குறுக்கு வீதியில் நடைபாதை வியாபாரத்துக்கு தடை விதிக்க கோரிக்கை

பருத்தித்துறை மீன் சந்தை அமைந்துள்ள முதலாம் குறுக்கு வீதியில் நடைபாதை வியாபாரத்துக்குத் தடை விதித்து அந்த வீதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் சிரமத்தைத் தவிர்க்குமாறு பருத்தித்துறை நகர சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது நகர வரியிறுப்பாளர்கள் சிலர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

நடைபாதை வியாபாரிகளுக்கு வேறிடம் ஒதுக்குவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் ஒரு மாத காலத்துக்குள் முதலாம் குறுக்கு வீதியில் நடைபாதை வியாபாரம் முற்று முழுதாகத் தடை செய்யப்படும் என நகர சபைத் தலைவர் சபா. ரவீந்திரன் தெரிவித்தார்.

அந்த வீதியால் இராணுவ வாகனங்கள் மற்றும் பொது வாகனங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் எந்த நேரமும் வீதி விபத்துக்களும், அதனால் உயிரிழப்புக்களும் ஏற்படும். அபாயம் உள்ளது எனவே கால அவகாசமின்றி உடனடியாக நடைமுறைக்கு வரும் நோக்கில் முதலாம் குறுக்கு வீதியில் நடைபாதை வியாபாரத்தை நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

(வ-8)

**வீடு விற்பனைக்கு**

அராலி வீதி, சங்கானையில் பத்துப் பரப்புக் காணியுடன் கிணறு சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள நாற்சார வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0212221329, 0774733893, 0776253040

## துப்புரவுப் பணியில் ஈடுபட்ட வயோதிபரை பாம்பு தீண்டியது

வளவுக்குள் நிற்கும் பனைகளிலிருந்து வீழ்ந்து குவியலாகக் காணப்பட்ட ஓலைகளை பிரித்து துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்த வயோதிபரை ஓலை மறைவிலிருந்த பாம்பு தீண்டியது.

இந்தச் சம்பவம் நேற்று பூநகரி சித்தன் குறிச்சியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நடுவிலார் சுப்பிரமணியம் (வயது-72) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். அவர் பூநகரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## மரண அறிவித்தல்

### நாகன் கந்தையா



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் கந்தையா (ஓய்வு பெற்ற அதிபர்) 25.03.2013 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் - ஐயாத்தை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற செல்லன் (ராசு) மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் ஜெயசித்திரா, ஜெயகாந்தன் (விக்டர்), ஜெயரஞ்சன் (கிறிஸ்ரி), ஜஸ்மின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் முருகன் (அப்புலிங்கம்)- சிதம்பரம் தம்பதியரின் மருமகனும் குணரத்தினம், அருள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் 30.03.2013 சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சின்னத்துரை
(சகோதரன்).

கைதடி மேற்கு,
கைதடி.

(34901) (23- 6-16)

AVANT GARDE SECURITY SERVICES (PVT) LTD.

**அவன்காட் பாதுகாப்புச் சேவை - பதவி வெற்றிடம்**

கம்பனி பதிவு இல - ( P.V- 9983 )
பாதுகாப்பு அமைச்சிற் பதியப்பட்ட இல - ( 1474 )

**பாதுகாப்பு பதவி வெற்றிடங்கள்**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் விஸ்தரிக்கப்பட்ட அவன்காட் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

i. பாதுகாப்பு முகாமையாளர்
ii. நிலையப் பொறுப்பதிகாரி
iii. மாவட்டப் பொறுப்பதிகாரி
iv. சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்
v. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண், பெண் இருபாலாரும்)

**தகைமைகள்**

☐ க.பொ.த. (உ/த)
☐ இளைப்பாறிய இராணுவ, காவல்துறை, பாதுகாப்பு உத்தியோகத்தர்
☐ சிறந்த தேக ஆரோக்கியம்
☐ வயது எல்லை (18 வயது – 40 வயது )

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் பின்வரும் முகவரிக்கு சமூகம் தரவும்
☐ சுய விவரக் கோவை
☐ பிறப்புச் சான்றிதழ்
☐ கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
☐ அண்மையில் பெறப்பட்ட கிராம சேவகர் நற்சான்றுப் பத்திரம், வதிவிட உறுதிப்பாட்டுப் பத்திரம்
☐ தேசிய அடையாள அட்டைப் பிரதி
☐ பாதுகாப்பு சேவையில் முன் அனுபவம் உடையவர்கள் தம் அனுபவத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

**குறிப்புகள்**

1.பாதுகாப்பு சேவையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
2.ஆரம்பச் சம்பளம் ரூ.17,000 இல் இருந்து நியமனத்திற்கு தகுந்தவாறு பேசித் தீர்மானிக்கப்படும்.
3.கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்ற விரும்புபவர்களுக்கு உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.
4.ஏனைய சலுகைகள், விடயங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
5.நேர்முகப் பரீட்சை பங்குனி மாதம் 27ம் திகதி தொடக்கம் சித்திரை மாதம் 5ம் திகதி வரை இடம்பெறும்.

நேர்முகப் பரீட்சை இடம் பெறும் இடமும், ஆவணங்கள் அனுப்ப வேண்டிய முகவரியும்.


**யாழ். மாவட்டம்**
அவன் காட்
இயக்குனர்/ பணிப்பாளர்.
J.சிற்றம்பலம்,
தேவாலய வீதி, சங்கானை.
Tel:- 0777724593- 0212250674
வடமராட்சி தொடர்பு : 0778331478
திரு.வேதீஸ்வரன் (சிறி).

**கிளிநொச்சி மாவட்டம்**
அவன் காட்
இயக்குனர்/ பணிப்பாளர்.
J.சிற்றம்பலம்
மாஸ் விடியல் வளாகம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நாகராஜா

(ஓய்வுபெற்ற றேடியோ கிராபர்)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அம்பனை, சுன்னாகம் மேற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகராஜா (முன்னாள் எக்ஸ்கதிராளர், பொரளை, தெல்லிப்பழை, ஓமான் வைத்தியசாலைகள்) நேற்று 26.03.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் சாந்தியின் (உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி) பாசமிகு கணவரும் ஆதீசனின் (2014 உயர்தரம் - கணிதப்பிரிவு, யாழ். இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும் குழந்தைவேலு, காலஞ்சென்ற பசுபதி மற்றும் பூரணம், பாக்கியம், வைரமுத்து, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மல்லிகாதேவி, பிரின்ஷினா மற்றும் வன்னித்தம்பி, காலஞ்சென்ற நாகநாதன் மற்றும் அன்னலட்சுமி, சற்குணவதி ஆகியோரின் மைத்துனரும் குமுதினியின் (பிரதேச செயலகம், உடுவில்) மைத்துனரும் அரியரத்தினத்தின் சகலனும் திவாகரன், சிவராணி, சுதாகரன், ஆனந்தராஜ், ஆனந்தி, பத்மாசினி, தர்சினி, சத்தியசீலன் ஆகியோரின் சிறிய தந்தையும் மழவிகா, அர்ச்சகி ஆகியோரின் ஆசையப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை, சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(34901) (23- 6-16)

தகவல்:
மனைவி, மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்துக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

## நிரந்தரக் கட்டடம் இன்றி பாடசாலைகள்

தென்மராட்சி, மார்ச் 27

தனங்கிளப்பு, எழுதுமட்டுவாழ் தெற்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் அங்குள்ள பாடசாலைகள் நிரந்தரக் கட்டடம் இல்லாமலே இயங்குகின்றன. அதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாணவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒரே குரலில் தெரிவித்தனர்.

தனங்கிளப்பு பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னமும் பாடசாலைக்குரிய தற்காலிக வகுப்புகளுக்கான தொகுதியோ நிரந்தரக் கட்டடமோ அமைக்கப்படாததால் தனியார் வீடொன்றில் பாடசாலை இயங்குவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எழுதுமட்டுவாழ் தெற்கில் மீள்குடியமர்வு இடம்பெற்ற வேளையில் கடந்த வருடம் அங்குள்ள ஸ்ரீகணேசா வித்தியாலத்துக்கு தற்காலிக வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. அதற்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள்கேட்டுள்ளனர்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை தனி அலகாக கடந்த ஜனவரி தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளது. ஆயினும் தொடர்ந்தும் மத்திய கல்லூரியின் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. ஆரம்பப் பாடசாலைக்கான காணி உள்ளதால் அதனுள் வகுப்பறைகளை அமைக்குமாறு மீசாலைப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்துக்கான கட்டட வசதிகளை சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம் செய்து தருவதாக உறுதியளித்துள்ளதாகவும்,

தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை ஆகிய வற்றில் கட்டடங்கள் அமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மாகாண கல்வித் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி கிடைத்ததும் சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(ந-9)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் போட்டிகள்.

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத் தமிழ் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தொடர்பான பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் கீழ்ப் பிரிவில் பேச்சுப் போட்டியில் தரம் 4, 5 மாணவர்களும், இடைநிலைப் பிரிவில் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் தரம் 6,7,8 மாணவர்களும், மேற்பிரிவில் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் தரம் 9,10,11 மாணவர்களும், அதி மேற்பிரிவில் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் தரம் 12, 13 மாணவர்களும் பங்குபற்றலாம்.

கீழ்ப்பிரிவு பேச்சுப் போட்டியில் ''தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்'', ''தமிழனாய் வாழ்வோம்'' ''ஒன்றே குலம்'' ஆகிய தலைப்புகளிலும், மத்திய பிரிவில் ''தமிழுக்குத் தொண்டாற்றிய சமயத் துறவியர்'', ''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'', புதியதோர் உலகம் செய்வோம்'', ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' ஆகிய தலைப்புக்களிலும், மத்திய பிரிவில் ''தமிழ் வளர்ச்சியில் மேற்குலகச் செல்வாக்கு, ''தமிழாய்வுகளுக்கு வழிகாட்டிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்'', தமிழரும் கல்வியும்'', ''தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவோம்'' ஆகிய தலைப்புகளிலும் பேச்சுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக போட்டி இணைப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா குழு, புனித பத்திரிசியார் கல்லூரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந-14)

# வை.எம்.சி.ஏ. நிறுவனத்தால் இலவச சட்ட ஆலோசனை

சட்ட ஆலோசனைதேவையானோருக்கு இலவச சட்ட ஆலோசனையை வழங்க பருத்தித் துறை வை.எம்.சி.ஏ. நிறுவனம் முன் வந்துள்ளது.

பாதிக்கப்பட்டோர் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஏற்படும் பிரச்சினைகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்க கரவெட்டி, கட்டை வேலியில் அமைந்துள்ள பருத்தித்துறை வை.எம். சி.ஏ. இல் சட்ட நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

சட்ட ஆலோசனை தேவையான பயனாளிகள் வேலை நாள்களில் தம்மைப் பதிவு செய்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஆவணங்கள் பெற்றுக்கொள்ள உதவுதல், அரச அதிகாரிகளுடன் தொடர்புக்கான சட்ட ஆலோசனைகள், குடியுரிமை சட்டத்துக்கும், குற்றவியல் சட்டத்துக்குமான ஆலோசனைகள், மீள்குடியமர்வு, இடப்பெயர்வுகளால் இறந்தவர்களுக்கான இழப்பீடுகள் போன்றவற்றுக்கான சட்ட ஆலோசனைகள், சிறுவர் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு, பெண்கள் கொடுமை பற்றிய விழிப்புணர்வு, போரால் பாதிக்கப்பட்டோர்கள் நிவாரணம் பெற ஆலோசனைகள் இங்கு வழங்கபடவுள்ளன. (வ-8)


## வேலையாள் தேவை

கொக்குவில், ஆடியபாதம் வீதியிலுள்ள பான்சி கடை ஒன்றில் பணியாற்ற பெண் பிள்ளை தேவை. கொக்குவில், திருநெல்வேலி பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0778448704, 0779116020

## Soft View Computer Center

கணினி, சிங்களம், ஆங்கிலம், Phone Repairing போன்ற புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Night Classes Time 6-9 pm

102, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
E.C. கொலின் 0779053545


# நிர்வாக உறுப்பினர் தெரிவு

வடமராட்சி, மார்ச் 27

உடுப்பிட்டி, நாவலடி நலன்புரி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் நா.பாலசிங்கம், செயலாளர் கொ.குணசிங்கம், பொருளாளர் இ.இராசதுரை மற்றும் 5 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(ந-8)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 27

கட்டைக்காடு சென் மேரிஸ் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய செயலாளராக எஸ். முத்துராசா தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக இந்தச் சங்கத்தின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.

அதனைத் தொடர்ந்து இந்தப் பதவிக்கான தெரிவு சங்க பொதுக்கூட்டத்தில் நடைபெற்றது. இதன் போது இவர் தெரிவானார்.

(ந-8)

# கலை, இலக்கியப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்

கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தேசிய கலை, இலக்கியப்போட்டிகளில் கரவெட்டிப் பிரதேச மாணவர்களும், எழுத்தாளர்களும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

கட்டுரை, கவிதை, பாட்டு நயத்தல் போட்டிகளில் சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவு மாணவர்களும், திறந்த போட்டிகளான விவரணம், சிறுகதை, கவிதை, சிறுவர் கதை ஆக்கம் ஆகிய போட்டிகளில் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்போட்டிகள் தொடர்பாக மேலதிக விவரங்களை கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ளலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

# 'ஞானச்சுடர்' வெளியீட்டு விழா

வடமராட்சி, மார்ச் 27

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மிக சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் வெளிவருகின்றது.

இந்த நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் வ.கணேசமூர்த்தியும், மதிப்பீட்டுரையை க.ஆனந்தராசா, அன்னைதாசனும் நிகழ்த்துவார்கள். இதனைத் தொடர்ந்து 63 நாயன்மார்களின் குருபூசை இடம்பெறும். (ந-8)

# மரண அறிவித்தல்

## திருமதி பார்வதி நாகமணி



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி நாகமணி நேற்று முன்தினம் (25.03.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணியின் மனைவியும், காலஞ்சென்ற சடையர்- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா, செல்லையா, மற்றும் நாகேஸ்வரி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு, குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மகாலிங்கம்(சுவிஸ்), காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் யோகேஸ்வரி, சத்தியபாலன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பரமேஸ்வரி, சண்முகலிங்கம், குமாரதாஸ், யசோதா ஆகியோரின் பாசமிகு மாமியும், சந்திரகுமார் (ஜேர்மனி), சந்திரிகா(கனடா), ஜீவகுமார்(சுவிஸ்), சுதர்சன்(ஜேர்மனி), குகரஞ்சி, குகப்பிரியா, சங்கீத், தனுஷா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆகாஷ், அபிலாஸ், சிந்தியா, ஷோபியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.03.2013) புதன்கிழமை பி.ப.3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகேஸ்வரி(மகள்),
குமாரதாஸ்(மருமகன்).

39/1, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

# திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவிடமிருந்து பறிப்பதில் குழப்பம்

கொழும்பு, மார்ச் 27

இந்திய நிறுவனத்திடம் இருந்து திருகோணமலை எண்ணெய் குதங்களை மீளப்பெறுவது தொடர்பாக இலங்கை அரசுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, திருகோணமலையில் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் வசம் உள்ள பயன்படுத்தப்படாத எண்ணெய்க் குதங்களை மீளப்பெறுவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறியிருந்தார்.

ஆனால், அத்தகைய எந்தப் பேச்சுக்களும் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்ட இந்திய நிறுவனம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், சக்தி மற்றும் சுற்றாடல்துறை அமைச்சரும், முன்னாள் பெற்றோலியத்துறை அமைச்சருமான சுசில் பிறேம் ஜயந்த, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான திருகோணமலை எண்ணெய் குத வளாகம் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டது, 2002 இல் விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டுக்குச் சமமானது என்று தெரிவித்துள்ளார்.

அப்போது ஐ.தே.க அரசு திருகோணமலையில் உள்ள 600 ஏக்கர் நிலத்தையும் 102 எரிபொருள் குதங்களையும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திடம் கையளித்தது.

ஒட்டுமொத்த இலங்கையிலும் எரிபொருள் வியாபாரத்தின் மூலம் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் ஈட்டக்கூடிய இலாபத்தை விட அதிகமான இலாபத்தை, இந்தியாவின் ஒரு முக்கிய நகரமான புனேயில் மட்டும் அதனால் ஈட்ட முடியும். இவர்கள் இங்கு வந்தது இலாபத்தை ஈட்டுவதற்காக அல்ல. இலங்கையுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே வந்தனர்.

தற்போது திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மீளப் பெறுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை பெற்றோலியத்துறை அமைச்சு கையளிக்கவுள்ளதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவிடம் இருந்து மீளப்பெறும் திட்டம் இல்லை என்று இலங்கைப் பெற்றோலியத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும் கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வயதுக்குக் குறைந்தோர் மரதன் ஓடுவதற்குத் தடை

## விளையாட்டுத்துறை மருத்துவப் பிரிவு அறிவிப்பு



கொழும்பு,மார்ச் 27

பதினைந்து வயதுக்குக் குறைவான மாணவர்களை மரதன் ஓட்டப் போட்டிகளில் ஈடுபடுத்து தடை செய்யப் பட்டுள்ளது என்று விளை யாட்டு மருத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

1500 மீற்றரை விட கூடு தல் தூர ஓட்டப் போட்டிகளில் மாணவர்களை சேர்ப்பதானால் அவர்களை மருத்துவப் பரி சோதனைக்குட்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டு மருத்துவப் பிரிவு பணிப்பாளர் அர்ஜுன டி சில்வா தெரிவித்தார்.

விளையாட்டு மருத்துவப் பிரிவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தூர ஓட்டப் போட்டி களில் பங்கேற்ற சில மாண வர்கள் திடீரென உயிரிழந்த சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெற்றன. இது குறித்து கூடுதல் கவனம் செலுத்திய ஜனாதிபதி, விளையாட்டு மருத்துவப் பிரிவுக்குத் தேவை யான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் மாணவர்க ளுக்கு மரதன் ஓட்டப் போட்டி களில் ஈடுபட தடைவிதிக் கப்பட்டுள்ளது.

விளையாட்டுக்களில் ஈடுபடும்போது திடீர் நோய் களினால் மாணவர்கள் உயிரி ழப்பதை தடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளது. ஒவ்வொரு வயது மட் டத்தினருக்கும் ஓட்டதூரம் குறித்து நிர்ணயிக்கப்பட்டுள் ளது. 11வயதான மாணவர் களை 5 கிலோ மீற்றர் தூரம் வரையான ஓட்டப்போட்டி யிலே ஈடுபடுத்த முடியும். 9 வயது மாணவர்கள் 3 கிலோ மீற்றரை விட தூரப் போட்டி களில் ஈடுபடுத்த முடியாது.

1500, 3000, 5000 மரத னோட்டப் போட்டிகளில் ஈடுபடுத்தும் மாணவர்களை போட்டிக்கு முன் கட்டாயம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி தகுதிச் சான்றி தழ் பெற வேண்டும்.

இது குறித்து பாடசாலை அதிபர்கள் விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளன. கல்வி அமைச்சி னூடாக பாடசாலைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட் டுள்ளது. இதுகுறித்து விளை யாட்டுத்துறை அமைச்சு விளையாட்டுக் கழகங்க ளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. கல்வி அமைச்சின் அறிவுறுத்தல் களைப் பின்பற்றாத அதிகாரி களுக்கு எதிராக கடும் நடவ டிக்கை எடுக்கப்படும்.

வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மாணவர்களை எந்தக் காரணம் கொண்டும் விளையாட்டுக்களில் ஈடுப டுத்தக் கூடாது என்று பெற் றோர் கோரப்பட்டுள்ளனர். இந்த வருடம் முதல், சகல மாணவர்களும் விளையாட் டுக்களில் ஈடுபடுவது கட் டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும் மாணவர்களுக்கு திடீர் சுகயீனங்கள், உடல் கோளாறுகள் ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ சாதாரண தரத் தில் விளையாட்டை ஒரு பாட மாக அறிமுகப்படுத்தவும், பல்கலைக்கழக தெரிவின் போது விளையாட்டுச் சாதனை களுக்கு புள்ளி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விளை யாட்டுத்துறை அமைச்சு, கல்வி அமைச்சு,உயர்கல்வி அமைச்சு என்பன இணைந்து முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட் டது.-என்றார். (ச)

# பூநகரி பிரதேச உதைபந்து ஜெகமீட்பர் சம்பியனானது

யாழ்ப்பாணம்,மார்ச் 27

பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங் களுக்கு இடையிலான ஆண்கள் மற்றும் பெண் களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பிய னானது.

இந்தச் சுற்றுத் தொடரில் ஆண்களுக்கான இறுதியாட் டத்தில் வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக் குடா சென்.மேரிஸ் விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி அபாரமாக ஆடியது. அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது.

இதனைத் தொடந்து இடம் பெற்ற பெண்களுக்கு இடையிலான இறுதியாட் டத்தில் வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணை மாநகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களை பெற்றதினால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மா னிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன.

இதனை சரியாகப் பயன்ப டுத்திக்கொண்ட வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி வீராங்கனைகள் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றனர். (ந-23)

# வவுனியா, வவுனியா வடக்கு அணிகள் உதைபந்தில் சாதிப்பு



வவுனியா, மார்ச் 27

வவுனியா பிரதேச செய லகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலருக் குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் வவுனியா பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் வவுனியா வடக்கு பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட் டத்தில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவு அணியை எதிர்த்து வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவு அணி மோதிக் கொண்டது.

இதில் அபார ஆட்டத்தை ஆரம்பத்தில் இருந்தே வெளிப் படுத்தியது வவுனியா பிரதேச செயலக அணி. அந்த அணி யின் வேகத்துக்கு வவுனியா வடக்கு அணியால் ஈடு கொடுக்க முடியவில்லை இதனால் ஆட்ட நேர நிறைவில் வவுனியா பிரதேச செயலக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதி யாட்டத்திலும் வவுனியா பிரதேச செயலக பிரிவு அணியும் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவு அணியும் ஒன்றையொன்று எதிர்த்தாடின.

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் வடக்கு பிரதேச செயலகபிரிவு அணி வீராங் கனைகள் சிறப்பாக ஆடி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர். (ந-23)

# தம்பிராய் அண்ணா கபடியில் வென்றது

யாழ்ப்பாணம் மார்ச் 27

பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக் கான கபடி போட்டியின் இறுதி யாட்டத்தில் பூநகரி தம்பிராய் அண்ணா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பிய னானது

இந்தத் தொடரின் இறுதி யாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி தம்பிராய் அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பூநகரி தம்பிராய் அண்ணா விளையாட்டுக் கழக அணி 35:18 என்றபுள் ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. (ந-23)

# ஹொக்கி தேசியப் போட்டி மே.19 இல் மாத்தளையில்

வலி.வடக்கு, மார்ச் 27

இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் தேசிய மட்டத்தில் நடத்தப் படவுள்ள 19 வயதுப் பிரி வினருக்கான தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி மாத்த ளையில் நடைபெறவுள்ளன- என்று இலங்கைப் பாடசா லைகள் ஹொக்கிச் சங்கம் அறிவித்துள்ளன.

பாடசாலை அணிகளுக்கு இடையேயான தேசிய போட்டியில் கலந்துகொள் வதற்காக இந்த முறை யாழ். மாவட்டத்தில் இருந்து 19 வயதுப் பிரிவு தெரிவு அணியே செல்லவுள்ளது- என்று யாழ் மாவட்ட பாடசா லைகள் ஹொக்கிச் சங்கத்தின் செயலாளர் ப.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவினருக்கான போட்டி ஒன்று வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த மாதம் நடைபெற்றமை குறிப் பிடத்தக்கதாகும். (ந-86)

# யங்ஸ்ரார் பூப்பந்து வடமாகாண முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 27

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்திய 15 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந் தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வருமாறு;

15 வயதுப் பிரிவு

*ஆண்கள் -ஒற்றையர்*

★முதலாமிடம்- தனுஷன், (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

★இரண்டாமிடம் -கபிலன், (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

*பெண்கள் -ஒற்றையர்*

★முதலாமிடம்- ருஸ்சிதா , (வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் )

★இரண்டாமிடம்- ஆஷனா, வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்

*ஆண்கள் - இரட்டையர்*

★முதலாமிடம் - துஷான், யோகன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலம்)

★இரண்டாமிடம்- கபிலன் , நந்துமோகன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலம்)

*பெண்கள்-இரட்டையர்*

★முதலாமிடம் றுஷந்தா, அஷனா (முஸ்லிம் மகாவித் தியாலயம்) .

திறந்த போட்டி

*ஆண்கள் -ஒற்றையர்*

★முதலாமிடம்- சுபேசன் (வவுனியா யங்ஸ்ரார் வி.க)

இரண்டாமிடம் -றொமில்சன் (உடுவில் மான்ஸ் வி.க)

*பெண்கள் -ஒற்றையர்*

★முதலாமிடம் - துவாரகா (யங்ஸ்ரார் வி.க.)

★ இரண்டாமிடம் - ஜனனி( பமிலியன்ஸ் வி.க)

*ஆண்கள் - இரட்டையர்*

★முதலாமிடம்- றொமில்சன் , தர்சனன் (உடுவில் மான்ஸ் வி.க)

★ இரண்டாமிடம் - அன்ரனிஸ், லொசின்ரன் - (மன்னார் விநாயகர் வி.க)

*பெண்கள் -இரட்டையர்*

★முதலாமிடம்- துவாரகா, சாயிரா (வவுனியா யங்ஸ்ரார் வி.க) ★இரண்டாமிடம் -ஜனனி , தர்சினி ( வவுனியா பமிலியன்ஸ்வி.க)

(ந-23-400)

# அக்கராயன் மகாவித்தியாலயம் அபாரம்



கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய பழைய மாண வர்களினால் நடத்தப்பட்ட முக்கோணச் சுற்று கிரிக் கெட் போட்டியில் அக்கராயன் மகாவித்தியாலய கிரிக்கெட் அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் திருவையாறு மகாவித்தி யாலயம், கனகபுரம் மகாவித் தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம் என்பன பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் கனகபுரம் மகாவித்தியாலய அணியும், அக்கராயன் மகாவித்தியாலய அணியும் மோதின.

15 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்த இறுதிப் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய கனகபுரம் மகாவித்தியாலயம். அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 97 ஓட் டங்களைப் பெற்றுக் கொண்டது.

98 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத் தாடியது அக்கராயன் மகாவித்தியாலய அணி.

அந்த அணியின் வீரர்கள் அதிரடியாக ஆடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் 14:2 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக் குகளை இழந்து வெற்றியீட்டி சம்பியனானது அக்கராயன் மகாவித்தியாலய அணி.

(ந-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியது இங்கிலாந்து

நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், பிரையர் சதம் அடித்து கைகொடுக்க தோல்வியின் விளிம்பில் இருந்து மீண்டது இங்கிலாந்து அணி. ஆட்டத்தை சமநிலையில் முடிந்தது.

நியூஸிலாந்து சென்றுள்ள இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளும் சமநிலையில் முடிவுற்றன. மூன்றாவது போட்டி ஆக்லாந்தில் நடைபெற்றது. நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்சில் 443ஓட்டங்களை குவிக்க, பதிலளித்தாடிய இங்கிலாந்து அணி 204 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பின்னர் நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 6 இலக்குகள் இழப்புக்கு 241ஓட்டங்கள் பெற்றிருந்த போது, ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.போட்டியின் நான்காவது நாள் ஆட்டநேர முடிவில், இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 4 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களை எடுத்து தடுமாற்ற நிலையில் இருந்தது. எனவே இறுதி நாளன்று எஞ்சிய ஆறு இலக்குகளையும் வீழ்த்தி நியூஸிலாந்து அணி வெற்றி பெறும் நிலை தோன்றியிருந்தது.

இந்த நிலையில் ஐந்தாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் [29ஓட்டங்கள்] நிலைக்கவில்லை. அடுத்து வந்த பேர்ஸ்டோவும் [6 ஓட்டங்கள்] ஏமாற்றினார். பின் பெல், பிரையர் இணை ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பெல் [75] அரைச்சதம் கடந்து ஆட்டம் இழந்தார்.

மறுமுனையில் போராடிய பிரையர் விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தார். இவருக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார் ஸ்ருவர்ட் புரோட். மிக நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர்தான் எதிர்கொண்ட 62ஆவது பந்தில் தனது முதல் ஓட்டத்தை எடுத்தார். போட்டி முடிவடைவதற்கு 3 பந்துப் பரிமாற்றங்கள் எஞ்சியிருந்த நிலையில் நியூஸிலாந்தின் வில்லியம்சன் ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தினார். அவரத வேகத்தில் அடுத்தடுத்து புரோட் 6 ஓட்டங்களுடனும், அண்டர்சன் ஓட்டம் எதனையும் பெறாமலும் வெளியேற, ஆட்டத்தின் போக்கு மாறியது. எனினும் பின்னர் பனேசருடன் கைகோர்த்த பிரையர் டெஸ்ட் அரங்கில் தனது 7ஆவது சதத்தை பதிவு செய்தார்.

போட்டியின் கடைசி பந்து பரிமாற்றத்தை பவுல்ட் வீசினார். இங்கிலாந்தின் கைவசம் இருந்தது ஒரே ஒரு இலக்கு மாத்திரமே. இந்த நிலையில் கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் முதலிரண்டு பந்துகளையும் தடுத்தாடிய பனேசர், மூன்றாவது பந்தில் ஒரு ஓட்டத்தை எடுத்தார்.எஞ்சிய மூன்று பந்துகளையும் பிரையர் தடுத்தாட, இங்கிலாந்து அணி தோல்வியில் இருந்து தப்பி, போட்டியை சமநிலையில் முடித்தது. ஆட்டநேர முடிவில், இங்கிலாந்து அணி, இரண்டாவது இன்னிங்சில் 9 இலக்கு இழப்புக்கு 315 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 3 டெஸ்ட் போட்டிகளும் சமநிலையில் முடிந்ததையடுத்து இரு அணிகளும் வெற்றிக் கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டன.




பனேசருடன் கைகோர்த்த பிரையர் டெஸ்ட் அரங்கில் தனது 7ஆவது சதத்தை பதிவு செய்தார்.

## தப்பியது இரண்டாம் இடம்

இந்தப் போட்டியை சமநிலையில்முடித்ததால் இங்கிலாந்து அணி டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் இரண்டாமிடத்தை தக்கவைத்துக் கொண்டது. மாறாக தோல்வியடைந்து இருக்கும் பட்சத்தில் இங்கிலாந்து அணி 112 புள்ளிகள் பெற்று, இந்தியாவுக்கு (112 புள்ளி) அடுத்த படியாக மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கும். (ங)

# பதவிக்கு ஆபத்து இல்லை

''தென்னாபிரிக்கா அணியிடம் டெஸ்ட் தொடரையும், ஒருநாள் தொடரையும் இழந்த போதும், பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கின் தலைமைப் பதவி பறிக்கப்படாது'' என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாகா அஷ்ரப் உறுதி மொழி வழங்கியுள்ளார்.

38 வயதான மிஸ்பா உல் ஹக் பாகிஸ்தான் அணியின் டெஸ்ட் மற்றும்ஒருநாள் சர்வதேசப் போட்டி அணிகளின் தலைவராகச் செயற்பட்டு வருகிறார். வயது காரணமாக அவரது அணித்தலைமை தொடர்பாகக் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.இந்த நிலையில் பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களை இழந்திருந்தது.

இதற்குப் பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களைச் சந்தித்த கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப், இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் தலைவராக மிஸ்பா உல் ஹக்கே தெரிவுசெய்யப்படுவார் என்றும், எனவே அணித் தலைமை குறித்தும், அணியில் அவரது இடம் குறித்தும் மிஸ்பா உல் ஹக் கவலையடையாது அணியின் திறமை வெளிப்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.[ங]

# சச்சினுக்கு மட்டும் ஏன்?



டெஸ்ட் போட்டிகளில் கடந்த இரு ஆண்டுகளாக ஒரு சதம் கூட அடிக்காத சச்சினுக்கு தொடர்ந்து வாய்ப்பு அளிக்கப்படுவது ஏன் என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் கடந்த 23 ஆண்டுகளாக கிரிக்கெட்டில் நீடித்து வருகிறார். சதத்தில் சதம் அடித்து வரலாறு படைத்த சச்சின் கடந்த ஆண்டு திடீரென ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி வரும் 39 வயதான சச்சின், சமீபகாலமாக துடுப்பாட்டத்தில் சொதப்பி வருகிறார். கடந்த 2011ஆம் ஆண்டு ஜனவரியில் தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்டில் சதம் அடித்த பின்னர், இதுவரை பங்கேற்ற 21 டெஸ்ட் போட்டிகளில் இவர் ஒரு சதம் கூட அடிக்கவில்லை.

கடைசியாக சச்சின் களமிறங்கிய 10 இன்னிங்ஸ்களில் [76, 5, 2, 81, 13, 7, 37, 21, 32, 1] ஓட்டங்களே எடுத்துள்ளார். இரு முறை மட்டும் அரைச்சதம் கடந்தார். எனினும் இவர் இன்னும் அணியில் நீடிக்கிறார்.

ஆனால் கடைசி 10 இன்னிங்ஸ்களில் [117, 25, 30, 9, 23, 49, 0, 2, 19, 6] ஒரு சதம் உட்பட ஓட்டங்களை குவித்த ஷேவாக்கை, அணியில் இருந்து நீக்கினர். இந்த விடயத் தில் ஷேவாக்குக்கு ஒரு நீதி? , சச்சினுக்கு ஒருநீதியா? என்று சர்ச்சை எழுந்துள்ளது. [ங]

# இலங்கை வீரர்கள் அவுட்

ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் தொடரின் ஆறாவது பருவப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி தொடங்கி மே மாதம் 26ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

இந்தப்போட்டிகள் சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி, பெங்களூர், ஹைதராபாத், மொஹாலி, ஜெய்ப்பூர், புனே, தர்மசாலா, ராய்ப்பூர், ராஞ்சி ஆகிய 12 நகரங்களில் நடக்கவுள்ளன. இந்த நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாட்டில் மாணவர்கள் மிகப் பெரிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் போராட்டம் ஐ.பி.எல். போட்டிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்க மாட்டோம் என்று மாணவர்கள் கூட்டமைப்பு ஏற்கனவே எச்சரித்து இருந்தது.இதனால் சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்றவேண்டும் என்று ஐ.பி.எல். அமைப்பை, ஏ னைய அணிகளின் உரிமையாளர்கள் வற்புறுத்தினார்கள்.

ஆனால் போட்டிகளை சென்னையில் இருந்து வேறு இடத்துக்கு மாற்ற இயலாது என்று ஐ.பி.எல். அமைப்பும், இந்திய கிரிக்கெட் சபையும் திட்டவட்டமாக அறிவித்து விட்டன. இந்தச் சூழலில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசன் மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் நேற்று முன்தினம் மாலை சென்னை பொலிஸ் கமிஷனர் ஜோர்ஜ்ஜை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது சென்னையில் ஐ.பி.எல். போட்டிகளை நடத்துவது குறித்தும், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. மாணவர்கள் போராட்டம் வலுவடைந்து வரும் நிலையில் சென்னையில் இலங்கை வீரர்கள் பங்குபற்றும் போட்டிகளை நடத்துவது குறித்து பொலிஸாருடன் என்.சீனிவாசன் ஆலோசித்ததாகவும் கூறப்படுகிறது.

சட்டம்-ஒழுங்கு சீர்குலையாமல் போட்டிகளை நடத்த பொலிஸார் சிலஆலோசனைகளைவழங்கியதாகவும்,அவற்றை ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவில் கலந்து ஆலோசித்து முடிவு செய்வதாக என்.சீனிவாசன் கூறியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இந்தப் பிரச்சினையில் தீர்வு ஏற்படும் வகையில் தங்கள் அணியில் உள்ள நுவான் குலசேகரா, அகில தனஞ்ஜெயா ஆகிய 2 இலங்கை வீரர்களையும் நீக்க சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முடிவு செய்துள்ளது. ஐ.பி.எல். தொடர் முழுவதும் விளையாடாமல் இருக்கும் வகையில் இந்த 2 பேரையும் அணியில் இருந்து இந்த பருவப்போட்டிகளில் நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐ.பி.எல். போட்டியில் மொத்தம் 13 இலங்கை வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இதில் பஞ்சாப் அணியை தவிர மற்ற 8 அணிகளில் இலங்கை வீரர்கள் உள்ளனர்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 2 இலங்கை வீரர்களை நீக்குவதுபோல மற்ற அணிகளும் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் மட்டுமாவது இலங்கை வீரர்களை நீக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் மற்ற அணிகளின் உரிமையாளர்கள் இதுகுறித்து என்ன முடிவு செய்து இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. மற்ற அணிகளில் இடம் பெற்றுள்ள இலங்கை வீரர்கள் விவரம்:

மும்பை இந்தியன்ஸ்: மலிங்கா, டெல்லி டேர்டெவில்ஸ்: மஹேல ஜெயவர்த்தன, மெண்டிஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்: டில்ஷான், முரளிதரன், கொல்கத்தா நைட் ரைடர்ஸ்: சேனநாயக்க, புனே வாரியர்ஸ்: மேத்யூஸ், அஜந்தா மெண்டிஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ்: குஷால் பெரேரா, சன்ரைசர்ஸ் ஹைதராபாத்: சங்ககாரா, திசர பெரேரா [ங]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் பரமேஸ்வரன் (பரமன்)



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும், வவுனியா (அடப்பங்குளம்), சுவிஸ் ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பரமேஸ்வரன்கடந்த (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு வீரசிங்கம் மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தில்லையம்பலம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், யோகநிதியின் (சுவிஸ்) அன்புக் கணவரும், பிரசாந்த், பிரவீன், தீபன், திவ்யா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (பிரான்ஸ்), யோகநாதன் (சின்னமணி- சுவிஸ்), தேவதாஸ் (தேவா- பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதராஜன் (சந்திரன்- சுவிஸ்) மற்றும் மனோகரன் (சுவிஸ்), கருணா (சுவிஸ்), சுசிலா (தங்கம்- சுவிஸ்), ஐங்கரமூர்த்தி (மூர்த்தி- பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், கமலாதேவி (ராணி- பிரான்ஸ்), இந்திராணி (சுவிஸ்), றோசாறி (சுவிஸ்), தர்மநிதி (கிளி- சுவிஸ்), தர்மரஞ்சி (சுவிஸ்), சிவராஜா (அப்பு- சுவிஸ்), சுஜாத்தா (பிரான்ஸ்), யோகேஸ்வரி, யோகராஜா (இலங்கை), யோகேந்திரன் (கனடா), யோகநாதன் (ஜேர்மனி), யோகலிங்கம் (லண்டன்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), கிருபானந்தன் (சுவிஸ்), கெங்காலட்சுமி (இலங்கை), மலர் (கனடா), நாகேஸ்வரி (லண்டன்), புவனேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2013) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33/1, [illegible] வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (34902)(8.8.14) தகவல்: குடும்பத்தினர்.

# எரிகாயங்களுக்கு உள்ளானவர் சாவு

குப்பி விளக்கு தவறுதலாக விழுந்ததில் எரிகாயங்களுக்கு இலக்கான ஒருவர் 3 வருடங்களின் பின் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.சம்பவத்தில், யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எஸ். கஜந்தன் (வயது -35) என்பவரே உயிரிழந்தார். (ஐ-ரி)

# கமரூன் பிரஜை கைது

மின்னஞ்சல் மூலம் பண மோசடி செய்ய முயற்சித்ததாகக் கூறப்படும் கும்பல் ஒன்றைச் சேர்ந்த கமரூன் நாட்டுப் பிரஜை ஒருவரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் அக்குறணையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் கொற்றாவத்தை ஐயப்பன் கோயிலுக்கு அருகில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0773530172 (34095)

### கிளிநொச்சி நகரில்...

பிரித்தானியாவின் Little Aid நிறுவனத்தின்

இலவச கணனிப் பயிற்சி கல்லூரி

முற்றிலும் இலவச கணனி வகுப்புக்கள்
இலவச புத்தகங்கள் மற்றும் கையேடுகள்
வயது வேறுபாடின்றி அனைவருக்குமுரியது
(மாணவர்கள் மற்றும் இல்லத்தரசிகள், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென தனித்தனி பிரிவுகள்)

பிரித்தானியா நிறுவனத்தின் சான்றிதழ்கள்

இரண்டாம் பிரிவுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் கூடிய உங்கள் சுயவிபரக்கோவையினை எதிர்வரும் 05.04.2013 க்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

"லிட்டில் எய்ட்", 323 பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

வகுப்புக்கள் கிளிநொச்சி, திருநகரில் நடைபெறும்

மேலதிக விபரங்களுக்கு : 0755062806

### வான் விற்பனைக்கு

56 - XXXX டொல்பின் வான் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு:0776348920

### SPOKEN ENGLISH & GRAMMAR

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் கற்க விரும்புபவர்களுக்கு உகந்த பாடநெறி
READING/ LISTENING
WRITING/SPEAKING
நவீன தொழில்நுட்ப உதவியுடன் இலகு முறையில் எளிமையான கற்பித்தல் முறை.

ஆரம்பம்: 30.03.2013 T.M.4.00.P.M — Sat/Sun 4-6 P.M

Note:- மாணவர்களின் நேர வசதிக்கேற்ப வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.

Cell- 0777363797
0779789520
V Talk English — K.K.S Road,கொக்குவில். (தபாலகம் அருகில்.) (34903)(6.7.8)

# மரண அறிவித்தல்

## கிறீஸ்துதாஸ் தேவரத்தினம்



நவாலி தெற்கு, நவாலியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறீஸ்துதாஸ் தேவரத்தினம் நேற்று 26.03.2013 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறீஸ்துதாஸ் - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் இரத்தினதேவியின் அன்புக் கணவரும் தேவமனோகரி (லண்டன்), தேவசுதந்தரி (இத்தாலி), தேவனேஸ்வரி, தேவரமணி, தேவசுதர்சினி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி), தேவகலா (இத்தாலி), தேவதர்ஷன் (ஆசிரியர், வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தன் (லண்டன்), சபா (இத்தாலி), லூயிஸ், சுசந்தன், அமுதன் ஆகியோரின் அன்பு மாமனும் பிறண்டன் (லண்டன்), ஷாரோன் (லண்டன்), ஆரோன் (இத்தாலி), டிறோன், ஷேரா, ஷாமிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயசிங்கம், காலஞ்சென்றவர்களான ஜீவவதனா, யோகராஜா மற்றும் தேவவதனா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, சங்கரத்தை, [illegible] . 021 3734188 (34907) (23- 14-16) தகவல்: குடும்பத்தினர்.

# SPOKEN ENGLISH

### யாருக்காக ?

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-30.03.2013
1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாத முடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL .0776214567

# மணல் மண் வேண்டுமா?

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம் 072 63 78 546 (23-34166)



உங்கள் தராதரத்தை உயர்த்திக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம் !

ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA

ASAP Accelerated Skills Acquisition Program — Empowering Youth Through Career Skills

துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ICDL International Computer Driving Licence — Just 6,500/= ONLY
e - Citizen — Just 3,500/= ONLY

மேலதிக தகவல்களுக்கு :
GATEWAY
LANGUAGE & ICT CENTRE KILINOCHCHI
55,Pointpedro Road, Nelliyady.
Phone:- 0212262395 / 0215677606

# மலிவான கட்டணத்துடன் சைப்பிரஸ் படிக்கச்சென்று மாதாந்தம் ஒரு லட்சம் சம்பாதிக்கலாம்

★ ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படித்தால் சான்றிதழ் இலங்கையிலும் வலிதானது.
★ இரண்டு வருட பட்டப்படிப்பின் பின் கனடா செல்ல வாய்ப்பு.
★ IELTS தேவையில்லை. O/L போதுமானது.
★ யாழ்ப்பாணத் தமிழ்ப்பெண்களும் பாதுகாப்பாக கல்வி கற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(34894)(6.6.7)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
7 நாள்களும் காலை 8 மணி - இரவு 8 மணி வரை



### கடை வாடகைக்கு

யாழ். நாவலர் வீதியில் (கஸ்தூரியார் வீதிக்கு அண்மையில்) கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு- 0778446028 (34897)

### பார்மசிக்கு வேலை ஆள் தேவை

நெல்லியடியில் இயங்கிக் கொண்டிருக்கும் பார்மசிக்கு மருந்தாளர் அல்லது முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
★கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:0774656428 (34876)(14.16.8)

### சாரதி தேவை

40 வயதுக்கு மேற்பட்ட கார்ச்சாரதி தேவை.
தொடர்பு: 0215689090

### தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது

1 தொடக்கம் 5 வரை (பிரதி ரூ.20.00)

வெற்றிச்சிகரம் மாதிரி வினாத்தாள்கள்,விடையுடன்

ஆக்கம்: திருகோணமலை S.கணேசலிங்கம்
யாழ்நகரில் அன்னை புத்தகசாலை - 021 2229881
வெளியீடு : யுனிலங்காஸ் – 077 6258778

முன்னணி ஆசிரியர்களின் வெளியீடுகள் :
1. புலமைச்சங்கமம்
2. கணித விவேக வழிகாட்டி
3. சுற்றாடல் சங்கமம்
4. கட்டுரைச் சங்கமம்
5. அடிப்படைத் தமிழ் வழிகாட்டி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அற்பன் துவேஷிக்கிறான்
மேலோன் அனுதாபப்படுகிறான்.
-சிங்கள-

# புதன் பொய்கை

A

உதயன் | மார்ச் 27 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

(கடந்தவாரத் தொடர்ச்சி...)



● தேவகி

**தெரியாத வீடுகளுக்குக் குழந்தைகள் செல்ல அனுமதிக்க வேண்டாம். தெரிந்த நபர்களின் வீடுகளுக்குக் கூட நீங்கள் கூடவே சென்று பழக்கப் படுத்துவதே நல்லது. நபர்கள் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்காக வீடு பாதுகாப்பாக இருக்கும் என்பதல்ல.**

# குழந்தைகளை பாதுகாப்போம்

வீதியில் எப்படி நடப்பது, எங்கெங்கே கவனமாக இருப்பது போன்ற விடயங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். எந்த இடம் பாதுகாப்பானது, யாரிடம் உதவி கேட்கலாம் போன்ற விஷயங்களையும் அவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

ஒருவேளை பொது வாகனங்களில் பயணிக்கும் குழந்தையெனில் தரிப்பிடத்துக்கு நீங்களும் கூடச் சென்று, குழந்தைக்கு எந்த பஸ், எங்கே ஏறுவது, எங்கே இறங்குவது, எப்படி ஏறி இறங்குவது போன்ற விஷயங்களைப் பழக்குங்கள். பஸ் பயணத்தில் அச்சுறுத்தலெனில் பஸ்ஸில் பயணிக்கும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பதைக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுங்கள்.

பயணத்தின் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும், பாதுகாப்பு விஷயங்கள் என்னென்ன தெரிந்திருக்க வேண்டும் போன்றவற்றையெல்லாம் குழந்தைகள் அறிந்து வைத்திருப்பது அவசியமானது.

தெரியாத நபர் பயணத்தில் உதவி செய்வதாக வந்தால், மறுக்கப் பழக்குங்கள். ஒவ்வொரு முறையும் உங்களிடம் அனுமதி வாங்கச் சொல்லுங்கள்.


குழந்தைகள் பயணிக்கையில் எப்போதும் ஒன்றிரண்டு பேராய் நடப்பது, பஸ்ஸில் பயணிப்பது பாதுகாப்பானது. தனியே எங்கே செல்வதாக இருந்தாலும் உங்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது பால பாடம்.

**வாகனங்கள் எச்சரிக்கை.**

வாகனங்கள் குழந்தைகளின் மிகப் பெரிய எதிரிகள். அதுவும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இரண்டு விதமான ஆபத்துகள் வாகன விடயத்தில் உள்ளன.

**விபத்து**

நிறுத்தப் பட்டிருக்கும் வாகனங்களின் பின்னாலோ, பக்கவாட்டிலோ குழந்தைகள் போகாமல் இருக்க வேண்டும். குறிப்பாக வாகன டயரின் அருகே நின்று பேசுவது போன்ற விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். வாகனங்கள் வரும் வீதியில் குழந்தைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுங்கள்.



**கடத்தல்.**

குழந்தைகளைக் கடத்துபவர்கள் வாகனங்களையே பயன்படுத்துகிறார்கள். குழந்தைகளை வசீகரிக்கும் விதமாக சொக்லேட், பொம்மை போன்ற ஏதாவது பொருளைக் காட்டி அவர்கள் காரின் அருகே வந்ததும் காரின் உள்ளே தள்ளிக் கடத்திக் கொண்டு பறந்து விடுவது அவர்களுடைய வழமையான திட்டம். தெரியாத நபர் இருக்கும் காரின் அருகே எக்காரணம் கொண்டும் போகக் கூடாது எனக் குழந்தைகளைப் பழக்குங்கள்.

**போன் நம்பர் தெரியுமா ?**

உங்கள் போன் நம்பர் உங்கள் குழந்தைக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் முதலில் அதைச் சொல்லிக் கொடுங்கள். குட்டிப் பிள்ளைகள் கூட ஒரு போன் நம்பரை எளிதில் கற்றுக் கொள்வார்கள். பள்ளி செல்லத் தொடங்கிவிட்டால், வீட்டு விலாசத்தையும் கூடவே சொல்லிக் கொடுங்கள்.

பலரும் செய்யும் தப்புகளில் ஒன்று தங்கள் முழுப் பெயரைக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்காதது தான். உன்னுடைய அப்பா பெயர் என்ன எனக் கேட்டால் முழுப்பெயரையும் சொல்வது அதிக பயன் தரும். அப்பா, அம்மாவின் முழுப் பெயரைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் சில முக்கிய அடையாளங்களையும் குழந்தைக்குச் சொல்லிக் கொடுங்கள். அவ்வப்போது வீட்டில் விளையாட்டாக குழந்தையிடம் திருடன் பொலீஸ் விளையாட்டை விளையாடி போன் நம்பர், விலாசம் எல்லாம் கேட்டு பழக்கப் படுத்துங்கள். விளையாட்டாய் பழகும் விஷயங்கள் குழந்தையின் மனதில் எளிதில் பதியும் என்பது குழந்தை உளவியல்.

குழந்தைகளின் கையில் தொலைபேசி இலக்கத்தை எளிதில் அழியாத பேனாவைக் கொண்டு எழுதி வைக்கலாம். வெளியிடங்களில் ஒருவேளை குழந்தை தவறிப் போனால் தொடர்பு கொள்ள இது வசதியாக இருக்கும் என்பது சிலருடைய கருத்து.

குறிப்பாக, பேசத் தெரியாத குழந்தைகள் விடயத்தில் இது பயன் தரும். ஒரு வேளை குழந்தை பதட்டத்தில் எண்ணை மறந்து விட்டால் கூட, இது உதவும். வெளியூரில் போய் ஏதாவது ஹோட்டலில் தங்குகிறீர்களெனில், அந்தக் ஹோட்டலின் விசிட்டிங் கார்டை எடுத்து குழந்தையின் சட்டைப் பைகளில் போட்டு வைப்பது நல்லது. தவறிப் போனால் ஹோட்டல் பெயரும், தொடர்பு எண்களும் அவர்களிடம் இருக்கும்.

கைகளில் அழகிய அகலமான ரப்பர் பான்ட் ஒன்றைப் போட்டு அதில் பெயரும் தொலைபேசி எண்ணும் எழுதி வைப்பது கூட நல்ல யோசனையே. கடைகள், பூங்காக்கள் போன்ற இடங்களுக்குப் போனால், எக்காரணம் கொண்டும் அந்த இடங்களை விட்டு வெளியே வரவேண்டாம் எனக் குழந்தைகளிடம் கூறுங்கள்.

வெளியே வந்தால் ஆபத்து அதிகமேயன்றி குறையாது. குழந்தைகளுடன் நிற்கும். அம்மாக்களிடம் சென்று உதவி கேட்பது நல்லது. என்பதையும் சொல்லிக் கொடுங்கள்.

**உடல் நலம் கவனம்**

பொது இடங்களுக்குப் போகும் போது குழந்தைகளின் உடல் நலத்தையும் கவனத்தில் கொள்ளுங்கள். தண்ணீர் விளையாட்டெனில் துணி மணிகள் கைவசம் இருக்கட்டும். வெயில் எனில் குடை, தொப்பி போன்றவை நிச்சயம் தேவை.

தண்ணீர் எப்போதும் கையில் இருக்கட்டும். அடிக்கடி குடிதண்ணீர் குடிப்பது சுற்றுலா செல்லும் இடங்களில் ரொம்ப அவசியம். உடலில் தண்ணீர் பற்றாக்குறை நிலை வந்தால் சோர்வும், நோய்களும் வந்து விடும். குழந்தைகள் பெரும்பாலும் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்பதில்லை. எனவே பெரியவர்கள் தான் அதைக் கவனித்து அடிக்கடி தண்ணீர் கொடுக்க வேண்டும்.

நல்ல வசதியான செருப்பை அணிவது அவசியம். காலை உறுத்தாத செருப்புகள் சிறப்பானவை. அதே போல நல்ல வசதியான ஆடைகளை அணிவியுங்கள். நாகரீகமாக இருப்பதைவிட வசதியாக இருப்பதே அதிக புத்துணர்ச்சிக்கு உத்தரவாதம் என்பது மனதில் இருக்கட்டும்.

**வீட்டில் குழந்தை தனியாய் இருக்கிறதா ?**

வீட்டில் குழந்தையைத் தனியே விட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலையெனில் பாதுகாப்பு விஷயங்களில் அதிக கவனம் எடுத்து சொல்லிக் கொடுங்கள்.

முக்கியமாக வீட்டுக் கதவுகளையெல்லாம் பத்திரமாகப் பூட்டி வைக்கச் சொல்லுங்கள். யாரேனும் வந்து கதவைத் தட்டினால் என்ன செய்ய வேண்டும்? தெரியாத நபர் எனில் என்ன செய்ய வேண்டும் என்பன போன்றவற்றையெல்லாம் தெளிவாகச் சொல்லுங்கள்.

வீட்டில் போன் அடித்தால் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டியது முக்கியம். குறிப்பாக, வீட்டில் குழந்தை தனியே இருப்பதைக் காட்டிக் கொள்ளாமல் இருப்பது நல்லது ! . நீங்கள் யார்? அப்பாவிடம் என்ன சொல்லவேணும்.. என்று கேட்க குழந்தைகளைப் பழக்குங்கள்.

வீட்டுக்குப் போன் செய்து அடிக்கடி விசாரித்துக் கொள்ள வேண்டியது அவசியம். இன்னொரு முக்கியமான விடயம், வீட்டில் குழந்தைகள் தனியே இருந்தால் அவர்கள் தண்ணீர், மின்சாரம், நெருப்பு போன்றவற்றால் ஆபத்துகள் நேரலாம். எனவே அது குறித்த பாதுகாப்பு அம்சங்களையும் சொல்லிக் கொடுங்கள்.


**பக்கத்து வீடுகள்**

உங்கள் அயல் வீடுகளுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். எந்தெந்த வீடுகள் பாதுகாப்பானவை. எங்கெல்லாம் உங்கள் குழந்தை நம்பிக்கையுடன் செல்லலாம் என்பதைக் குழந்தைகளுக்கு விளக்குங்கள்.

தெரியாத வீடுகளுக்குக் குழந்தைகள் செல்ல அனுமதிக்க வேண்டாம். தெரிந்த நபர்களின் வீடுகளுக்குக் கூட நீங்கள் கூடவே சென்று பழக்கப் படுத்துவதே நல்லது. நபர்கள் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்காக வீடு பாதுகாப்பாய் இருக்க வேண்டுமென்பதில்லை. (வளரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் காட்சியளிக்கும் தேவாலயங்கள்





## உலகின் மிக நீளமான ஆடை



பிரிட்டனைச் சேர்ந்த பிரபல ஆடை வடிவமைப்பாளர் ஹென்றி ஹோலண்ட் உலகிலேயே மிக நீளமான ஆடையைத் தயாரித்துள்ளார். இந்த ஆடை 1500 சதுர அடி அகலமும், 150 அடி நீளமும் கொண்டது. பட்டினால் தயாரிக்கப்பட்ட அந்தச் சட்டையில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறப் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆடை அறிமுக நிகழ்ச்சி பிரிட்டனில் உள்ள டிரின்டி லீட்ஸ் ஷாப்பிங் சென்டரில் நடந்தது. அப்போது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் மத்தியில் ஒரு ராட்சத பரிசுப் பெட்டியில் இருந்து பிரபல மாடல் அழகி கோலெட் மார்ரோ தோன்றினார். அவர் ஹென்றி ஹோலண்ட் வடிவமைத்திருந்த அந்த ஆடையை அணிந்து இருந்தார். அந்த ஆடை விழாவில் பங்கேற்ற அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இது குறித்து ஆடை வடிமைப்பாளர் ஹென்றி ஹோலண்டே கூறும்போது, 'பூச்சிகள் மற்றும் அவற்றின் சிறகுகளே இந்த ஆடை தயாரிக்க என்னைத் தூண்டின' என்று தெரிவித்தார்.

## உடலை எப்போதும் உற்சாகமாக வைத்திருக்க சில வழிகள்..

வாரம் இரு முறை நன்றாக உடம்பு மற்றும் தலையில் எண்ணெயை தேய்த்து மசாஜ் செய்து நன்றாக ஊறிய பின்னர் சீயக்காய் தேய்த்துக் குளித்தால் உடலில் வலி, சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும்.

குளியல் அறையில் கொதிக்க கொதிக்க வெந்நீரை ஊற்றி கதவை இரண்டு நிமிடம் மூடிவிடுங்கள். பின்னர் குளிக்கச் செல்லுங்கள். நன்றாக வியர்த்து, உடலில் உள்ள கழிவுகள் தோல்வழியாக வெளியேறும்.




தினமும் சூரிய வெளிச்சம் படும்படியாக 15 நிமிடங்கள் நில்லுங்கள். இது மனதை ஒரு நிலைப் படுத்தும். சருமத்தில் விற்றமின் 'டி' சத்தும் ஊடுருவும்.

கைக்குட்டையில் ரோஜா எண்ணெய் 3 சொட்டுகள் விட்டு அடிக்கடி முகர்ந்து பாருங்கள். மனமும் உடலும் புத்துணர்ச்சி பெறும்.

## ஹோட்டல்களில் உணவு பரிமாறும் ரோபோக்கள்

ரோபோக்கள் (எந்திரமனிதன்) அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது சீனாவின் ஹோட்டல்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மனிதர்களைப் போன்று ரோபோக்களைப் பணிபுரிய வைப்பது அதிகரித்து வருகின்றது.

பெரும்பாலான ஹோட்டல்களில் அவை சமையல் காரர்களாகவும், சாப்பாடு பரிமாறும் பணியாளர்களாகவும் பயன்படுத்துப்பட்டு வருகின்றன.



## நட்பு தந்த பரிசு

நாம் இருவர் தலைவிதிப்படி
நம்பர் மாறிவந்த அழைப்பு
நட்பெனும் உறவை உருவாக்கி
நம்பிக்கையுடன் பாசத்தை ஏற்படுத்தி
நல் வார்த்தைகள் பல பேசி
நன்மைகள் பல நாம் புரிந்து
நட்பாய் எண்பது வாரங்கள் பழகி
நட்பிலே அமுதவிழா
கொண்டாடி-முதல் முறையாக
நன் நாளாம் புதனன்று
சந்தித்து-மீண்டும் நண்பர்கள் நாம்
வெள்ளியன்று சந்தித்து
நல்லுறவு கொண்டாடி
அன்பை வளர்த்த நமது உள்ளங்கள்
சந்தேகத்தினால்-ஒரு நாள்
நற்புரிந்துணர்வு அற்றுப்போக-இன்று
நரகம் என்னும் உலகத்தில் படும்
துன்பத்தைப் போல
நகர வேதனையை அனுபவிக்கும்
உன்னத நண்பர்கள் நாமானோம்
நடுவீதியில் நாதியற்று
நின்று துன்பப்படும்
நம் இருவரில் தனியாகத்
தவிக்கும்-எனக்கு
நற்பாவி நாடகக்காரி என்னும்
பெயர்கள் நட்பு தந்த பரிசு.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை வழிப்படுத்துவார்களா?

மாணவர்கள் சக்தி ஒரு நாட்டின் தலைவிதியையே மாற்றும் என்பார்கள். அந்தளவுக்கு மாணவர்களின் செயற்பாடுகள் ஒரு நாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமை உடையவை. ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று சென்னையில் மாணவர்கள் போராட்டத்தில் குதித்திருப்பது அந்த நாட்டு அரசியலில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. ஈழத்து மாணவர்களும் பல போராட்டங்களில் ஈடுபட்டவர்கள்தான். ஆனால் சென்னையில் ஒட்டுமொத்த மாணவர்களும் போராட்டத்தில் குதித்தது போல் இங்கு ஒட்டு மொத்த மாணவர்களாலும் போராட்டத்தில் குதிக்க முடியவில்லை.

கடத்தி காணாமற் செய்யப்பட்டு விடுவோம், கொலை செய்யப்படுவோம் என்ற பயம்தான் இதற்கு அடிப்படைக் காரணம். அந்தளவுக்கு ஈழத்தில் மாணவர்கள் மட்டுமல்ல பொது மக்களும் இலங்கை அரசுக்கு எதிரான எந்தப் போராட்டத்தையும் மேற்கொள்ள முடியாத அளவுக்கு அடக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஈழத்தில் இன்றைய மாணவர்கள் சிலரின் செயற்பாடுகள் கவலையளிக்கும் விதத்தில் அமைகின்றன. மாணவர்களுக்கு புத்திமதி சொல்ல எவரும் இல்லாத நிலையில், சூழல் சில மாணவர்களை தவறான பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. மாணவர்கள் பிழையான வழிக்குச் செல்வதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களுமே காரணமாக அமைகின்றார்கள். மாணவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்களாயின் அவர்கள் வழி தவறிச் செல்ல வழி ஏற்படாது.

அண்மையில் இரு பிரபல பாடசாலைகளுக்கு இடையில் கிரிக்கெட் போட்டி ஒன்று இடம்பெற்றது. அந்தப் போட்டி இடம்பெறுவதற்கு முதல் நாள் அந்த இரு பாடசாலைகளில் நகரை அண்டிய ஒரு பாடசாலை மாணவர்கள் சிலர் பாடசாலைக் கொடியுடன் வீதியுலா வந்தார்கள்.

வீதியில் பலர் வருவார்கள், போவார்கள். அவர்களுக்கு என்ன அவசரமோ என்று தெரியாது. வீதியில் செல்லும் ஒவ்வொருவரும் வெவ்வேறு தேவைக்காக ஓடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரின் தேவைகளும் பல்தரப்பட்டவை. சில அவசரமும் அவசியமும் கொண்டவை. ஆனால் எல்லோரும் வாழ்வில் ஒருதேவைக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்குமான இந்த வீதியில் எல்லோருக்கும் வழிவிட்டுத்தான் போகவேண்டும் என்பது கூட தெரியாமல் மாணவர்கள் அந்த வீதியை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டு பயணிக்கிறார்கள். இதற்குள் தமது பாடசாலையின் பெயரை உச்சரித்துக் கோஷமெழுப்பிக் கொண்டுபோகிறார்கள். தாம் அசிங்கப்படுவது போதாமல் பாடசாலையின் பெயரையும் கேவலப்படுத்துகிறார்கள். அந்த வீதியில் சென்று வருபவர்கள் "யார் பெத்த பிள்ளையோ இப்படி வளர்த்து விட்டிருக்கினம். நாட்டுக்கும் உதவாதுகள், வீட்டுக்கும் உதவாதுகள்" என்று சொல்லிக் கொண்டு போனார்கள்.

பாடசாலைக் கொடியுடன் வெள்ளை உடுப்புடன் மாணவர்கள் வீதியுலா வருவதைப் பார்க்கின்றபோது, அழகாகத்தான் இருந்தது. ஆனால் கொடி என்றதும் எமது மண்ணில் இடம்பெற்ற மறக்க முடியாத சம்பவம் ஒன்றுதான் கண்ணுக்குள் காட்சிகளாக விரிகின்றன.

அதாவது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர்கள் இலங்கை அரச படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டதான செய்திதான் நினைவுக்கு வருகிறது. இந்த வெள்ளைக் கொடி விவகாரம் ஜெனிவா வரை சென்று இலங்கை அரசை ஆட்டம் காண வைத்துள்ளது என்றால் பாருங்களேன். இந்த விடயம் பாடசாலைக் கொடியை பிடித்துக் கொண்டு வரும் மாணவர்களுக்குத் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அவர்கள் அந்தப் பாடசாலைக் கொடியை பிடித்துக் கொண்டு கடை, கடையாக ஏறியிறங்கி அடாத்தாக பணம் சேர்த்ததிலிருந்து தெரிகிறது.

அவர்கள் வருவதைப் பார்த்த கடைக்காரர்கள் உஷாராகிறார்கள். அம்மா தாயே பசிக்குது என்று யாரும் வந்தால் பசிக்கு உணவு கொடுக்கலாம். ஆனால் இந்த மாணவர்கள் கடைகளுக்குள் ஏறியிறங்கி எதற்கென்றில்லாமல் பணம் அல்லவா வசூலிக்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்து கிரிக்கெட் போட்டியை சிறப்பாக நடத்தப் போகிறார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை. பிறகு எதற்கு பணத்தை வசூலிக்கிறார்கள் என்று அறிவதற்காக யாழ். நகரை அண்டிய கடை ஒன்றின் முன் நின்றேன்.

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

அந்தக் கடையில் ஒரு வயது வந்த பெண் மட்டும் பொறுப்பாக நின்றாள். மாணவர்கள் வரிசையாகக் கடைக்குள் நுழைகிறார்கள். கடையில் நின்றவள் அவர்களை என்ன வேண்டும் என்று கேட்கிறாள். அவர்கள் அந்தக் கடையில் ஒரு பெண் நிற்கிறாள் என்று கூடப் பார்க்காமல், அந்தப் பெண் கேட்கும் கேள்விக்கு பதில் கூடச் சொல்லாமல் கடையில் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த சுவிங்கம் பைக்கற்றுக்களை எடுத்துக் கொண்டு வெளியேறினார்கள். துணைக்கு வர எவரும் இல்லாமல் அந்த மாணவர்களையும் தட்டிக் கேட்க முடியாமல் ஆத்திரத்தை உள்ளடக்கிக் கொண்டு மௌனமானாள் அப்பெண்.

சென்னையில் மாணவர்கள் ஈழத்தமிழர்களுக்காக போராட்டம் நடத்துகிறார்கள். இங்கே மாணவர்கள் சிலரால் மேற்கொள்ளப்படும் இப்படிப்பட்ட செயற்பாடுகள் வேதனையைத் தருகிறது. 'அவங்கள் நின்றாங்கள் என்றால் எமது சமூகத்தை ஒழுங்காக வைத்திருப்பாங்கள். அவங்கள் இல்லாதது இந்தச் சமூகம் சீரழியப் போகிறது' என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டாளோ அப்பெண்.

சிறிது நேரம் கழித்து அந்தக் கடைக்கு வந்த பக்கத்துக் கடைக்காரர்கள் "பொடியள் ஏதாவது எடுத்துக் கொண்டு போட்டாங்களோ?" என்று கேட்டனர். அதற்கு அவளோ "வேறு என்ன சுவிங்கத்தை பெட்டியோடு எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள்" என்று சொன்னாள். அதற்கு பக்கத்துக் கடைக்காரர் "சும்மா பார்த்துக் கொண்டுதான் இருந்தனீர்களா?" என்று கேட்டனர். "என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் யோசித்தவள் சைக்கிளை எடுத்துக் கொண்டு அவசரமாகச் சென்றாள்.

அங்கு நின்றவர்கள் ஒன்றுமே புரியாமல் கடையைப் பூட்டாமல் எங்கு போகிறாள் என்று பார்த்துக் கொண்டு நின்றனர். சிறிது நேரம் கழித்து அவள் திரும்பி வந்தாள். அவளோ அந்த மாணவர்கள் படிக்கும் பாடசாலைக்கு சென்று அதிபரைச் சந்தித்து நாலு கேள்வி கேட்டுவிட்டு வந்ததாகக் கூறினாள்.

காத்திருந்த பக்கத்துக் கடைக்காரர் 'அதிபர் என்ன சொன்னார்?' என்று கேட்டார். அதற்கு அவளோ "தங்கட பாடசாலை மாணவர்களாக இருக்காது. வேறு பாடசாலை மாணவர்களாக இருக்கலாம் என்கிறார் அவர். பிறகு என்னத்தைக் கேட்கிறது?" என்றாள். பக்கத்துக் கடைக்காரரோ "பாடசாலைக் கொடியுடன் வந்தவர்கள் என்று கேட்டிருக்கலாம் தானே?" என்றார். அதற்கு அவளோ "நான் சொல்வதையே காதில் வாங்க மறுக்கும் அதிபர் பிறகு எப்படி நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லப் போகிறார்?" என்றாள். கடைக்காரரோ "இந்த மாணவர்களின் விளையாட்டு ஒவ்வொரு வருடமும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது." - என்றார்.

இப்போது எல்லாம் சுதந்திரம் என்று சொல்லி மாணவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் செயற்பாடுகளைத்தான் ஊக்குவிக்கிறார்கள் போலும். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் தமிழர்களுடைய கலை, கலாசாரம், பண்பாடு அனைத்தும் பாதுகாக்கப்பட்டது. போர் முடிவில்லாமல் முடிந்ததால் இன்று எமது மண்ணில் பண்பற்ற செயற்பாடுகள் அளவுக்கு அதிகமாக அரங்கேறுகின்றன. தம்மைப் பெரியவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இதனைக் கட்டுப்படுத்த முயல்வார்களா?

# இந்தக் கொண்டாட்டம் தேவைதானா?

அந்த ஒரு பார்வை, ஊர் சுத்திக் கொண்டிருந்த அத்தனை வேலை வெட்டியில்லாப் பயல்களையும் உணர்வாளர்களாக மாத்தியிருக்கின்றது. ஈழத்தில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழீழக் கோரிக்கையுடன் தொடர்ச்சியாகப் போராடி வருபவர்கள் தமிழ்நாட்டு மாணவர்களே.

ஆனால் எந்தத் தமிழீழத்தை இந்திய மாணவர் சமுதாயம் கோருகின்றதோ, இங்கு இருக்கின்ற மாணவ சமுதாயமும் அவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற கல்லூரிகளும், தமிழக மாணவர்களின் உணர்வுகளை பொசுக்கும் விதமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நகருக்கு வெளியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் அண்மையில் நடத்தப்பட்டது. வடக்கின் நாட்டாமையும் அந்தப் பாடசாலைக்கு பெரியளவில் பணத்தை அள்ளிக் கொடுத்துள்ளார். அந்தப் பாடசாலையும் தமது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை பெரு விமர்சையாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஏன்... எதற்கு... எப்படி?

கேளிக்கை, களியாட்டங்களை நடத்த வேண்டாம் என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் தமிழகத்தில் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து தங்களின் உயிரை உருக்கிக் கொண்டிருக்கையில் உங்களுக்கு இந்தக் கொண்டாட்டங்கள் தேவைதானா?

உங்களுடைய இந்தக் கூத்துக்களை, உண்ணாவிரதத்தில் இருக்கின்ற ஓர் ஜீவன் பார்த்தாலும் அவனது வேதனை எப்படியிருக்கும் என்பதை நினைத்துப் பார்த்துச் செயற்படுங்கள்.

நக்கல் நரசிம்மன்

# நேரம்

அதிகாலை வேளைக்கு எழுந்திருக்க வேண்டுமென்று மணிக்கூட்டின் மணி ஓசையை காலை 5 மணிக்கு சரி செய்து வைத்து விட்டுத் தூங்கிவிட்டேன். மணிக்கூட்டில் என்ன பிழையோ தெரியவில்லை. காலை 5 மணிக்கு மணி அடிக்கவில்லை. இரண்டு மணித்தியாலங்கள் பிந்தி காலை 7 மணிக்கு மணி அடித்தது.

இதனால் காலை 7 மணிக்குத்தான் என்னால் எழுந்திருக்க முடிந்தது. அவசர அவசரமாக காலைக் கடனை முடித்து விட்டு எனக்குத் தகுந்த வேலை கிடைக்குமா என்று அன்றைய நாள் வெளிவந்த செய்தித்தாள்கள் எல்லாவற்றையும் புரட்டிப் பார்த்தேன்.

வேலைக்கு ஆள் தேவை என்று ஒரு பத்திரிகையில் விளம்பரம் வந்திருந்தது. அந்த வேலை எனக்கு தகுந்த வேலையாக இருப்பதால் அந்த வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன். அந்த நிறுவனம் என்னை நேர்முகத் தேர்வுக்கு வரும்படி கடிதம் மூலம் அழைத்தது. நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ள அன்றைய நாளும் காலை வேளைக்கு என்னால் எழுந்திருக்க முடியவில்லை.

ஆனாலும் அவசர அவசரமாக வெளிக்கிட்டுக்கொண்டு பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றேன். சனத்தை அடைத்துக்கொண்டு பஸ் வருகின்றது. அடுத்த பஸ்ஸில் ஏறுவோம் என்று காத்திருந்து கூட்டம் குறைவாக வந்த பஸ்ஸில் ஏறி நேர்முகத்தேர்வு நடைபெறும் நிறுவனத்தின் வாசலில் இறங்கினேன். நிறுவனத்தினுள் சென்றேன். நேர்முகத்தேர்வுக்கு நிறையப் பேர் வந்திருந்தனர். அந்தக் கூட்டத்தில் கடைசி ஆளாக நின்றேன். அங்கே ஒவ்வொருவராக அழைத்து நேர்முகத்தேர்வு செய்து விட்டு கடிதம் போடுவம் என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். எனக்கு அந்த நிறுவனத்தில் வேலை கிடைத்ததான கடிதம் வந்தது.

எனக்குத் தெரிந்த பலருக்கு கடிதம் வரவில்லை. என்னுடன் கைபேசியில் தொடர்புகொண்டு ஏன் தங்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று தகைமையுள்ள ஏனையோர் என்னுடன் கதைத்தார்கள். வேலை கிடைக்காதவர்களில் ஒருவர் "நான் நேரத்தோடனே நேர்முகத்தேர்வுக்கு வந்தும் வேலை கிடைக்கவில்லை" என்றார். மற்றவர் நேர்முகத்தேர்வுக்கு நான் நேரம் பிந்தி வந்துவிட்டேன். இதுக்குத்தான் நேரத்தோடு வர வேண்டும் என்று சொன்னார். அது எங்க நேரம் என எனக்குள்ளே நினைத்துக்கொண்டேன்...!

-பிறைவாணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்காக வெடிக்கும் போராட்டம்

துன்னாலைச் செல்வம்

இலங்கை தொடர்பான ஜெனிவாத் தீர்மானம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றாலும் அந்தத் தீர்மானத்தினால் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை என்று அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர். மூன்று தசாப்த கால ஈழப்போரில் இலங்கை அரச படைகளால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர்.

இறுதிப் போருக்கு சர்வதேச நாடுகளும் இலங்கை அரசுக்கு உதவி புரிந்தமையால் ஈழத் தமிழர்களின் படுகொலைக்கு ஆரம்பிப்பதற்கு அதுவும் பிரதான காரணங்களில் ஒன்றாயிற்று. இந்த வரலாற்றினை எவரும் மறந்து விடக்கூடாது.

இலங்கை அரசு பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய வற்றுக்கு அர்த்தம் உள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விடயங்களில் அதிக அக்கறை காட்டுமாறு அவர் இலங்கை அரசைக் கோரியுள்ளார். ஜெனிவா பிரேரணையை அடுத்து வொஷிங்டனில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மனித உரிமை விடயங்களில் அதிக அக்கறை காட்டுமாறுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நடைமுறைப் படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் விதத்தில் செயற்படும் அமெரிக்காவால் எந்த நாட்டின் பிரச்சினைக்குப் பொறுத்தமான பூரணத் தீர்வு கிடைத்தது என்பது கேள்வியாகவே உள்ளது.

அமெரிக்கப் படைகள் தரை இறங்கிய நாடுகள் யாவுமே பெரும் பாதிப்பை எதிர்கொண்டன. அங்கு அமைதியான சூழல் இன்னும் ஏற்படவில்லை.

உலகில் தனது நாடு முன்னணியில் இருக்க வேண்டும், தனக்கு கீழே மற்ற நாடுகளைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலுக்குஏற்ப தனது திட்டமிடல்களை அமெரிக்கா முன்னெடுக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக தீர்வு எட்டப்பட வேண்டும் என்று விட்டுக்கொடுப்பு இல்லாமல் செயற்படுவதாக காட்டி விட்டு, அமெரிக்கா ஆத்மார்த்தமாக உழைத்ததாக இல்லை.

இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் சர்வதேசத்தை உதவிக்கு எதிர்பார்த்திருந்ததாக தெரிவிக் கப்படுகிறது. அதேபோன்றே தமிழர்கள் தமக்கான அரசியல் தீர்வுக்கும் சர்வதேச உதவியையும் ஆதரவையும் எதிர்பார்த்து உள்ளனர்.

மூன்று தசாப்த காலப் போர் முடிவடைந்து அடுத்த தசாப்த காலம் தொடங்கி விட்டது. தமிழர்களுக்காக சர்வதேசம் நன்மை தரும் விடயங்கள் எதனையும் இதுவரை செய்யவில்லை.

இலங்கைக்கு எதிராக இன்று மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக் களை சுமத்தும் நாடுகள், இலங்கை அவர்களும் காரணமாக அமைகின்றனர். அதனால் தானே என்னவோ தீர்மானம் வலுவிழந்தது என்று கருதத் தோன்றுகிறது. அதுவும் காரணமாகவும் அமைகின்றது.

விடுதலைப்புலிகள் பலமிக்கவர்களாக இருந்த போது இலங்கை அரசும் சர்வதேச நாடுகளும் அவர்களை பேச அழைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்தன. அது இயலாமற் போயிற்று என்பது தெரிந்ததே.

முள்ளிவாய்க்காலில் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தையும் அரசியல் தீர்வையும் குழி தோண்டி புதைத்தனர். ஏன், எதற்காக என்று எவருமே கேட்க முடியாத நாதியற்ற இனமாக தமிழ் மக்களை மாற்றுவதற்கான கைங்கரியங்கள் தமிழர் பிரதேசங்களில் அரங்கேற்றி வருகின்றன.

போர் முடிவடைந்த இன்றைய காலப்பகுதியில் இலங்கை அரசினால் ஈழ மண்ணில் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் நில அபகரிப்புத் தான் அன்றைய காலத்திலும்முளைவிட்டது. போராட்டத்தை விடுதலைப்புலிகள்



“அடிக்கு மேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும்'' என்று ஒரு பழமொழி இருக்கிறது. அடி மேல் அடியை வாங்கியதால் ஈழத்தமிழர்கள் உரிமை பற்றி வாய் பேசவும் முடியாத பிராணி போல வாழ்கின்றனர். இந்த நிலைமை இன்னும் எத்தனை தலைமுறை கடந்தும் செல்லும் என்பதை இப்போதைக்கு எவராலும் கூற முடியாது.”

யில் போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

கடற்புலிகளை எதிர்கொள்வதற்கும் புலிகளின் கடல்கலன்களை அழிப்பதற்கும் ஆயுத விநியோ[illegible] பாரிய அளவில் சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்கியுள்ளன. சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் எமக்கு இந்த போரினை வெல்வது கடினமாக இருந்திருக்கும். இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் பாரிய உதவியினால் தான் போரை வெற்றி கொள்ள முடிந்தது- என்று மேலும் சரத் பொன் சேகா தெரிவித்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை முற்றாக அழிக்க துணை நின்ற சர்வதேச நாடுகள், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாமல் இருக்கின்றன.

இந்த நிலை தொடர்ந்தால் இலங்கை அரசு தமிழ் மக்களை மீண்டும் அடிமைகளாக வைத்திருக்கவே வித்திடும் என்பதை அறிந்தும், அமெரிக்கா ஈழத் தமிழர் பிரச்சினையில் தனது நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது தெரிகிறது.

மூன்று தசாப்த காலப் போரில் இலங்கை அரச படைகள் தமிழர்களுக்கு செய்த அநியாயங்களை மறக்க முடியாது. இலங்கை அரச படை தாக்குதலுக்கோ, அச்சுறுத்தலுக்கோ உட்படாத குடும்பம் என்று இங்கு தமிழ்க் குடும்பம் ஒன்று தானும் இல்லை எனலாம்.

''அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்'' என்று ஒரு பழமொழி இருக்கிறது. அடி மேல் அடியை வாங்கியதால் ஈழத் தமிழர்கள் உரிமை பற்றி வாய் பேசவும் முடியாத பிராணிகளாக மாற்றப்பட்டுள்ளனர். இந்த நிலைமை மாற இன்னும் எத்தனை தலைமுறை செல்லும் என்பதை இப்போதைக்கு எவராலும் கூற முடியாது.

ஆனால் தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தமிழர்களுக் காகக் கொந்தளிக்கத் தொடங்கியுள்ளனர். மூன்று தசாப்த கால ஆயுதப் போரை நடத்துவதற்கு தமிழ் நாடு உந்து சக்தியாக இருந்தது. இன்று தமிழ் நாட்டில் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. இரு நாட்டுத் தமிழர்களும் மாறி மாறித் தமது உரிமைகளுக்கான போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோல்வி கண்ட நிலையில் தமிழ் நாட்டில் தமிழ் மக்களின் போராட்டம் எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அதற்குக் காலம் தான் பதில் சொல்லும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களுக்கு நோய்கள் வராமல் தடுக்க வேண்டுமென்றால் ஊர் சுற்றப் போக வேண்டியது தான். எனக்குப் பழக்கமான குடும்பம், வேலைக்கு போற பாதைதான்.

சில நேரங்களில் உலகைப் பார்க்கும் போது எல்லோரும் சந்தோஷமாக இருப்பது போலத் தோன்றும். அவர்களுக் கென்ன குறை. கை நிறைய பணம், ஊரில் ஏகப்பட்ட சொத்துகள், வெளிநாட்டில் பிள்ளைகள்; பிறகென்ன சாப்பிட்டுப் போட்டு கோயில் குளமெண்டு சுத்தித் திரிய வேண்டியது தான். இன்னொரு பக்கம் சிலருக்கு ஊரில் ஒரு வீடு, கொழும்பில ஒரு வீடு, சென்னையில் ஒரு வீடு (தமிழ்நாடு). நினைச்சவுடன் வெளிக்கிட்டுப் போய் தங்கி நின்று ஊர் சுத்தி வரலாம். எல்லாம் நடக்கும். ஆனா ஊருக்கு வந்தவுடனே தனக்கு ஒரே வருத்தம் என்று புராணம் பாடத் தொடங்கி விடுவினம்.

மனிதர்களுக்கு நோய்கள் வராமல் தடுக்க வேண்டு மென்றால் ஊர் சுற்றப் போக வேண்டியது தான். எனக்குப் பழக்கமான குடும்பம், வேலைக்கு போகின்ற பாதைதான். இடையில் போகவில்லை. இன்று பாதை மாற அவர்கள் வீட்டை அண்மித்தேன். பெரிதாக ஆரவாரத்தை காணோம். பழக்கத்தால் உள்ளே நுழைந்தேன். சுவரில தொங்கிய ரி.வி

தொல்புரம் சி. கதிர்காமநாதன்

# நம்பரை அடிச்சா உடன் வந்திடும்


திரையில் (தற்போது புதிதாக இறக்குமதி) நாட்டியப் பேரொளி பத்மினி, முரசு ஒலிபரப்பில் மறைந்து இருந்து பார்க்கும் மர்ம மென்ன ? என்று அபிநயித்தபடி பாடிக் கொண்டிருந்தார்.

குரல் கொடுத்தேன். மாமி (60 வயதுக்கு மேல்) நடையில் தள்ளாட்டத்துடன் வந்தார், பின்னால் மாமா. என்ன பிரச்சினை யென்று விசாரித்தேன். இடுப்பில் தொடர்ந்து சத்திர சிகிச்சை செய்து 2 நாள்கள் ஆகிற தாம். அவர் கட்டிலில் அமர்ந்து விட்டார். சிகிச்சை பற்றிய விபரம் கேட்டால் அது ' தமிழர் பிரச்சினை போல் பல சம்பவங்களைக் கொண்டிருந்தது. மூளாயில் தொடங்கி யாழ்ப்பாணம் போய் பின் கொழும்பு போய் மறுபடி மூளாயில் தொடர் சிகிச்சையுடன் முடிவடைந்துள்ளது.

மாமி இந்தக் காலத்தில் நாட்டின் பல மருத்துவர்களை (தமிழ், சிங்கள) பார்த்துவிட்டார். பார்க்கப்போனனான் எப்படி கதைக்காமல் இருப்பது?

(வளரும்)





# நிறங்களும் குறியீடுகளும்

நிறங்களை வர்ணம், சாந்து என்று தமிழிலும் ஆங்கிலத்தில் 'Colour'' என்றும் அழைப்பர். வர்ணங்களானது கீழைத் தேசத்திலும் மேலைத் தேசத்திலும் பலதரப்பட்ட பார்வையின் கீழ் இருந்தது. அது தட்டையான தன்மை கொண்டது எனவும் ஒளியின் செல்வாக்கு செலுத்திய ஓர் பகுதி எனவும் ஒளி நிழல் எனவும் பிரித்துக் கொண்டனர்.

நிறமானது, அழகானது. மனதுக்கு இனிமை தருவது இதை வாழ்வின் சம்பவங்களோடும் இணைத்துக் கொண்டனர். இந் நிறங்களை குறிப்பிட்ட தேவைகளுக்காக பயன்படுத்தும்போது வர்ணங்களை அவர்களை அறியாமலே பயன்படுத்தினர். அவை வாழ்வியற் குறியீடாக மாறியது.

காலப்போக்கில் வர்ணங்களின் குறியீடானது கலாசாரங்களினூடான வெளிப்படும் தன்மையைக் கொண்டதாக மாறியது. உதாரணமாக கறுப்பு துக்ககரமானதும் மஞ்சள் மங்களகரமானதும் என நேரான எதிரான பார்வை காணப்பட்டது. மேலும் குழந்தைகள் கடுமையான மகிழ்வுக்குரிய வர்ணங்களைத் தெரிவு செய்வர் எனவும் கூறினர். வர்ணங்களானது, இரு வழிகளில் கருத்துக்களை வெளிப்படுத்தும். ஒன்று இயற்கையை ஒட்டியதாகவும் இரண்டாவது உளவியல் குறியீடாகவும் அமைந்தது. அதாவது மனித வாழ்வியலுடன் ஒட்டியதான மனித மனம் சார்பான ஒன்றாகும்.

அது மனத்தைக் கட்டுப்படுத்தி வெளிப்படுத்துவதில்லை. சுயமாக வெளிவரும் உணர்வாக உணரப்படும். அத்துடன் உண்மையின் வெளிப்பாடும் ஒத்த நிறமுடையவற்றை உணரப் பண்ணுவதாகவும் அமையும். உதாரணமாக மெல்லிய நீல நிறத்தைப் பார்க்கும் போது அது வானத்தின் வர்ணத்தை உணர்த்தும். மேலும் அதன் உளவியல் ரீதியான குறியீடாக அமைதி அடக்கம் பொறுமை போன்றவற்றை வெளிப்படுத்தும்.

(வளரும்)

# புவியின் தோற்றமும் பாதுகாப்பு முறையும்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அருணா தர்மலிங்கம்



பூமி சாதாரணமாக உருண்டை வடிவமெனக் கொள்ளலா மெனினும் அது சாதாரண கோளல்ல, ஒரு தோடம்பழம் போன்று துருவங்களில் சிறிது தட்டையாகவும், கற்பனைக் கோடான பூமத்திய ரேகைப் பகுதியில் சற்றுப் பருத்தும் பரிணமித்துள்ளது. பூமி தன்னைத் தானே சுற்றுவதால்தான், இப்படியான உருவத்தைப் பெற்றிருக்கின்றது. புவி தன்னைத் தானே ஒரு முறை சுற்றி வர இருபத்து மூன்று மணித்தியாலம் ஐம்பத்தாறு நிமிடங்கள் செல்கின்றன. அதேவேளை சூரியனை ஒரு முறை சுற்றி வர முந்நூற்று அறுபத்தைந்தே கால் நாள்கள் எடுக்கின்றன. ஆண்டு தோறும் சில மாதங்களில் பூமியானது சூரியனுக்கு மிகவும் அண்மையில் வருகின்றது. அதே நேரம் ஆடி மாதமளவில் புவி சூரியனி லிருந்து மிகவும் தூரத்தில் நிலை கொண்டிருக்கும். நியூட்டனின் ஈர்ப்புச் சக்தி விதியைக் கொண்டு, புவியின் நிறையையும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பூமியின் உள்பாகத்தில் குறிப்பிட்ட ஆழத்துக்கு கீழே எப்படியிருக்கும் என்று விஞ்ஞானிகள் தொடர்ந்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். பூகம்பம், நில நடுக்கம், எரிமலை தொடர்பான ஆய்வுகளிலிருந்தும் பூமியின் அடியில் காணப்படும் வஸ்துகளின் தன்மையை ஊகித்து அறிவதிலும் ஆராய்ச்சியாளர் ஈடுபட்டுள்ளனர்.

புவியின் மையப்பகுதி மிக வெப்பமாக இருக்க வேண்டுமென்றும் பூமியின் மேல்பரப்பான புரணியில் இருந்து இரண்டாயிரம் கிலோமீற்றர் தொலைவில் இரும்பு உருகிய நிலையில் இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பூமி தோன்றிய கால கட்டத்தில் அதுவும் சூரியனைப் போன்று ஒரு நெருப்புக் கோளாகக் காட்சியளித்ததாம்.

காலப் போக்கில் சிறிது சிறிதாக உஷ்ணம் குறைந்து வருவதாகவும் புரணி நன்றாக குளிர்ந்து உயிரினங்கள் வாழக்கூடிய தட்ப வெப்ப நிலையை எய்தியதாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் அதன் உட்பகுதியில் கணிசமான வெப்பம் இருந்து கொண்டேயிருக்கின்றது.

புவி சூரிய மண்டலத்தில் நீள் வட்டப் பாதையில் சுற்றாமல்விட்டால், சீதோஷ்ண நிலை ஏற்படாது. அதே நேரம் தன்னைத் தானே சுற்றாமல் விட்டால் இரவு பகல் உண்டாகாது. முழு உலகமே இயங்காமல் நின்றுவிடும்.

பூமியின் கற்பனை அச்சு (Axle) செங்குத்தாக இருக்கு மானால் பருவகாலங்கள் ஏற்பட வாய்ப்பே இல்லாமல் போய்விடும். புவியியலாளரது கூற்றின் பிரகாரம் பூமியின் வயது முந்நூறு கோடி ஆண்டுகளைக் கடந்துள்ளதாம்.


எனவே புவியின் பாதுகாப்பு முறைமையை நாம் அலட்சியம் செய்தல் ஆகாது. நிச்சயமாக புவி பாதுகாப்பு மிக அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலாகும். ★

ஒரு கடற்கரையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் ஒரு கப்பலை நாம் உற்று நோக்கினால் அது வேகமாகச் சென்று எம் கண்ணிலிருந்து முற்றாக மறைந்து விடுவதற்கு முன் முதலில் அதன் கீழ்ப் பகுதியும் பின்னர் சிறிது சிறிதாக அதன் மேற்பகுதியும் மறைவதைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் – கற்பித்தலில்

## துணைச் சாதனங்களின் பங்கு



ஒருவரிடத்தே நிலையான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாட்டை கற்பித்தல் எனலாம். ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கு அறிவு கையளிக்கப்படுகின்றது. ஆசிரியரது வகிபங்கு காலத்தினூடாக வேறுபட்டாலும் அறிவை மாணவர்கள் பெறுவதற்கு வழிகாட்டுபவர், தூண்டுபவர் என்ற நிலைமைகள் இன்று முழுமையாக மாற்றமடையவில்லை எனலாம்.

மாணவர்களது ஆற்றல், திறன் என்பவை கருத்தில் எடுக்கப்பட்டு பொருத்தமான கற்பித்தல் முறைமை பயன்படுத்தப்படல் வேண்டும். பாடசாலைக் கல்வியில் ஏறக்குறைய ஐந்து சதவீதமான மாணவர்களே உச்சப் பயனைப் பெறுகின்றனர். மாணவர்கள் தம்மை கற்றல் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபடுத்த, ஆசிரியர்கள் கற்றல் துணைச் சாதனங்களை பயன்படுத்துவது சிறந்ததாகும்.

கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் போது ஆசிரியர்கள் அறிவை மாணவர்களுக்கு வழங்குபவராக செயற்படுவதை விட, கற்றலை எளிதாக்குபவராகச் செயற்படுவது சிறந்ததாகும். இதற்கு கற்பித்தல் முறைகளை வினைத்திறனுடையதாக்க கற்றல் துணைச் சாதனங்களை உபயோகிப்பதும் ஒரு வழிமுறையாகும். இதன் மூலம் கலைத்திட்ட இலக்கும் எய்தப்படும்.

''றொக்'' என்பவரது கருத்துப்படி, கற்பித்தல் துணைச் சாதனங்கள் என்பவை, வகுப்பறைக் கற்பித்தல் கற்றலில் கனதியானதாக, வினைத்திறன் உடையதாக, விரும்பத்தக்கதாக ஆக்குவதற்கு உதவுவதாகும். மாணவர்கள், திறன்கள் குறைவடைந்து செல்கின்ற காரணத்தினால் துணைச் சாதனைகளின் பயன்பாட்டை அறிமுகப்படுத்துவதற்கான தேவையும் எழுந்துள்ளது.

துணைச் சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் வினைத்திறனான கற்றல் நிகழும். கற்பித்தல் நேரம் மீதப்படுத்தப்படும். கற்றல் மாணவர்களுக்கு பொருத்தமானதாக அமையும். தெளிவான எண்ணக்கரு ஆக்கத்திற்கு உதவுகின்றது. வகுப்பறைத் திறன் நிலையில் மாற்றமும், கவர்ச்சியும் ஏற்படும். இது மாணவர்க்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். அத்துடன் வகுப்பறை கலகலப்பாகவும், சுறுசுறுப்பாகவும் மகிழ்வாகவும் காணப்படும். துணைச் சாதனங்களை பார்த்துக் கற்பதன் மூலம் கற்றல் 83 வீதம் இலகுவாகின்றது.

கற்றல் துணைச் சாதனங்கள் மூலம் மாணவர்கள் கற்பதால் பல புலன்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. இதனால் கூடிய பயனையும், நிலையான அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என ஆய்வுகள் கூறுகின்றன. துணைச் சாதனங்களைப் பயன்படுத்துவதனால் மாணவர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களின் கவனத்தையும் ஈர்க்கலாம். சிக்கலான எண்ணக் கருக்களை எளிதில் விளங்க வைக்கலாம். மாணவர்களைச் செயலூக்கத்துடன் இயங்க வைக்கலாம். ஆழமான விளக்கத்தையும் பெற்றுக் கொள்ளலாம். கற்றலில் விருப்பமில்லாத, ஈடுபாடு குறைந்த மாணவர்கள் புத்தூக்கத்துடன் கற்றலில் ஈடுபட வாய்ப்பேற்படும். மாணவர் மத்தியில் பேச்சுத்திறன் விருத்தியடையும். ஆசிரியர், மாணவர் தொடர்பு விருத்தியடையும். இது கற்றலுக்கு ஒரு தூண்டியாக அமையும்.

ஒவ்வொரு அலகுக்கும் பொருத்தமான துணைச் சாதனங்களை ஆசிரியர்கள் முன் கூட்டியே தயார் செய்து வைத்துக் கொள்வார்களாயின், அதனை அதிபர்கள் ஊக்குவிப்பார்களாயின் துணைச் சாதனங்களின் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்ளலாம். இவை கட்டாயம் கற்பித்தலின் போது பயன்படுத்தப்படல் வேண்டும். இது உறுதி செய்யப்பட வேண்டும். இவற்றின் மூலமும் அடைவு மட்டத்தை, தேர்ச்சி மட்டத்தை உயர்த்திக் கொள்ள முடியும்.

மாணவர்களது வரவு ஒழுங்கீனம், இடைவிலகல், பாடசாலையை விட்டு தூர விலகல் என்பவற்றிலிருந்து மாணவர்கள் விடுபடவும் இக் கற்பித்தல் முறைமை பயனுடையதாக அமையும். மாணவர்களைக் கல்வியுடன் இணைக்க வேண்டும். கல்வியின் பின்னடைவு வாழ்க்கையில் பின்னடைவை ஏற்படுத்தும். மாணவப் பருவத்திலேயே இளைய கூலிப்படைகளாக மாணவர்கள் மாறுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம். எனவே கற்றல் - கற்பித்தலில் துணைச் சாதனங்களை வகுப்பறையில் பயன் படுத்தி கற்றலுக்கு ஊக்குவிக்க வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவர் ஒருவருக்கும் யாதாயினும் ஒரு பொருள் கற்பதற்கு உதவுமாயின் அது கற்றல் சாதனமாகும். ★

**சி.நற்குணலிங்கம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரவெட்டி.**

# புத்தகசாலை

## நூல்: 'கட்டுரைச் சங்கமம்'




தரம் 5 புலமைப் பரிசில் தேர்வில் கட்டுரைக்குரிய முழுப் புள்ளிகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டும் பயிற்சி நூலாக ஆசிரியர் எம்.சுகந்தனால் எழுதப்பட்ட 'கட்டுரைச் சங்கமம்' நூல் வெளிவந்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பகுதி II வினாத்தாளின் இறுதி வினாவாக அமைவது கட்டுரை எழுதுதல் ஆகும். கட்டுரை எழுதும் வினாவுக்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் அதிகம். இப் புள்ளிகள் ஒரு மாணவனது சித்தி நிலையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கட்டுரை எழுதுதல் என்பது ஒவ்வொரு மாணவனதும் மொழியறிவு, கற்பனைத்திறன், எழுத்தாற்றல், விமர்சிக்கும் திறன், சிந்திக்கும் ஆற்றல், ஊகிக்கும் திறன் என்பனவற்றுடன் தொடர்புடையதாகும்.

மாணவர்களிடம் இலைமறை காயாகக் காணப்படும் இந்த ஆற்றல்களை வெளிக்கொண்டுவர இந்த நூல் உதவும்.

இந்த நூலில் உள்ள 150 கட்டுரைகளையும் வாசித்து பயிற்சி செய்வதன் மூலம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு வரும் கட்டுரைகளுக்கு மாணவர்கள் இலகுவாக விடையளிக்கும் ஆற்றலைப் பெறுவர்.

**விமலன்.**

## நூல்: 'வார்ப்பு'




'வார்ப்பு' என்ற தலைப்பில் கவிதை நூலொன்றை கு.யசிதீபன் எழுதி வெளியிட்டுள்ளார். காதலும் போருமே கவிதைகளின் கருவூலம். இதற்கு இளங்கவிஞன் யசிதீபனும் விலக்காகவில்லை.

வாழ்வியல் சிந்தனையின் தாக்கங்கள் வடுக்களாக அமையினும், அதனாலே பாதிப்படைந்தவர்கள் பலர் அதனைத்துடைத்தெறிந்து விடுகிறார்கள். ஒரு சிலர் அந்தப் பாதிப்புக்களையும் அதிர்வுகளையும் கவிதை வரிகளிலே கரைத்து விடுகின்றனர்.

இந்த உண்மைகளை இந்த நூலிலுள்ள கவிதைகள் விரித்துக்காட்டுகின்றன. நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று என்பன கவிதைகளில் முகாமிட்டிருக்கின்றன. குழந்தைகள் முனகலுடன் இந்த நூல் வரலாறாக விரிகிறது. கண்ணாடித் தொட்டியில் அழகிய மீன் குஞ்சுகளால் ஓடித்திரிவதை விட வாய்க்கால்களில் சுதந்திரமான தவளைகள் தத்தித் திரிவது வரவேற்கத்தக்கது.

கவிஞனின் சுதந்திர தாகம் பல கவிதை வரிகளில் மூச்சு விடுவதைப் பார்க்கிறேன். காப்பாற்றி வந்தது இழந்து போகிறதே என்ற ஏக்கத்தை யாழ்ப்பாணக் கலாசாரத்தில் கவிஞர் எடுத்துக் காட்டும் சேதி சொல்லப்பட வேண்டிய சுருதி.

**தீபன்.**

## நூல்: 'அருள் மிகு வாரியப்பர் பாமாலை'





சாவகச்சேரி நகரின் அருகே கோயில் கொண்டருளும் அருள்மிகு அமிர்தபாஷிணி அம்பாள் உடனுறை வாரிவனநாதர் பெருமானின் மீது கொண்ட பக்தி காரணமாக கவிஞர் முருகுவினால் புனையப் பெற்ற வாரிவனநாதர் பெருமானின் புகழ்பாடும் 125 கீர்த்தனைகளை உள்ளடக்கி ''அருள்மிகு வாரியப்பர் பாமாலை'' எனும் நூல் வெளிவந்துள்ளது.

ஆன்ம ஈடேற்றம், மூவாசை, மும்மலவிறக்கம், இறைவனின் அருளுக்காக இறைஞ்சுதல்- இரங்குதல் வினை நீக்கம், பிறவிப் பிணி நீக்கம், இறைவனின் பாதமலருக்கான ஏக்கம் முதலானவைகளே கீர்த்தனைகள் ஒவ்வொன்றிலும் ஊடுருவி நிற்பதனைக் காண முடிகின்றது.

கீர்த்தனைகள் சிலவற்றில் தன்னை ஆட்கொண்டருளிய இறைவனுடன் பக்தியுரிமை கொண்டு அவரது அருளுக்காக வாதிடுவதனையும், அவரின் மேல் சினம் கொண்டு முரண்படுவதனையும் காணலாம். வாரியப்பர் பெருமான் மீது மட்டுமல்லாது அமிர்த பாஷிணித் தாயார் மீதும் அவரது அருள் வேண்டித் தனியாக 30 கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்.

**மதி.**

## நூல்: 'அம்மா காத்திருக்கக் கூடும்'



யாழ்.பொலிகண்டி முல்லைத்திவ்யனின் மூன்றாவது தொகுதியாக ''அம்மா காத்திருக்கக் கூடும்'' கவிதை நூல் வெளிவந்துள்ளது.

வெறுமனே துயரச் சுமைமட்டும் படிப்பவர்களை அழுத்தாமல் இன்பம் ஊறும் சில பாடு பொருள்களும் இந்த நூலில் நிறைந்திருக்கிறது.

தான் கண்டதைக் கண்டபடி கவித்துவத்தோடு சொல்கின்ற வித்தை, இலக்கியம் செய்கின்றவர்கள் எல்லோரிடமும் சிக்கி விடுவதில்லை. அதுவும் கவிதைக் காரர்களுக்கு கண்டிப்பாய் இந்த கைங்கரியம் வாய்த்திருக்க வேண்டும். இதன் பிரதிபலிப்பை இந்த நூலில் நுகரலாம்.


வரிகளுக்கு வரி வருகின்ற ஒவ்வொரு வார்த்தைகளும் மனதைப் பல கேள்விகள் கேட்டுப் போகின்றன. ஒவ்வொரு கவிதையையும் படித்து முடிக்கையில் இனம் புரியாத ஒரு வித உணர்வு எங்களை ஆட்கொள்கிறது. எமது இனத்துக்கான, எழுத்து இலக்கியத்துக்கான தரமான வரவாக இந்த நூல் அமைகிறது.


**ரமேஷ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறமூர்த்த பிறழ்வால் ஏற்படும் மங்கோலிஸம்

சி.சஸ்ரூபி,
இணை மருத்துவ விஞ்ஞானம்,
யாழ்.பல்கலைக்கழகம்.





பிறப்பின்போது நிறமூர்த்த பிறழ்வால் ஏற்படும் இந்த நிலைமையானது John LandonDown இனால் விபரிக்கப்பட்டமையால் அவரின் பெயரால்Down Syndrome என அழைக்கப்படுகிறது. 21 ஆம் பரம்பரை அலகில் ஏற்படும் பிறழ்வான சேர்க்கையால் உடல், உள சார்பான அசாதாரணமான குணங்குறிகள் தோற்றுவிக்கப்படுகின்றன. கர்ப்ப காலத்தில் தாயின் இரத்தப் பரிசோதனையின்போது இந்த நிலைமையை தோற்றுவிக்கும் காரணிகள் உண்டா என்பதைக் கண்டுபிடிக்கலாம். அதிகூடிய தாயின் வயதும் (ஏறத்தாழ 35 வயதிலும் அதிகம்) இந்த நிலைமையின் சதவீதத்தை அதிகரித்து விடுகிறது. குழந்தை பிறந்தபின் அடுத்த கர்ப்பம் தரிப்பதற்கு முன்னர் மரபணு ஆலோசனை முக்கியத்துவமாகிறது. தாய்ப்பாலூட்டுதல் ஊக்குவிக்கப்படல் வேண்டும். இந்த நிலையானது இனம், சமயம், சமூக நிலை சாராதது.

இந்த நிலைமையில் பிறக்கும் பிள்ளையின் தலை சிறியதாக இருப்பதுடன் தட்டையான பின்பகுதி மண்டையோட்டில் தென்படும். முகத்தோற்றத்தில், மேல் நோக்கியதான கண்கள், சாய்வான கண் மேல் இமைகள், கண்ணின் கருவிழிக்கு அருகில் வெண்ணிறப் பொட்டுக்கள், சற்று இறக்கப்பட்ட நிலையில் காதுகள் சிறியதான அல்லது அற்றுப்போன காது சோணைகள், தட்டையான பாலத்துடன் கூடிய சிறிய மூக்கு, சிறியதான வாய்க்குழியிலிருந்து வெளி நோக்கிய நாக்கு, ஒழுங்கு வரிசையில் அமையாத பல்வரிசைகள், மேல் பல், கீழ் பல் பொருந்தா நிலைமை என்றவாறு அமைந்திருக்கும். அகன்ற சிறியதான கழுத்து காணப்படும். அத்துடன் தலைமுடிகள் ஐதாகவே காணப்படும். கைகள் சிறியதாகவும் அகன்றதாகவும் காணப்படும். தனித்தரேகையே உள்ளங்கையில் காணப்படும். அதே போன்று பாதத்தின் உட்பக்கமாக நீண்டதான ஒரு மடிப்பு காணப்படும்.

இந்தவகையான வெளித்தோற்றங்களோடு மட்டும் நின்றுவிடாது குழந்தை வைத்திய நிபுணரின் பரிசீலனையும் முக்கியத்துவமாகிறது. Cheerful idiot என அழைக்கப்படும் இவர்கள் இலகுவில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாக இருப்பர். இவ்வாறான பிள்ளைகளின் விருத்திப் படிமுறைகள் மந்தமான கதியிலேயே நடைபெறுவதால் ஆரம்பகட்ட திறன்களான நடத்தல், இருத்தல், கதைத்தல் போன்றவற்றை கிரமமாக பழக்க வேண்டும். இவர்களது அதிகப்படியான; சராசரியான விவேகத்திறன் (IQ) 40- 80 வரையில் இருக்கும். அவர்களது வளர்க்கப்படும் சூழல்காரணிகள் அவர்களின் விவேகத்திறனில் செல்வாக்கு செலுத்துகின்றன.

இவ்வாறான பிள்ளைகளில் 50 வீதமானோர்தும் 55 வயது வரையேனும் வாழக்கூடியவராயிருப்பர். இந்த நிலைமையில் பிறந்த பிள்ளைகளுக்கு பரம்பரை ரீதியிலான இதயநோய்களுக்கு சாத்தியப்பாடு அதிகமுண்டு. இதைவிட கண்புரை நோய், இலகுவில் நோய்த்தொற்றுக்குள்ளாதல், சுவாசநோய்கள், பார்வை மற்றும் செவிப்புலன் சார்பான பிரச்சினைகள் மற்றும் தையிரொயிட் சுரப்பி குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கும் வாய்ப்புகள் அதிகம்.

இவர்களுக்கு சிகிச்சையும், உளவளத்துணையும் அவசியமாகிறது. குற்ற உணர்வு, ஏற்றுக் கொள்ள முடியாத நிலையுடன் வாழும் இப்பிள்ளைகளையும் இவர்கள் பெற்றோர்களையும் சமுதாயத்தில் ஒரு பொருட்டாக எடுத்து அவர்களை வழிநடத்துவது மருத்துவ சமுதாயத்தினர் மட்டுமின்றி யாவரினதும் கடமையாகும். ★

# வனவாசம் முடிந்தாயிற்று; மீள்குடியமர்வு எப்போது......?

தென்னவன்

2000 மார்ச் 26 - நள்ளிரவு 2.00 மணிதிடீரென துப்பாக்கி வேட்டுக்களும் கூவிக் கொண்டு செல்லும் ஷெல்களும் மக்களைத் திகிலடையச் செய்தன. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பச்சிலைப்பள்ளி மேற்கு, தென்மராட்சி கிழக்கு ஆகிய பிரதேச மக்கள் குழப்பத்துக்கு உள்ளாகினர்.

யாழ். குடாநாட்டினை படையினர் 1996 ஏப்ரலில் கைப்பற்றிய பின்னர் இப் பிரதேசங்கள் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததால் பிரதேச மக்கள் ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்த காலமது.

அக் காலப் பகுதியில் சில வேளைகள் திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டு ஒரு சில நிமிடங்களில் அமைதியாகி விடும். ஆனால் மணிக்கணக்கில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கூவிக் கொண்டு செல்லும் ஷெல்களின் ஓசைகளும் வீழ்ந்து வெடிக்கும் சத்தங்களும் காதைப் பிளந்தன.

என்ன நடக்கிறது என்ன நடக்கிறது என்று அறிய முடியாமல் தொடர்புகளற்ற நிலையில் மக்கள் பதற்றமடைந்தனர்.

அந்த நேரத்தில் பிள்ளைகளைப் பெற்றோரை, உறவுகளை ஒருங்கிணைத்து பாதுகாப்புத் தேடுவதில் ஒரு சிலரும், வழமை போல இடப்பெயர்வுக்கு தேவையானவற்றை ஒன்று சேர்ப்பதில் மறுசாராரும் ஈடுபட்டனர்.



ஒரு சிலர் கையில் அகப்பட்ட பொருள்களுடன் தூக்கக் கலக்கத்திலிருந்த பிள்ளைகளையும், வயது முதிர்ந்த பெற்றோரையும் அணைத்த வண்ணம் அயலில் உள்ள ஆலயங்கள் உள்ளிட்ட பாதுகாப்பான இடங்களை நாடி நகர்ந்தனர். எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனத்திடத்துடன் வீடுகளுக்குள் முடங்கியிருந்தனர் வேறு சிலர்.

நள்ளிரவு 2.00 மணிக்குத் தொடங்கிய வேட்டுக்களின் சத்தம் விடிந்தும் ஓயவில்லை. ஓரளவு பொழுது புலர்ந்ததும் வேட்டுச் சத்தங்களின் மத்தியில் உறவுகளைத் தேடி ஒன்றிணைந்து செய்வதறியாது மக்கள் கலங்கினர்.

26 ஆம் திகதி காலை 6.00 மணிக்குப் பின்னர் இரவு இடம் பெற்ற சம்பவத்தின் விவரம் வெளி வரத் தொடங்கியது. வன்னிப் பகுதியில் நிலை கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணியொன்று இத்தாவில் தொடக்கம் பளை முல்லையடி வரையான சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரையுள்ள ஏ-9 வீதியில் உள்ள பகுதிகளில் தாக்குதல் நடத்தி அப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகத் தெரியவந்தது.

ஐந்து கிலோ மீற்றர் தூரத்தை விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தாலும் சுற்றி வரப் படையினர் நிலை கொண்டிருந்ததால் பச்சிலைப்பள்ளி மேற்கு, தென்மராட்சி கிழக்கின் சூசைப்பிள்ளை ஏற்றம் வரையிலான மக்கள் தமது கையில் அகப்பட்ட பொருள்களுடன் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்களில் தஞ்சமடைந்தனர்.

பளை நகரம், புலோப்பளை அல்லிப்பளை, முல்லையடி, தர்மக்கேணி, வண்ணாங் கேணி உள்ளிட்ட 15 கிராம அலுவலர் பகுதிகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற முடியாத அளவுக்கு போர்ப் பிரதேசங்களில் அகப்பட்டு இரு வாரங்களின் பின்னர் அப் பகுதி உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய சுப்பிரமணியம் புத்திசிகாமணியின் பெரு முயற்சியினால் ஆலயங்களில் தங்கியிருந்த மக்களுடன் வைத்தியசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிரதேச சபை, உதவி அரச அதிபர் பணிமனை உடைமைகளும் கிளாலி ஊடாகக் கொண்டு வரப்பட்டன.

2009 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு 2000 மார்ச் 27 ஆம் திகதி வெளியேறிய மக்களில் பெரும்பாலானோர் கட்டம் கட்டமாக மீளக் குடியமர்த்தப்பட்ட போதிலும் பளைப் பிரதேசத்தின் வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவு முழுவதும் இத்தாவில், முகமாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சில பகுதிகளும் இன்னமும் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத நிலையில் அப்பகுதி மக்கள் வேறு இடங்களில் வசித்து வருகின்றனர்.

பாண்டவர்களின் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் 13 வருடங்களுடன் நிறைவு பெற்றது. ஆனால் இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து அந்தப் 13 வருடங்களும் நேற்றுடன் (26.03.2013) 13 வருடங்கள் நிறைவு பெற்று விட்டன. இந்த நிலையில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் மீள குடியமர்வினை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதி அழியும்



பிரம்மதத்தன் காசியை ஆண்டபோது போதிசத்துவர் காசிக்கு அருகே இருந்த ஒரு கிராமத்தில் ஒரு பணக்காரனின் மகனாகப் பிறந்தார். அவர் நன்கு படித்துப் பெரியவன் ஆனதும் அவரது பெற்றோர் காசி நகரத்தில்உள்ள ஒருவரது மகளான சுஜாதாவைத் திருமணம் செய்து வைத்தார்கள். சுஜாதா மிக மிக அழகானவள். நல்ல புத்திசாலியும் கூட. நற்குணங்கள் படைத்தவள். அவள் தன் கணவன் வீட்டிற்கு வந்து இல்வாழ்க்கை நடத்தி யாவருக்கும் பணிபுரிந்து வந்தாள்.


ஒரு நாள் சுஜாதா தன் கணவரிடம் ''நானும் இங்கு வந்து வெகுகாலம் ஆகிவிட்டது. ஒருமுறை காசிக்குப் போய் என் தாய் தந்தையரைப் பார்த்து விட்டு வர எண்ணுகிறேன். நீங்களும் என்னோடு வந்தால் நன்றாக இருக்கும்'' எனக் கூறினாள்.

போதிசத்துவரும் ''ஆகா, அப்படியே செய்யலாம். உன் தாய் தந்தையரை நானும் ஒரு முறை பார்த்தது போலவும் இருக்கும்'' எனக் கூறித் தன் மனைவியோடு மறுநாள் வண்டி கட்டிக் கொண்டு காசிக்குக் கிளம்பினார். போதிசத்துவர் முன் அமர்ந்து வண்டியை ஓட்ட சுஜாதா வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டு இயற்கைக் காட்சிகளை ரசித்தவாறே இருந்தாள்.

வண்டியும் காசி நகர எல்லையை வந்தடைந்தது. அங்கே ஒரு குளத்தருகே போதிசத்துவர் வண்டியை நிறுத்தினார். சுஜாதாவும் கீழே இறங்கி தான் கட்டி எடுத்து வந்த கட்டுச் சாத மூடையை எடுத்துக் கொண்டு போதிசத்துவருடன் குளக்கரையில் போய் அமர்ந்தாள். இருவரும் உணவை உண்டு நீர் பருகிச் சற்று இளைப்பாறி விட்டு பின்னர் மீண்டும் வண்டியில் அமர்ந்து காசி நகருக்குள் செல்லலாயினர். அப்போது காசி மன்னன் பிரம்மதத்தன் யானை மீது அமர்ந்து பவனி வந்து கொண்டிருந்தான்.

மக்கள் கூட்டமாகக் கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். சுஜாதாவும் தானும் சற்று வேடிக்கை பார்த்து விட்டு வருவதாக தன் கணவரிடம் கூறி அவரது அனுமதி பெற்று கீழே இறங்கி ஒரு ஓரமாக நின்றாள். வண்டியில் சுஜாதா இருந்த போதே காசி மன்னன் சுஜாதாவைப் பார்த்து அவளது அழகில் மயங்கி விட்டான். அவளை அடைந்து விடுவது என எண்ணிய போது அவள் விவாகமானவள் என்றும் அவளது கணவன் வண்டியிலுள்ள போதிசத்துவர் என்பதும் அவனுக்குத் தெரிந்து விட்டது.

போதிசத்துவரை எப்படியாவது ஒழித்து விட்டால் அந்த அழகிய பெண் தன்னோடு இருந்து விடுவாள் என அவன் எண்ணி அதற்கு என்ன வழி என்று யோசிக்கலானான். சட்டென ஒரு வழி அவனுக்குப் புலப்பட்டது. அவன் தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு வேலையாளை அழைத்து தன் தலையிலிருந்து கிரீடத்தை எடுத்து அவனிடம் கொடுத்து ''நீ இதை அதோ தெரியும்



வண்டியில் யாருக்கும் தெரியாமல் வைத்து விட்டு வா'' எனக் கூறி போதிசத்துவரின் வண்டியைக் காட்டி அனுப்பினான்.

(தொடரும்.........).

# அதோ அதோ பறவைக் கப்பல்



அதோ அதோ பறவைக் கப்பல்
ஆகாயத்தில் செல்லுது
அதிசயமாய் எல்லோரையும்
அங்கே பார்க்கச் சொல்லுது
வெள்ளைப் பறவை போல அதுவும்
மேலே நமக்குத் தோன்றுது
மேகத்துக்குள் புகுந்து புகுந்து
வேடிக்கையும் காட்டுது
மனிதர் தம்மைத் தூக்கிக் கொண்டு
வானத்திலே பறக்குது
வயிற்றுக்குள்ளே பத்திரமாய்
வைத்துக்கொண்டே செல்லுது
காடு மேடு கடல்களெல்லாம்
கடந்து கடந்து செல்லுது
கண்ணை மூடித் திறப்பதற்குள்
காத தூரம் தாண்டுது

சி.ஹரிஹரன், தரம் - 4 இ,
யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.




# சுவாமி விபுலானந்தர்

★ இவர் மட்டக்களப்பில் காரைதீவு என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார்.
★ இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி, தாயின் பெயர் கண்ணம்மை.
★ பெற்றோர் ''மயில்வாகனன்'' என்று பெயரிட்டு அன்பாக அழைத்தனர்.
★ தனது ஆரம்பக் கல்வியை குஞ்சித்தம்பி ஆசிரியர் மற்றும் வசந்தராசப்பிள்ளை ஆகியோரிடமும் கற்றார்.
★ இவர் ''நன்னூல்'', ''சூடாமணி நிகண்டு'' ஆகியவற்றையும் வைத்திய லிங்க தேசிகரிடம் கற்றுத் தேர்ந்தார்.



★ மதுரை தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து ''அப்பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது இலங்கையர்'' என்ற பெருமையையும் இலங்கைக்குத் தேடிக் கொடுத்தார்.
★ கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்றபோது பதினாறாவது வயதில் தேர்வில் முதன்மை நிலைக்கு உயர்த்தப்பட்டார்.
★ அவருடைய இடைவிடாத முயற்சியினால் ஆங்கில ஆசிரியரானார்.
★ புனித மைக்கல் கல்லூரி, கல்முனை கத்தோலிக்கத் திருச்சபைப் பாடசாலை, யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரிய சேவையில் ஈடுபட்டார்.
★ இலண்டன் பல்கலைக்கழகத்தில் ''விஞ்ஞான மாணிப்'' பட்டதாரியாக உயர்நிலையடைந்தார்.
★ மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 1920 ஆம் ஆண்டு அதிபராகக் கடமை புரிந்தார்.
★ சென்னை ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தில் 1922 ஆம் ஆண்டு துறவியாக இணைத்துக் கொண்டார்.
★ இவருக்கு ''பிரபோதசைதன்னியர்'' என்ற பிரம்மச்சரிய நாமம் வழங்கப்பட்டது.
★ 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சுவாமி சிவானந்தா அவர்களால் ''விபுலானந்தர்'' என்னும் பெயர் இவருக்குச் சூட்டப்பட்டது.
★ ஆங்கிலேயர் ஆட்சி வலுவடைந்த காலப் பகுதியில் சைவ சமயம் வலுவற்றுக் காணப்பட்டது. இந்துத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ''இந்து சமயக் கல்வியை'' கற்றுக் கொடுக்க வாஞ்சை கொண்டார்.
★ மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி என்பன இவருடைய முயற்சியால் அமைக்கப்பட்ட பாடசாலைகளாகும்.
★ விவேகானந்தன், கலைமகள், இராமகிருஷ்ண விஜயம் போன்ற சஞ்சிகைகளில் கட்டுரைகளை எழுதினார்.
★ பல சமய மாநாடுகளுக்கு கருத்துரை வழங்கினார்.
★ சமயபாடத்திட்டம், சங்கீத பாடத்திட்டம் ஆகியவற்றுக்கு வடிவமைப்புச் செய்து கொடுத்தார்.
★ கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார், இரட்டை மாலை, குமரவேல் நவமணிமாலை, மகாலட்சுமி தோத்திரம், ஈசன் உவர்க்கும் இன்மலர் என்ற நூல்களை எழுதி வெளியிட்டார்.
★ 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம், ஆறாம் திகதிகளில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த இவருடைய நூலாகிய ''யாழ் நூல்'' அரங்கேற்றம் செய்யப்பட்டது.
★ இவர் 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி இறைவனுடன் இணைந்தார்.
★ இவருடைய உடல் சிவானந்தா வித்தியாலயத்தில் அமைந்த கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.
★ ஈழத்தில் சமயத்தை வளர்த்த பெரியார்களான சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுக நாவலர்,வரிசையில் சுவாமி விபுலானந்தரும் குறிப்பிடத்தக்கவராக, இந்து மக்களால் போற்றப்படத்தக்கவராக, வரலாற்றில் எல்லோராலும் நினைவு கூரப்படுகின்றார்.

செ.தனுசிகா, தரம்-5,
கருணை இல்லம், உரும்பிராய்.

## உலகில் ஒரு நிமிடத்தில்

♥ 03 மணமக்கள் விவகாரத்துச் செய்கின்றார்கள்.
♥ 34 திருமணங்கள் நடக்கின்றன.
♥ 38 புயல்கள் உருவாகின்றன.
♥ 68 கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
♥ 114 குழந்தைகள் பிறக்கின்றன.
♥ 850 மைல் தூரம் தன்னைத் தானே பூமி சுற்றிக் கொள்கின்றது.
♥ 4600 பாதணிகள் தைக்கப்படுகின்றன.
♥ 14000 கொன் உணவுப் பொருள்கள் உண்ணப்படுகின்றன.
♥ 14000 கன அடி மழை பெய்கின்றது.
♥ 600000சிகரெட் புகைக்கப்படுகின்றது.

ச.லக்சிகா, தரம்-9ஏ,
சங்கானை சிவப்பிரகாச
மகாவித்தியாலயம்.

## பொது அறிவு

- இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? **பாக்குநீரிணை**
- இலங்கையின் நிலப்பரப்பு எத்தனை சதுர கிலோ மீற்றர்? **65,610**
- 2007 ஆம் ஆண்டில் சார்க் மாநாடு எங்கு நடைபெற்றது? **புதுடில்லி**
- மாலைதீவின் தலைநகர் எது? மாலே
- இந்தியாவின் தலை நகர் எது? **புதுடில்லி**
- பச்சை நிறத்தில் ஒளிரும் கோள் எது? **யுரேனஸ்**
- இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை எத்தனை? **9**
- வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்? **மார்க்கோனி**
- மின்குமிழைக் கண்டு பிடித்தவர் யார்? **தோமஸ் அல்வா எடிசன்**
- சுனாமி இலங்கையை எப்போது தாக்கியது? **2004.12.26**

க.கீர்த்தனன், தரம்-10,
யா/கைதடி விக்கினேஸ்வரா
வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணில் புதிய உதயம்...!



## நவீன் செரமிக்
(பிரைவேட்) லிமிட்டட்

For the Largest Selections of Tiles & Sanitaryware in Sri Lanka!

யாழ் மண்ணின் பெருமையும், யாழ் மக்களின்
மகிமையும் நாம் நன்கு அறிந்தவர்கள்.
யாழ் மண்ணில் கட்டிட நிர்மாண பணிகளுக்கு
மிகச்சிறந்த டைல்ஸ்கள்,
குளியலறை பொருட்களை வழங்கியதன் மூலம்,
யாழ் மக்களிடம் நற்பெயரை பெற்ற நாம்
இன்று முதல்
புதுப்பொலிவுடன் தலைநிமிர்ந்து வருகின்றோம்,

எமது ஸ்தாபனத்தின் ஏகவிநியோக உரிமையாளராக
உதயாஸ் செரமிக் நிறுவனத்தினை நியமித்து,
எமது புதிய காட்சியறையினை
இன்று புதன்கிழமை (27-03-2013)
காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள
சுபநேரத்தில் மங்களகரமாக திறந்து வைக்கின்றோம்.

உங்கள் இல்லத்தினை அழகாக நிர்மாணிக்க எங்கள் காட்சியறைக்கு
விஜயம் செய்து, டைல்கள், குளியலறை உபகரணங்கள் அனைத்தினையும்,
தரமான விலையில் பெற்றிடுங்கள். வேறுபட்ட நிறங்களில் ஏராளமான தெரிவுகள்,
உங்கள் விருப்பத்தை பூரணமாக திருப்தியாக்கும் விதத்தில்
உங்கள் தெரிவுக்காக காத்திருக்கின்றன....

## உதயாஸ் செரமிக்

# 125, ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2219789, 072 9715385

(34749)




100cc உந்துருளிகளுக்கு 2 வருடங்கள் அல்லது 30,000 கீமீ வரை உத்தரவாதம்.
125cc, 150cc, 225cc உந்துருளிகளுக்கு 3 வருடங்கள் அல்லது 40,000 கீமீ வரை உத்தரவாதம்.

இச்சலுகை பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரையே செல்லுபடியாகும்.
இச்சலுகை ப்ளஷர் ஸ்கூட்டர்களுக்கு ஒவ்வாது.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

## R.G.ட்ரேடர்ஸ் உந்துருளிகளுக்கான அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்

யாழ்ப்பாணம் – இல: 285, 287 ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் –ப்லஷர் காட்சியறை இல: 291,
ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667 • நெல்லியடி – இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2262585
சாவகச்சேரி – இல: 5A, கண்டி வீதி, சாவகச்சேரி: 0212270185 • நாவற்குழி – இல: 50, கண்டி வீதி, நாவற்குழி சந்தி, நாவற்குழி
சுன்னாகம் – 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241985 • கிளிநொச்சி – கரடிபோக்கு சந்தி, A9 வீதி,
கிளிநொச்சி: 021 2280185 • பளை – இல: A9 வீதி, பளை: 0777 340056

Abans

(C/7204)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகக் கற்களால் அவதியா? எலுமிச்சை இருக்கக் கவலை எதற்கு?





இன்றைய காலத்தில் பெரும்பாலும் அனைவரும் பெரிதும் பாதிக்கப்படுவது சிறுநீரகக் கல் நோயினால் ஆகும். இந்தப் பிரச்சினைக்கு 20 வயது இளைஞர்கள் கூட ஆளாகி அவதிப்படுகின்றனர். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் பெரும் காரணமாக இருப்பது உடலுக்குத் தேவையான தண்ணீரை பருகாமை, உப்புகள் அதிகம் உள்ள உணவுகளைச் உண்பது, கல்சியம் சத்துக்கள் அளவுக்கு அதிகமாக இருப்பது, சிறுநீர் பாதையில் கிருமித் தொற்று ஏற்பட்டு, அந்த கிருமி சிறுநீர்க் குழாயை அரித்து புண் ஆக்கி, குழிகளை உண்டாக்குவதோடு, அந்த வழியாக சிறுநீரின் மூலம் வெளியேறும் உப்புகள் சரியாக வெளியேறாமல் தங்கி விடுதல் போன்றவற்றால் ஏற்படும்.

இந்தப் பிரச்சினையை இல்லாமல் செய்ய ஒரே வழி எலுமிச்சைச் சாற்றைப் பருகுவது தான். இது ஏதோ ஒரு மூட நம்பிக்கை அல்ல. ஆராய்ச்சி மூலம் நிரூபிக் கப்பட்டுள்ளது. பொதுவாக பழச்சாறுகளை அதிகமாக பருகினால் உடலில் உப்புகள் சேருவதைத் தடுக்கலாம். அதிலும் சித்திரிக் அமிலம் அதிகம் இருக்கும் பழங்களைச் சாப்பிட்டால் நல்லது.

அந்த சித்திரிக் அமிலம் எலுமிச்சையிலேயே அதிகமாக உள்ளது. அதிலும் இந்த எலுமிச்சைச் சாறு பிழிந்து தண்ணீரில் கலந்து, தினமும் ஒரு வேளை பருக வேண்டும். இதனால் சிறுநீரகத்தில் உருவாகும் கல்லானது ஒன்றிலிருந்து 0.13 வீதமாகக் குறைகிறது என்றும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிறுநீரகக் கல்லின் வகை மற்றும் அறிகுறிகள்

**கல்சியம் வகைக் கற்கள்:**
அந்தக் கற்கள் சிறுநீரகத்தில் இருந்து சிறுநீர் வெளியேறும்போது நகர்ந்து முதுகு வலி, சிறுநீரில் இரத்தம், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

**யூரிக் அமில வகைக் கற்கள்:**
இந்தப் பொருள் சிறுநீரில் இருக்கும் பொருள் தான். ஆனால் இது அளவுக்கு அதிகமாகச் சேரும் போது, அந்தப் பொருள் முழுவதுமாக வெளியேறாமல், உடலிலேயே தங்கிவிடும். இது அதிக புரோட்டீன் உணவுகளை உண்பவருக்கு ஏற்படும். இதனால் வயிற்றில் வலி ஏற்படும்.

**மான் கொம்புக் கற்கள்:**
இது மானின் கொம்பு போன்று இருக்கும். மேலும் உடலில் கிறிஸ்டைன் என்ற வகை அரிய கற்களும் சிறுநீரகத்தில் உருவாகின்றன.

ஏற்கனவே கற்கள் இருந்து அதனால் எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தால், அதனை சாதாரணமாக விடாமல் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. அதே சமயம் எலுமிச்சைச் சாற்றையும் தொடர்ந்து பருக வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

சித்திரிக் அமிலம் எலுமிச் சையிலேயே அதிகமாக உள்ளது. அதிலும் இந்த எலுமிச்சைச் சாறு பிழிந்து தண்ணீரில் கலந்து, தினமும் ஒரு வேளை பருக வேண்டும். இதனால் சிறுநீரகத்தில் உருவாகும் கல்லானது ஒன்றிலிருந்து 0.13 வீதமாகக் குறைகிறது என்றும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

## நீரிழிவு நோயாளிகளின் முதுகு வலிக்கான உணவு முறைகள்

நீரிழிவு நோயாளிகளின் முதுகெலும்பு பலவீனமடைவதால் முதுகு வலி ஏற்படுகிறது. பொதுவாக அனைவருக்கும் தங்கள் உயரத்திற்கேற்ப எடை தான் இருகக வேண்டும். இதனால் எண்ணெய் உணவுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பது நல்லது. கொழுப்பு மிகுந்த உணவுகளைச் சாப்பிடக் கூடாது.

முதுகு வலி ஏற்படாமல் தடுக்க உணவில் பச்சைக் காய்கறி, பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். தானிய வகைகளை அதிகமாகச் சாப்பிட லாம். கல்சியம் அதிகம் உள்ள உணவை சாப்பிட்டால் முதுகு வலி எளிதில் தாக்காது.

நீரிழிவு நோயாளிகள் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடித்து வர வேண்டும். தினமும் 3 லீற்றர் தண்ணீர் பருக வேண்டும். உடலில் தேவையான தண்ணீர் இருந்தால் முதுகெலும்பு எந்தவித தடங்கலும் இல்லாமல் வளையும்.

இல்லாவிட்டால் அது பாதிக்கப்படும் நிலை ஏற்படும். முதுகு வலி உள்ளவர்கள் கல்சியம் மிகுந்த அசைவ உணவுகளைச் சாப்பிடலாம்.



## மார்புச் சளி, பல்வலியைக் குணமாக்கும் சிறந்த மருந்து அறுகம்புல்

அறுகம்புல் சிறந்த மருத்துவ குணமுடையது. அந்தவகையில் நரம்புத் தளர்ச்சியையும் உடல் தளர்ச்சியையும் நீங்கும். மலச்சிக்கல், தூக்கமின்மை குணமாகும். வயிற்றின் அமிலத் தன்மை குறையும்.

உடலில் தேங்கியுள்ள கழிவுகள், விஷத்தன்மை வெளியேறும். நீரிழிவு, தொழுநோய், கரப்பான், சொறி, சிரங்கு ஆகியவை குணமாகும்.

பல் சம்பந்தப்பட்ட நோய்கள், பல் ஈறில் இருந்து ரத்தம் கசிதல் வாய் நாற்றம் போன்றவை விலகும். உடலுக்கு அழகும், வசீகரமும் தரும். உடல் வெப்பம் தணியும்.

தினமும் தேநீருக்குப் பதிலாக அறுகம்புல் சாற்றுடன் தண்ணீர் அல்லது தேன் அல்லது இளநீர் கலந்து சாப்பிடுங்கள்.

அறுகம்புல் வேரை நிழலில் உலர்த்தி, இடித்து, கஷாயம் செய்து கொள்ளவும். அதனுடன் பால், சர்க்கரை சேர்த்து, தேநீர்போல சாப்பிட, மார்பு வலி நீங்கும், உடல் இளைக்க உதவும், உறக்கம் தரும்.

பல் மற்றும் ஈறு நோய்கள் நீங்கும், வயிற்றுப் புண், கர்ப்பப்பை கோளாறுகள், மாதவிலக்கு தொல்லைகள் நீங்கும். மசாஜ் செய்து விட்டதைப் போல, உடம்பு உற்சாகமாக இருக்கும்.

அறுகம்புல்லையும், ஆல இலையையும் சமமாக எடுத்து அரைத்து உச்சந்தலையில் பற்றுப் போட்டால், தலைவலி குணமாகும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org